REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 4 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 209 | Monday 04, September, 2023 | 16பக்கங்கள் | 50/-

**உலக 'A' தர மத்திய வங்கி ஆளுநர்;**

## 21 பேரடங்கிய பட்டியலில் Dr. நந்தலால் உள்ளடக்கம்



2023 ஆம் ஆண்டுக்கான உலக 'ஏ' தர மத்திய வங்கி ஆளுநர்கள் 21 பேர் தர பட்டியலில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. நியூயோர்க்கை தளமாகக் கொண்ட

06

**வட மாகாண மக்கள் பிரதிநிதிகள் மௌனம் களைய வேண்டும்;**

## தமிழக மீனவர்களது தொடர்ச்சியான அத்துமீறல், சட்டவிரோத மீன்பிடி

**ஸ்டாலினின் கவனத்திற்கு கொண்டுவர டக்ளஸ் அழைப்பு**



இந்திய இழுவைப்படகுகள் மற்றும் இந்திய மீனவர்களின் சட்டவிரோத கடற்றொழில்களால் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக வடமாகாண தமிழ் பேசும் பிரதிநிதிகள் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உட்பட அனைத்து தரப்பினரின் கவனத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென

06

## ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி

**நியூயோர்க் செல்லவுள்ளதாக தகவல்**



அமெரிக்காவில் இம்மாத நடுப்பகுதியில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள பேச்சாளர்

06

## எரிபொருளுக்கான QR முறை புதிய தொழில்நுட்பத்துடன்

**மேம்படுத்தப்பட்ட தரவுகளுடன் விரைவில்**



தேசிய எரிபொருள் அனுமதி அட்டை 'QR' முறை எதிர்காலத்தில் மேம்பட்ட நுட்பங்களுடன் மேம்படுத்தப்பட்டு தரவு சேகரிப்பு மற்றும் தரவு பகுப்பாய்வுக்கான கருவியாக செயல்படுத்தப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த வருடம் QR முறையை அறிமுகப்படுத்தியதன் நோக்கம் அப்போது நிலவிய எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக இருக்கும் வளங்களை முகாமைத்துவம் செய்து விநியோக திட்டமாக

06

**மஹரகம பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கத்துக்குரிய**

# 11 கிராமிய வங்கிகளில் 110 கோடி ரூபா மாயம்

**இந்த நிதி மோசடிக்கு எதிராக பொலிஸில் முறையிடச் சென்றாலும் முறைப்பாட்டை ஏற்க மறுக்கும் பொலிஸ் நிலைய அதிகாரிகள்**

**33,000 வைப்பாளர்கள் தமது பணத்தை மீளப்பெறமுடியாத நிலையில்**

**வைப்பாளர்கள் எவருக்கும் மருத்துவ தேவைக்கோ, வீடு கட்டவோ அல்லது வேறு எந்தத் தேவைகளுக்கோ பணம் பெற முடியாத நிலை**

மஹரகம பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான கிராமிய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட சுமார் 110 கோடி ரூபா பணம் காணமல் போயுள்ளதாக வைப்பாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மஹரகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குரிய பதினொரு கிராமிய வங்கிகளில் முப்பத்து மூவாயிரம் வைப்பாளர்கள் 110 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை வைப்புச் செய்துள்ளனர்.தாம் வைப்புத் தொகையை மீளப்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட வைப்பாளர்கள் மஹரகம பிரதேசத்தில் உள்ள விகாரையொன்றில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினர். இதன் போதே இந்த

06

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நாட்டை கட்டியெழுப்பக் கூடிய வேட்பாளருக்கன்றி**

## சலுகைகளுக்காக எனது ஆதரவை வேறொருவருக்கு வழங்க மாட்டேன்



நாட்டைக் கவிழ்க்க தயாராகும் நபர்களிடம் வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகை மற்றும் டொலர் வருமானத்திற்கும் செலவிற்கும் இடையிலான இடைவெளியை தீர்ப்பது தொடர்பான திட்டங்கள் உள்ளனவா என நாட்டிற்கு தெரிவிக்க வேண்டும் என

போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஹோமாகம தொகுதி செயற்பாட்டு உறுப்பினர்களின் சந்திப்பு, கட்சி கிளையை அமைத்தல் மற்றும் அங்கத்தவர் மேம்பாட்டு திட்டம் என்பன போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஹோமாகமவில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த

06



**03** திடீர் சுகவீனம் காரணமாக **ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதி**

**02 வருடகாலமாக வழங்கப்படாதிருந்த**

## பல்நோக்கு அபிவிருத்தி அதிகாரிகள் 886 பேருக்கு நிரந்தர நியமனம்



**ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைப்பு**

கிழக்கு மாகாணத்தில் 2 வருடகாலமாக பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பாடாதிருந்த நிரந்தர நியமனமானது, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 886 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ளவர்களுக்கு கடந்த காலத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால் பல்நோக்கு

06

**பெங்களூரில் கைது செய்யப்பட்ட**

## இலங்கையர்களுடன் தொடர்புகளை பேணிய மற்றுமொருவர் கைது!



இந்தியாவின் பெங்களூரில் அண்மையில் கைது செய்யப்பட்ட இலங்கையர்களுடன் தொடர்புடைய மற்றுமொரு நபரை இந்திய மத்திய குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர். பெங்களூர், டோம்லூர் பகுதியில் வசிக்கும் குமார் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி

06

## A/L பரீட்சை பெறுபேறுகள் இரண்டொரு தினங்களில்

**கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு**



உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார். இவ்வருடத்திற்கான உயர்தரப் பரீட்சை திகதியை மாற்றுவது குறித்து எவ்வித எதிர்ப்பார்ப்பும் இல்லை எனவும் அமைச்சர்

06

## அமெரிக்க ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் வகுப்புக்கள் ஆரம்பம்



வட அமெரிக்கா, டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் வகுப்புகள் முறையாக ஆரம்பமாகியுள்ளன.

இந்த தமிழ் வகுப்புக்கள் (28.08.2023) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஐ.சி. சி.ஆர் மூலமாக கலாநிதி

06

## இலங்கை மீதான சீன ஆதிக்கம் இந்திய உறவை பாதிக்கும்

**தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் வீ.ஆனந்த சங்கரி கருத்து**



இலங்கை மீது சீனா வைத்திருக்கும் ஆதிக்கம் அயல் நாடான இந்தியாவின் உறவை பாதிக்கும் என தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை காரணமாக வைத்து சீனா உதவி என்ற போர்வையில் கடன்களை

06

## பாரதியாரின் கொள்ளுப்பேரன் இன்று மட்டக்களப்பில்

**விபுலானந்த அழகியற் கற்கை நிறுவன நிகழ்வில் கலந்து கொள்வார்**



மஹாகவி பாரதியாருடைய கொள்ளுப்பேரன் கலாநிதி இராஜ்குமார் பாரதி இன்றைய தினம் (04) மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு வருகை தரவுள்ளார். எதிர்வரும் 11ஆந்திகதி பாரதியாரின் நினைவு நாளாகும்.

நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி

06



**03** கச்சதீவு உண்மையில் எந்த நாட்டுக்கு சொந்தம்? தெளிவாக ஆராய வேண்டும்




**03** விசேட வைத்தியர்களது சேவையை 63 வயது வரை நீடிக்க சட்டமா அதிபர் மனு



**03** பாரிய மரம் விழுந்ததால் புறக்கோட்டையில் போக்குவரத்து பாதிப்பு

**நாட்டின் பல பகுதிகளில் சீரற்ற காலநிலை;**

## அடைமழையால் கங்கைகளின் நீர் மட்டம் திடீரென உயர்வு



**மண்சரிவு, வெள்ளத்தினால் மூவர் உயிரிழப்பு**

**4 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்**

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழையினால் இதுவரை மூவர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ

06

**உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பில்**

## குண்டுதாரிகளுக்கு ஆதரவான குழுக்களை பெயரிடவும்

**அரசிடம் பேராயர் மல்கம் ரஞ்சித் கோரிக்கை**



உயிர்த்த ஞாயிறு குண்டுதாரிகளுக்கு ஆதரவான குழுவை பெயரிடுமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

06

**கோட்டாவின் இல்லம் முன்பாக வன்முறை;**

## இராணுவ பஸ்ஸுக்கு தீ வைத்த பிரதான நபர் கைது

**ஒன்றரை வருடங்களுக்கு பிறகு கைதானார்**



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானை இல்லத்துக்கு அருகில் கடந்த வருடம் இடம்பெற்ற வன்முறை

06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



### கொழும்பு பெரிய பள்ளிவாசலில்

## பொலிஸ் திணைக்கள 157ஆவது வருட பூர்த்தி விழா நிகழ்வு





**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் 157வது வருட பூர்த்தியை முன்னிட்டு விசேட இஸ்லாமிய சமய நிகழ்வு கொழும்பு டாம் வீதி பொலிஸ் நிலையமும் கொழும்பு பெரிய பள்ளிவாசலும் இணைந்து நேற்றுக் காலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் தலைவர் தாஹிர் றசீன் தலைமையில் நடைபெற்று.

பள்ளிவாசலின் செயலாளர் பாரிஸ் பாஹிம், பொருளாளர் பஸால் மொஹிடீன், முன்னாள் தலைவர் தௌபீக் சுபைர் மற்றும் நிருவாகிகளின் பங்களிப்புடன் இடம்பெற்ற நிகழ்வில் டாம் வீதி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆராச்சி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளும் பெரிய பள்ளிவாசலின் அறபுக் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பள்ளிவாசலின் தலைவர் வரவேற்புரையையும் பொலிஸ் பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆராச்சி பொலிஸ் திணைக்களத்தின் 157வது தின உரையையும் நிகழ்த்தினார். பள்ளிவாசலின் பிரதம இமாம் றிஸ்வான் ஹாபிஸ் விசேட துஆப் பிரார்த்தனையை மேற் கொண்டார். நன்றியுரையை பொருளாளர் பஸால் மொஹிடீன் வழங்கினார்.

## வெலிகம வீடொன்றில் திடீர் தீ; பொருட்கள் எரிந்து நாசம்



**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம கல்பொக்கை மொஹமட் லேனில் அமைந்துள்ள வீடொன்று கடந்த வியாழக்கிழமை (31) மாலை திடீரென தீப்பிடித்துக் கொண்டதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மாடிகள் கொண்ட அவ் வீட்டின் கீழ் மாடியே இவ்வாறு தீப்பிடித்துக் கொண்டது. அவ் வீட்டில் வீட்டு உரிமையாளர்கள் எவரும் இருந்திருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் மேல் மாடியில் வசிப்போரும், வீட்டுக்கு அருகாமையில் வசிப்போரும் தீப்பிடித்திருப்பதைக் கண்டு வெலிகமை பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்து அவர்களின் உதவியுடன் பிரதேச வாசிகளும் சேர்ந்து தீயை அணைத்தனர்.

வீட்டிலிருந்த மின்சார உபகரணங்கள், தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, மற்றும் உபகரணங்கள் பலதும் பலத்த சேதமடைந்ததுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீப்பிடித்தமைக்கான காரணங்கள் இதுவரை உறுதியாக கண்டறியப் படவில்லை எனவும் , இது விடயமாக வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடமத்திய மாகாண அபிவிருத்தி திட்டங்களுக்கு அவுஸ்திரேலிய அரசு உதவ முன்வருகை

### உயர்ஸ்தானிகர் ஆளுநர் ஹேரத்துடன் சந்திப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



வடமத்திய மாகாண அபிவிருத்தி திட்டங்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பங்களிப்பு தொடர்பில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டெபன் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் ஆகியோர்களுக்கிடையிலான கலந்துரையாடல் கடந்த (01) ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் போது அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் வாழும் பெண்கள் மற்றும் ஊனமுற்ற நபர்களுக்கு நிலையான தொழிலை உருவாக்கி பொருளாதார வாய்ப்புக்களை விரிவுபடுத்தி அதில் வருமானம் மற்றும் வணிகத்துறையை மேம்படுத்துதல், உதவி வழங்குதல், சந்தை அபிவிருத்தி உதவிகளின் கீழ் சுற்றுலாத் தொழிலை விருத்தி செய்து அபிவிருத்தி உதவி திட்டத்தின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் அதனைச்சார்ந்த பிரிவுகளுக்கு நிலையான வளர்ச்சியை பயன்படுத்தி நன்னீர், இறால் வளர்ப்பு மூலம் நன்னீர் மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் மீன் பிடித்தலை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கவும் சுயவிவரத்தை மேம்படுத்தவும் தணிக்கை செயல்படுத்துதல் மற்றும் வரி வசூல் ஆகியவற்றை மேம்படுத்துதல், அநுராதபுரம் மா நகர சபையுடன் இணைந்து செயற்படுவதற்கான பொறிமுறையை அமைத்தல் என்பன கலந்துரையாடப்பட்டதுடன் அரச தொழில்துறையை விருத்தி செய்தல் பொலன்னறுவை மாவட்ட பொது மருத்துவமனைகளில் புதிய ஒக்சிஜன் ஆலையை நிறுவுதல்,

தற்போதைய பொருளாதார நெருக்கடியுடன் விளைவாக கர்ப்பிணி பெண்கள் மற்றும் 5 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஊட்டச்சத்து குறைபாட்டை தடுத்தல், ஆபத்தான நபருக்கு பண உதவி, வீட்டு வசதிக்கான நிதி உதவி மற்றும் வைத்திய உதவி வழங்குதல் உள்ளிட்ட மிக நீண்ட கலந்துரையாடல் இதன் போது இடம்பெற்றது.

இதன் போது வடமத்திய மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார, அவுஸ்திரலிய உயர்ஸ்தானிகரின் பாரியார் கிஷ்ரினா ஸ்ரிவன்ஸ், கலாநிதி போல் சேகோனா (செயலாளர் அரசியல் மற்றும் பொருளாதார அறிவியல்) ராமதாரன் சிவசுதன் (சிரேஷ்ட செயற்திட்ட அதிகாரி) மற்றும் கத்யா செனவிரத்ன (அரச இராஜதந்திர அதிகாரி) உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மலேசியாவின் 66ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கொழும்பில்





**ருஸைக் பாரூக், அஷ்ரப் ஏ சமட்**

மலேசியாவின் 66ஆவது தேசிய தின வைபவம் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, மலேசியத் தூதரகத்தின் கொன்சலர் மொஹமட் துமிங் ஆகியோர் இணைந்து ஞாபகார்த்த கேக்கை வெட்டினர்.

மலேசியா உயர்ஸ்தானிகரின் பட்லி ஹிஷாம் ஆடம் அவர்களின் தாயின் மரணம் காரணமாக அஞ்சலி செலுத்தும் வகையில் தேசிய தின நிகழ்வில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மனுஷ நாணயக்கார, நளின் பெர்னாண்டோ, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, சுரேன் ராகவன், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழ் மொழித்தின போட்டி; நெல்லியகம மு. வித்தியாலய மூன்று மாணவர்கள் வெற்றி

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

வடமத்திய மாகாண மட்ட தமிழ் மொழித் தினப் போட்டி நிகழ்வுகள் நேற்று முன்தினம் (02) அ/ இக்கிரிகொல்லாவ அந்நூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்போட்டி நிகழ்ச்சிகளில் கெகிராவ கல்வி வலய அ/நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து கலந்து கொண்ட மாணவர்களில் மூன்று மாணவர்கள் வடமத்திய மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்று அகில இலங்கை மட்டத்தில் நடைபெறும் போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர்.பிரிவு 04 பாவோதல் நிகழ்ச்சியில் எம்.ஏ.ஸைனப் முதலாம் இடத்தையும், பிரிவு 03 பேச்சுப் போட்டியில் எம். ஆர். ரஸீனா முதலாம் இடத்தையும், பிரிவு 05 இலக்கண விமர்சனப் போட்டியில் எம். ஏ.சபீயா முதலாம் இடத்தையும் பெற்று அகில இலங்கை மட்டத்தில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளதுடன், இந்த மாணவர்கள் பாடசாலைக்கு பெருமையை சேர்த்து தந்துள்ளதாகவும் பாடசாலை அதிபர் என்.ஏ.எம். ரமீஸ் தெரிவித்தார்.

# கட்டுக்கெலியாவ முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இரு மாடி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா

### குவைத் நாட்டு தனவந்தரின் உதவிக்கு பாராட்டு





**கெக்கிராவ குறூப் நிருபர்**

மிகிந்தல கனதரா கட்டுக்கெலியாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரண்டு மாடிகளை கொண்ட வகுப்பறை கட்டடம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா சனிக்கிழமை (02) வெகுவிமர்சையாக நடைபெற்றது.

குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாப் எம் புதைர் அவர்களின் வழிகாட்டலில் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம். நூருல்லாஹ்விடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் குவைத் நாட்டின் இஸ்லாமிய கெயார் சொசைட்டி அமைப்பின் ஆலோசனையின்பேரில் குவைத் நாட்டு தனவந்தர் மத்ரசாத் ஹயா அந் நபீசியினால் இக்கட்டடத்திற்கான நிதியுதவி வழங்கப்படுகிறது.

பாடசாலை அதிபர் ஏ.எம். நவ்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் , கௌரவ அதிதிகளாக குவைத் நாட்டு தூதுவரின் பிரதிநிதி பிர்தவுஸ் (நளீமி), அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் நூருல்லா (நளீமி), அந் நிறுவனத்தின் தலைவர் அல் ஹாஜ் பாரி மற்றும் வட மாகாண இணைப்பாளர் எஸ்.எம். ஜாபிர்(அதிபர்) அவர்களும் சிறப்பு அதிதியாக கலன் பிந்துனுவெவ வலயக்கல்வி பணிப்பாளர் சுரஞ்சி அம்முதுவகே மற்றும் தொழிலதிபர் தாரிக் ஆகியோரும் கலந்துகொண்டு அடிக்கல்லினை நட்டி வைத்தனர்.

பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பிரதேச அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், ஊர் மக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





அண்மையில் பிரான்ஸ் நாட்டில் வென்மேரி அறக்கட்டளையின் வாழ்நாள் சாதனையாளர் விருது மூத்த நாடக கலைஞர் கனகரத்தினம் பாலேந்திரா அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவரது ஐம்பது ஆண்டு கால நாடகப் பணியை பாராட்டும் முகமாக இந்த கௌரவம் வழங்கப்பட்டது.



## ஸ்ரீ ல.சு.கட்சி மூத்த உறுப்பினர் ரிசாத்துடன் இணைவு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைப்பாளரும், வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான என்.டி.எம். தாஹிர், அகில இலங்கை மக்கள் காங்கிரசில் சனிக்கிழமை (02) உத்தியோகபூர்மாக இணைந்துகொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் முன்னிலையில் என்.டி.எம்.தாஹிர் தனது ஆதரவாளர்கள் சகிதம் இணைந்துகொண்டார்.

புத்தளம் தில்லையடியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான அமீர் அலி, பிரதி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.எம்.நவவி உட்பட உலமாக்கள், மக்கள் காங்கிரசின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கற்பிட்டி பிரதேச சபை தலைவராகவும், மாகாண சபை உறுப்பினராகவும் இருந்து கடந்த 30 வருடங்களுக்கு மேல் அரசியலில் பயணித்த என்.டி.எம்.தாஹிர், கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுசேர்ந்து களமிறங்கிய தராசு கூட்டணியில் இணைந்து பாராளுமன்ற தேர்தலிலும் போட்டியிட்டதுடன், பட்டியலில் மூன்றாவது இடத்தையும் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 4 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
ஸுப்ஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

### விசேட வைத்தியர்களது சேவையை

## 63 வயது வரை நீடிக்க சட்டமா அதிபர் மனு

### மேன்முறையீட்டு நீதிமன்றுக்கும் அறிவிப்பு

அரச மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள விசேட வைத்தியர்களின் சேவைக்காலத்தை 63 வயது வரை நீடிப்பது தொடர்பான சுற்றறிக்கையை நீதிமன்றில் மனுவொன்றின் ஊடாக முன்வைப்பதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளார்.



60 வயது நிரம்பிய வைத்திய நிபுணர்களுக்கு கட்டாய ஓய்வை வழங்குவதற்கு அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்குமாறு கோரி 176 வைத்திய நிபுணர்கள் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 06

## கச்சதீவு உண்மையில் எந்த நாட்டுக்கு சொந்தம்?

### தெளிவாக ஆராய வேண்டும் என்கிறார் சித்தார்த்தன்

கச்சதீவு இலங்கையிடம் இருக்கிறதா? அல்லது இந்தியாவிற்கு கொடுப்பதா? என்பது தொடர்பில் இரு நாடுகளும் தெளிவாக ஆராய வேண்டும் என தமிழீழ விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.



நேற்றையதினம் (03) அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவர், "தமிழ்நாட்டு மீன்வள அமைச்சர் கச்சதீவை மீட்கவேண்டும் என கூறியுள்ளார். இது குறித்து தங்களது நிலைப்பாடு என்ன?" என வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்ப காலங்களில் இந்தியா வைத்திருந்ததாக பின்னர் இலங்கைக்கு கொடுக்கப்பட்டதாகவும் பல உண்மைகளும் கதைகளும் பேசப்பட்டுக்கொண்டு கொண்டிருக்கின்றன. இது ஒவ்வொரு தடவையும் இலங்கை இந்தியாவிற்கு கொடுப்பதும், இந்தியா இலங்கைக்கு கொடுப்பதுமாக இல்லாமல் ஒரு நிரந்தரமான சரியான முடிவு 06

## மின்சாரம் தாக்கி முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பலி!

நுவரெலியா – சாந்திப்புர பகுதியில் மின்சாரம் தாக்கியதில் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நுவரெலியா சாந்திப்புர பகுதியை சேர்ந்த மைக்கல் எக்கியூலஸ் டீ. சில்வா என்ற 62 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது வீட்டுத்தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த காய்கறிகளை பாதுகாப்பதற்காக இடப்பட்டிருந்த மின்சார கம்பியினூடாக மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக தேசிய மக்கள் சக்தியின் 06

## பந்தகிரிய அநுக்கன் குளத்துக்கு நீரைப்பெற விவசாயிகளுடன் சந்திப்பு

### பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ

ஹம்பாந்தோட்டை பந்தகிரிய குளத்திற்கு நீரை பெற்றுக் கொள்வதற்காக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ விவசாயிகளை சந்திக்க சென்றுள்ளார். 1957ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பந்தகிரி திட்டத்தில் நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரி விவசாயத்தின் கீழ் பயிர் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.




அநுக்கன் குளத்தின் மானாவாரி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு விவசாயத்துக்காக குளத்துக்கு நீர் பெற்றுக் கொடுக்கப்படாமையால் அவர்களின் பயிர்செய்கை பாதிப்படைந்துள்ளது.

ஒருங்கிணைந்த விவசாய அமைப்பு மற்றும் மானாவரி பயிர் செய்கையில் ஈடுபடும் 06

## பாரிய மரம் விழுந்ததால் புறக்கோட்டையில் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு புறக்கோட்டை பிரதான ரயில் நிலையத்திற்கு முன்பாக மேம்பாலத்திற்கு அருகில் நேற்றுக்காலை பாரிய மரமொன்று விழுந்ததில் நேற்று காலை போக்குவரத்து தடைப்பட்டது. கடும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக மரம் வீதி நடுவில் வீழ்ந்துள்ளதோடு புறக்கோட்டையில் இருந்து லேக்ஹவுஸ் மற்றும் லோட்டஸ் வீதிகளுக்கு செல்லும் பாதை மூடப்பட்டது.



நேற்றுக் காலை இந்த மரம் வீதியில் சரிந்து வீழ்ந்திருந்ததோடு பொலிஸாரின் தலையீட்டுடன் மரம் வெட்டி அகற்றப்பட்டது. கொட்டும் மழைக்கு மத்தியில் சிரமத்துடன் மரத்தை அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்ட 06

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதி

திடீர் சுகவீனம் காரணமாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அறிய வருகிறது. உணவு விஷம் காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



அமைச்சர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக் கட்சி தேசிய மாநாடு நேற்று நடைபெற்ற நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தொடர்பில் சந்தேகங்கள் 06

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகக்குழுச் செயலாளர் கலாநிதி இ.ஸ்ரீதரன் தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை (06) மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “இலங்கையில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுமா?” என்னும் தலைப்பில் கொழும்புப் பல்கலைக் கழக பொருளியல் துறை பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.

## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு?



இம்முறை விலை திருத்தத்தில் எரிவாயுவின் விலையில் கணிசமான அதிகரிப்பை எதிர்பார்ப்பதாக லிட்ரோ நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

விலை சூத்திரத்தின் படி, இன்று (04) நள்ளிரவு முதல் லிட்ரோ எரிவாயுவின் விலை திருத்தம் மேற்கொள்ளப்படும் என அதன் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பை கருத்திற்கொண்டு இந்த வருடம் இலங்கையில் எரிவாயு விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படும் என முதித பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். 06

## பொலிஸாரின் தடுப்பினையும் மீறி விகாரைக்கு எதிர்ப்பு; போராட்டம்



பொலிஸாரின் தடுப்பினையும் மீறி திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றையதினம் (03) போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று காலை மட்டக்களப்பு நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்குளம் பகுதியில் இந்த போராட்டம் 06

## கள்ளக் காதலியுடன் தங்கியிருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை மாரடைப்பில் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



அநுராதபுரத்தில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் காதலியுடன் தங்கியிருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவர்.

குறித்த நபர் தனது கள்ளக்காதலியுடன் விடுதிக்கு வந்துள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. அன்று மதியம் ஒரு மணியளவில் அவர் விடுதியில் திடீரென விழுந்திருந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். பிரேத பரிசோதனை அறிக்கையின்படி திடீர் மாரடைப்பு ஏற்பட்டதனால் மரணம் நிகழ்ந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கைது

### காத்தான்குடியில் பொலிஸார் அதிரடி

15,750 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் காத்தான்குடியில் (1) இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம். சியாம் தெரிவித்தார்.காத்தான்குடி ஊர்வீதி மறைக்கார் வேனில் ஐஸ் போதைப் பொருளை விற்பனை செய்து கொண்டிருந்த நிலையில் குறித்த வியாபாரி காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை வஸ்து ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச். எம். சியாம் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் மடக்கி பிடிக்கப்பட்டார். குறித்த வியாபாரியிடம் இருந்து 59,900 ரூபாய் ரொக்க பணமும், இரண்டு கையடக்க தொலைபேசிகள், ஒரு மோட்டார் சைக்கிள் உட்பட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. புதிய காத்தான்குடி ஹொஸ்டல் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட 43 வயது உடைய மேற்படி சந்தேக நபர் நீண்ட நாட்களாக போதை பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.






தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம்
வாய்மையொடு ஐந்துசால் ஊன்றிய தூண்

அன்பு கொள்ளுதல், பழிபுரிந்திட நாணுதல், உலக ஒழுக்கம் போற்றுதல், இரக்கச் செயலாற்றுதல், வாய்மை கடைப்பிடித்தல் ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.

## அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதில் கவனம் அவசியம்!

நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பித்திருக்கின்றது. மேல்மாகாணம் உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக தொடராக மழை பெய்து வருகின்றது. சில பிரதேசங்களின் தாழ்நிலங்களில் மழைநீர் நிரம்பியுள்ளது.

இம்மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் துளிர்விட்டுள்ளது. கடந்த வரட்சிக் காலத்தில் நிலவிய அசௌகரியங்களும் தாக்கங்களும் முடிவுக்கு வந்துவிட்டதாக கருதும் நிலையும் உருவாகியுள்ளது.

நாட்டில் கடும் வரட்சி காலநிலை நிலவிக் கொண்டிருந்த சூழலில், கடந்த வாரம் முதல் மழைவீழ்ச்சி ஆரம்பித்திருப்பதையடுத்தே மக்கள் மத்தியில் இவ்வாறான நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. இம்மழைக் காலநிலையின் பயனாக வரட்சிக் காலநிலை நிலவிய போது மக்களும் ஏனைய உயிரினங்களும் எதிர்கொண்ட அசெயளகரியங்களும் நெருக்கடிகளும் பெரும்பாலும் நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரட்சிக் காலநிலை அந்தளவுக்கு கடுமையாக இருந்தது. இக்காலப்பகுதியில் குளங்கள், நீர்த்தேக்கங்கள், நீரேந்து பிரதேசங்கள், நீர்க்குட்டைகள் என்பவற்றின் தண்ணீர் நாளுக்கு நாள் குறைவடைந்து வந்ததோடு பல குளங்கள் வற்றி வரண்டு போயிருந்தன.

இதன் விளைவாக நாட்டில் ஐம்பதாயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட நெற்செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டன. அது மாத்திரமல்லாமல் ஏனைய உப உணவுப் பயிர்ச்செய்கைகளும் அவ்வாறான அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்திருந்தன.

அதேநேரம் வனாந்தரங்களில் உள்ள வனவிலங்குகளும் நீரின்றி கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தன. அவை தண்ணீருக்காக மனித குடியிருப்புக்களை நாடிவரும் அளவுக்கு நிலைமை காணப்பட்டது. இவ்வாறு வந்த விலங்குகளுக்கு தண்ணீரில் நஞ்சூட்டி அவற்றை வேட்டையாடிய மனிதாபிமானற்ற செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இவை இவ்வாறிருக்க, இவ்வரட்சியினால் தண்ணீர் தேடி அலைந்த பல விலங்குகள் வீதிகளில் வாகனங்களில் மோதுண்டு உயிரிழந்த பரிதாப சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

வனவிலங்குகள் உள்ளிட்ட ஏனைய உயிரினங்கள் இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருந்த சூழலில் மக்களும் குடிநீருக்கான நெருக்கடியை எதிர்கொண்டனர்.

இந்நிலையில், 'தண்ணீரை அத்தியாவசியமற்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டாம்' என்று நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபை வேண்டுகோள் விடுத்திருந்ததோடு, வரட்சி நீடிக்குமாயின் நீர் மின்னுற்பத்தியும் பாதிக்கப்படும் அளவுக்கு நிலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு மின்வெட்டு கூட அமுல்படுத்தக்கூடிய நிலைமையும் உருவாகுமென மின்சார சபை கூறி இருந்தது.

நாட்டில் நிலவிய வரட்சிக் காலநிலை இவ்வாறு பலவித நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் தோற்றுவித்திருந்த சூழலில்தான் மழைக்கால நிலை ஆரம்பித்துள்ளது.

இந்த சூழலில் வளிமண்டவியல் திணைக்களம், 'மழையுடன் கூடிய காலநிலை நிலவும் போது காற்றின் வேகம் அவ்வப்போது அதிகரிக்க முடியும். அத்தோடு இடி, மின்னலும் தீவிரமாகக் காணப்படும். அதனால் அவற்றின் தாக்கங்களைக் தவிர்த்துக் கொள்வதில் மக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த தொடர் மழைவீழ்ச்சியின் விளைவாக மலையகப் பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய கட்டட ஆராயச்சி நிறுவனம் முன்னெச்சரிக்கை விடுத்து இருக்கின்றது.

குறிப்பாக கேகாலை, இரத்தினபுரி, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலுள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கின்றது. வரட்சிக் காலநிலையில் ஏற்பட்டிருந்த தாக்கங்களுக்கு முற்றிலும் வித்தியாசமான அச்சுறுத்தல் மழையுடன் கூடிய காலநிலையில் ஏற்பட்டிருக்கின்றது.

அதாவது இடிமின்னலுடன் மழை பெய்யும் காலநிலை நிலவும் போது திறந்த வெளியில் நடமாடுவதும் விளையாடுவதும், தொழில்களில் ஈடுபடுவதும், நீராடுவதும், பச்சை மரங்களுக்கு கீழே மழைக்கு ஒதுங்குவதும் எவ்விதத்திலும் பாதுகாப்பானதல்ல. இவை தொடர்பில் கவனயீனமாகவோ அசிரத்தையாகவோ நடந்து கொள்ளக்கூடாது. அவை ஆபத்துக்க்களைத் தேடித்தரக் கூடியவை என்பதை மறந்து விடலாகாது.

ஆகவே மழையுடன் கூடிய காலநிலை நிலவும் தற்போதைய சூழலில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்வது இன்றியமையாதது. இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இதன் நிமித்தம் வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் எனபன விடுத்துள்ள அறிவுறுத்தல்களை கருத்தில் கொள்ள வேண்டும். அப்போது மழைக் காலநிலையில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# வடக்கின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த ஊக்குவிக்கும் வகையில் யாழ்நகரில் கண்காட்சி

வடமாகாண மக்களின் கைத்தொழில் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் சந்தை வாய்ப்புகளை உருவாக்கி உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை என்பவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் கண்காட்சியொன்று கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது.

முதல்நாள் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இலங்கையிலுள்ள 20 தொழில் நிறுவனங்களின் 300 இற்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் இங்கு அமையப் பெற்றிருந்தன. புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பம் என்பவற்றை இக் கண்காட்சியின் போது காணக்கூடியதாக இருந்தது.

(எம்.எம்.ஜெஸ்மின்)





# சிட்னியில் தமிழ் எழுத்தாளர் விழா; எழுத்தாளர் தாமரைச்செல்வி கௌரவிப்பு

சிட்னியில் எதிர்வரும் 10 ஆம் திகதி '2023 தமிழ் எழுத்தாளர் விழாவில்' இலக்கியப் படைப்பாளி தாமரைச்செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பைப் பாராட்டும், கௌரவிப்பும் நடைபெறவிருக்கின்றன.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் தூங்காபி (Toongabbie) சமூக மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்களின் நூல்களின் கண்காட்சி, மலையகம்_ 200 கருத்தரங்கு, வாசிப்பு அனுபவப்பகிர்வு முதலான நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. அத்துடன் எழுத்தாற்றல் மிக்க மணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

2023 தமிழ் எழுத்தாளர் விழாவின் காலை அரங்கில் வரவேற்புரையை கலாநிதி கார்த்திகா கணேசர் நிகழ்த்துவார். அதன்பின் கலாநிதி சந்திரிகா சுப்ரமணியன் மேயர் வரவேற்று உரையை ஆற்றுவார். அதன்பின் இளம் எழுத்தாளர்களுக்கான சான்றிதழ்கள் பிரதம அதியான கம்பர்லாந்து மேயரால் வழங்கப்படும்.

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் இலக்கியப்படைப்பாளி தாமரைச்செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பை பாராட்டி கலாநிதி சந்திரிக்கா சுப்ரமணியன் ஆங்கிலத்தில் அறிமுகஉரை நிகழ்த்துவார். அதன்பின்னர் 'தாமரைச்செல்வியின் இலக்கியப் பங்களிப்பு' பற்றி எழுத்தாளர் லெ. முருகபூபதி உரையாற்றுவார்.

அவுஸ்திரேலியாவில் வசியும் தமிழ் எழுத்தாளர்களின் நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வும் மேற்படி எழுத்தாளர் விழாவில் நடைபெறும். நடேசன் எழுதிய 'தாத்தாவின் வீடு' நாவலுக்கான வாசிப்பு அனுபவப் பகிர்வை ரஞ்சகுமார் ஆற்றுவார்.

தேவகி கருணாகரன் எழுதிய 'அவள் ஒரு பூங்கொத்து' சிறுகதை தொகுப்புக்கான நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வு உரையை சௌந்தரி கணேசன் ஆற்றுவார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்த 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' கட்டுரை தொகுப்பு நூலுக்கான வாசிப்பு அனுபவப் பகிர்வு உரையை ம. தனபாலசிங்கம் ஆற்றுவார். முருகபூபதி எழுதிய 'சினிமா பார்த்ததும் கேட்டதும்' கட்டுரைத் தொகுதிக்கான உரையை கிறிஸ்டி



நல்லரெத்தினம் ஆற்றுவார்.

அத்துடன் தெய்வீகனின் 'நாடற்றவர்களின் கடவுச் சீட்டு' நூல் மற்றும் சந்திரிக்கா சுப்பிரமணியன் நூலின் வாசிப்பு அனுபவ உரையைஇந்துமதி ஸ்ரீநிவாசன் ஆற்றுவார்.

சிட்னி எழுத்தாளர்விழா நிகழ்வின் மதிய இடைவேளையின் பின்னர் மாலை அரங்கில் அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாள்களின் நூல்கள் – இதழ்கள் கண்




காட்சியும் கலந்துரையாடலும் நடைபெறும். மலையகம்_ 200 சிறப்பு அரங்கில் நிகழ்கால எழுத்தாள ஆளுமைகளின் காணலை ஒளிபரப்பாகும். நோர்வே சரவணனன், கனடா மீரா பாரதி ஆகியோரின் பதிவுகள் காண்பிக்கப்படும். மாலை அரங்கில் அருண் குமாரசாமி குழுவினர் வழங்கும் இசைக்கலை நிகழ்வும் நடைபெறும்.

சுவாரஸ்யமான கதை களத்துடன் வெளியிடப்பட்ட 'பிலிங்க்' தமிழ் குறும்படமும் சிட்னி தமிழ் எழுத்தாளர் விழாவில் காண்பிக்கப்படும். அவுஸ்திரேலியா_ இந்தியாவை தளமாகக் கொண்ட GUM LEAF ENTERTAINMENT தயாரிப்பில், கதிர் இயக்கிய தமிழ் இலங்கை குறும்படம் 'பிலிங்க்' இலங்கையில் வெளியிடப்பட்டது.

இது ஒரு சுவாரஸ்யமான கதைக்களத்துடன் அருண் குமாரசாமியின் தனித்துவமான இசையுடன் சிறப்பாக தயாரிக்கப்பட்டது. சுமதி குமாரசாமியின் இயக்கத்தில் கம் லீஃப் என்டர்டெயின்மென்ட் தயாரித்த, 'பிலிங்க்' திரைப்படம், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கணி திரையரங்கில் அதன் முதல் காட்சியை அண்மையில் நடத்தியது. நிகழ்ச்சியின் இறுதியில் நன்றியுரையை அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் ஆற்றுவார். அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் சிட்னி தமிழ் எழுத்தாளர் விழாவில் கலந்து சிறப்பிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# சவூதி அறிமுகப்படுத்திய உலகின் முதலாவது தானியங்கி மருந்து விநியோக இயந்திரம்

மருந்துகளை விநியோகிக்கும் உலகின் முதல் தானியங்கி இயந்திரத்தை, சவூதி அரேபியாவின் வடமேற்கு பிராந்தியத்தில் உள்ள மன்னர் சல்மான் இராணுவ மருத்துவமனை பிரதிநிதித்துவப்படுத்தும் பாதுகாப்பு அமைச்சின் சுகாதார சேவைகளுக்கான பொதுப்பணியகம் (MODHS) வெற்றிகரமாக அமைத்துள்ளது.

தொழில்நுட்ப துறையில் சவூதி அரேபியா நிகழ்த்திய தொடர் சாதனைப் பட்டியலில் இந்த அதிநவீன கண்டுபிடிப்பும் இணைகிறது. உலக மக்களுக்கான ஒரு புதுஅனுபவமாக அமைகின்ற இவ்வமைப்பானது மக்களின் அன்றாட வாழ்க்கை முறையை எளிதாக்கும் வகையில், நோயாளிகள் மருத்துவமனையை நாடுவதன் அவசியமின்றி தானியங்கி முறையில் மருந்துகளை வழங்குகிறது.

இவ்வியந்திரம் மருந்துகளில் பரிந்துரைக்கப்பட்ட பார்கோட் (Barcode), பயனாளிகள் பயன்படுத்துவதற்கான தொடர்புத்திரை, ரோபோக்களை பயன்படுத்திய ஒரு சிறப்பு இயக்க முறைமை மற்றும் மருந்துச்சீட்டின் தயார்நிலையைப் பயனாளிக்குத் தெரிவிப்பதற்கான செய்தித்தளம் போன்றவற்றை கையாளும் பணி அமைப்பைக் கொண்டுள்ளது.

24 மணிநேர சேவையை வழங்கும் இவ்வியந்திரம் 102,700 மருந்து வகைகளை சேமிக்கும் திறன் கொண்டது. ஒவ்வொரு மருந்துவகைகளுக்கும் ஏற்றாற்போல் அவற்றை சேதம் மற்றும் திருட்டிலிருந்து பாதுகாப்பதற்கான உயர்தொழிநுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டு இவ்வியந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளுக்கு குறிப்பிட்ட மருந்துகளை தினசரி, மாதாந்தம் அல்லது வருடாந்த அடிப்படையில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான தகவல்களையும் இவ்வியந்திரம் வழங்குகிறது. சவூதி அரேபியாவின் மருத்துவமனை பாமசி துறைக்கான இயக்குநர் அல் அதாவி இவ்வியந்திரத்தின் இயக்கம் தொடர்பாக பின்வருமாறு விளக்கினார்:

பயனாளர்கள் மருந்துச்சீட்டில் உள்ள பார்கோடை ஸ்கேன் செய்து தேவையான தகவல்களை இயந்திரத்தில் உள்ள திரையில் உள்ளீடு செய்ய வேண்டும்.

இலத்திரனியல் ஸ்கேனிங் முறையைப் பயன்படுத்தி பயனாளியின் மருந்துச்சீட்டுத் தரவைச் சரிபார்க்கும் நேரத்தில் பயனாளிகள் தங்கள் இருப்பிடத்திற்கு மிக அருகில் உள்ள விநியோக இயந்திரத்தைத் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக்





கொள்ளப்படுவர். மருந்துச்சீட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டால் பயனாளிகளுக்கான பிரத்தியேக குறியீட்டு இலக்கம், இயந்திரத்தின் இருப்பிடம் போன்ற சில தகவல்களைக் கொண்ட எஸ்.எம்.எஸ் ஒன்றைப் பயனர்கள் பெறுவார்கள். அவர்கள் 48 மணி நேரத்திற்குள் தங்கள் மருத்துகளை பெற்றுக் கொள்ளலாம்.

மருந்தைப் பெறுவதற்கு முன்னர், பயனாளிகள் தங்களது முக்கிய தகவல்கள் மற்றும் அவர்களின் தொலைபேசிகளுக்கு வழங்கப்பட்ட சரிபார்ப்பு எண்ணை இயந்திரத்தின் திரையில் உள்ளிட வேண்டும். மிகக்குறைந்த வெப்பநிலையில் சேமிக்கப்பட வேண்டிய மருந்துகளைத் தவிர்த்து, அனைத்து மருந்துப் பொருட்களையும் இயந்திரம் விநியோகிக்கிறது, மேலும் நோயாளிகள் பாமசிகளில் மருந்துகளைப் பெறுவதற்கு செலவாகும் பலமணி நேரத்தை ஒரு நிமிடத்திற்கும் குறைவாக இது மாற்றியிருக்கிறது.

இந்தச் சேவை, மக்களின் தேவைகளை இலகுவாக்குதல் குறித்த அந்நாட்டுத் தலைமையின் அறிவார்ந்த அக்கறையை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு அல் அதாவி மேலும் கூறினார்.

காலித் ரிஸ்வான்

# அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்ற பெண்கள் அமைப்பு, பலதரப்பட்ட பங்குதாரர்கள் இடையே கலந்துரையாடல்

சேர்ச் ஃபொர் கொமன் கிரவுன்ட் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்ற பெண்களின் 'வில் கிளப்' (WILL Club) மற்றும் பலத்தரப்பட்ட பங்குதாரர்களுக்கு இடையிலான சந்திப்பு அம்பாறையிலுள்ள தனியார் விடுதியொன்றில் அண்மையில் நடைபெற்றது.

உள்ளூராட்சிமன்ற பெண்கள் எழுதிய திட்ட முன்மொழிவுகளின் இறுதி வடிவம், பலதரப்பட்ட பங்குதாரர்கள் குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றுக்கான சிறு மானியஉதவிகள் வழங்குவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ஒப்பந்தங்களும் இதில் கைச்சாத்திடப்பட்டன.

கல்முனை, திருக்கோவில், ஆலையடிவேம்பு, சம்மாந்துறை மற்றும் அம்பாறை ஆகிய 05 உள்ளூராட்சிமன்றங்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர் கமல் நெத்மினி, அரச சார்பற்ற அமைப்புகளின் உயர்அதிகாரிகள், சேர்ச் ஃபொர் கொமன் கிரவுன்ட் (Search for common ground) நிறுவனத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கான சிரேஷ்ட திட்ட முகாமையாளர் எம்.ஐ. முகம்மட் சதாத், இணைப்பாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், உள்ளூராட்சிமன்றங்களின் முன்னாள் பெண் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.றிஸ்வான்
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)





# ஆவணி சங்கடஹர சதுர்த்தி



**12 மாதங்கள் கொண்ட தமிழ் வருடங்களில் ஐந்தாவதாக வருகின்ற மாதம் ஆவணி மாதம். தெய்வ வழிபாட்டுக்குரிய ஆடி மாதம் முடிந்து ஆவணி மாதம் பிறக்கின்ற போது ஒரு மாத காலம் நடைபெறாத பல சுப நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. காரணம் சூரிய பகவான் அவரது சொந்த வீடான சிம்ம ராசியில் ஆவணி மாதத்தில் பிரவேசிக்கும் காரணத்தினால் பல நன்மையான பலன்களை உண்டாக்கும் என்பது ஐதீகம். அப்படிப்பட்ட ஆவணி மாதத்தில் வருகின்ற ஒரு தினம் தான் ஆவணி சங்கடஹர சதுர்த்தி. இந்த ஆவணி சங்கடஹர சதுர்த்தியில் விநாயகரை எவ்வாறு வழிபட வேண்டும் என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.**

பொதுவாக சுப நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதற்கு தகுதி வாய்ந்த சில மாதங்களில் ஆவணி மாதமும் ஒன்றாக கருதப்படுகிறது.

ஆவணி மாதத்தில் பல தெய்வங்களுக்குரிய பண்டிகை தினங்கள் வருகின்றன. இந்த ஆவணி மாதத்தில் தெய்வங்களுக்குரிய வழிபாடு மற்றும் விரதம் இருப்பதால் நாம் நினைத்த காரியங்கள் அனைத்தும் நிச்சயமான வெற்றியை பெறும் என்பது பெரியோர்களின் அனுபவமாக இருக்கிறது. ஆவணி மாதத்திலேயே வருகின்ற சங்கடஹர சதுர்த்தி தினம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. காரணம் இந்த ஆவணி மாதத்தில் தான் விநாயகருக்குரிய விநாயகர் சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆவணி சங்கடஹர சதுர்த்தி தினத்தன்று அதிகாலை நீராடி, காலை முதல் மாலை வரை விநாயகப்பெருமான் நினைவோடு ஏதும் உண்ணாமல் விரதம் இருக்க வேண்டும். உணவு சாப்பிட வேண்டிய நிலையில் இருப்பவர்கள் உப்பு சேர்க்காத உணவு அல்லது பால், பழம் மட்டும் சாப்பிட்டு விரதம் மேற்கொள்ளலாம். மாலையில் அருகிலுள்ள விநாயகர் கோயில், சந்நிதிக்கு சென்று விநாயகப் பெருமானுக்கு நடைபெறும் அபிஷேகதிற்கு பசும் பால் மற்றும் வாசமிக்க மலர்கள், மஞ்சள், விபூதி போன்ற அபிஷேக பொருட்களை தந்து, அபிஷேக பூஜையில் கலந்து கொண்டு விநாயகரை வழிபட வேண்டும்.

வழிபாடு முடித்து ஆலயத்தை எட்டு முறை வலம் வந்து வணங்க வேண்டும். கோயிலில் அனைத்து பூஜை வழிபாடுகள் முடிந்ததும் வீட்டிற்கு வந்து விநாயகரை வணங்கி பூஜையறையில் நைவேத்தியம் வைக்கப்பட்ட பழத்தை சாப்பிட்டு விரதத்தை முடித்து கொள்ளலாம்.ஆவணி மாத சங்கடஹர சதுர்த்தி தினத்தன்று விநாயகருக்கு விரதமிருந்து வழிபடுவதால் நீண்ட காலமாக திருமண தாமதமானவர்களுக்கு திருமணம் நடக்கும்.

புதிய வீடு, மனை போன்ற சொத்துகள் வாங்குவதில் இருந்து வந்த தடைகள் விலகும். உடல் மற்றும் மன ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சிகள் அனைத்தும் சிறப்பான வெற்றிகளை பெறும். குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் நோய் பாதிப்புகள் நீங்கி அவர்கள் கல்வியில் சிறக்க செய்யும். தொழில், வியாபாரங்களில் புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து லாபங்கள் பெருகும்.




## மானுடவியல்

### சுந்தரர்



131

3. திருப்புகலூரில் தலைக்கு அணையாக வைக்கப்பட்டிருந்த செங்கற்கள் எல்லாம் இறைவன் அருளால் பொன் கட்டிகளாக மாறியமை.

4. திரு ஆரூரில் சிவபெருமான் தம்முடைய கண்களைப் பறித்த தோடல்லாமல், தமக்கு மற்றொரு கண்ணைத் தருவதைத் தாமதப்படுத்துகின்றாரே என்று தோழமை உணர்வுடன் இறைவனை "வாழ்ந்து போதிரே" என்று கடிந்துக் கொள்கிறார். இறுதிப் பாடலாக, "கார் ஊர் கண்டத்து" எனத் தொடங்கும் பாடலைப் பாடிய அளவில் இறைவன் சுந்தரருக்கு மற்றொரு கண்ணையும் தந்து அருளினார்.

மணவாழ்க்கை




திருவாரூரில் பரவை நாச்சியாரைக் கண்ட சுந்தரர் அவரைத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தார். அதே போன்று திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரைக் கண்டு அவர் மீதும் அன்பு கொண்டு அவரையும் தமது வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டார். பின்னர் ஊழ்வினைக் காரணமாகத் தம் இரு கண்களின் பார்வையையும் இழந்தார். திருமுல்லைவாயில், திருவெண்பாக்கம் ஆகிய தலங்களில் சென்று இறைவனைத் துதித்துப் பாட அவரது இடது கண் ஒளி பெற்றது. பின் திருவாரூர் சென்று இறைவனைப் பாடும் போது அவரது வலது கண்ணும் ஒளி பெற்றது.

சுந்தரர் கோட்புலி நாயனாரின் ஊராகிய திருநாட்டியத்தான் குடி என்ற ஊரை நெருங்கிய போது, கோட்புலி நாயனார் சுந்தரரை எதிர் கொண்டழைத்து அவரைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று அமுது படைத்தார். சிங்கடியார், வனப்பகையார் என்னும் தம் இரு புதல்வியரை அழைத்துச் சுந்தரரின் திருவடிகளைத் தொழும்படி கூறினார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 52




தவறான கண்ணோட்டம் கொண்ட ஒருவன், சாதாரண துன்பத்தைக் கூட, தன் தவறான மதிப்பீட்டால், மிகப் பெரிய துன்பமாகக் கருதி கவலைப்படுகிறான். கவலை வளர்த்துக் கொள்கிறான். சின்னக் குறைபாடு அல்லது சிறியளவில் உடல் நல மின்மை அல்லது சிறிய கடுகு அளவு பாதகமான சூழ்நிலை வந்தாலும் மலையளவு நினைத்து பயம் கொள்கிறான். தேவையின்றி கலங்குகிறான். மனவலிமையை பொறுத்தே சூழ்நிலைகளின் தாக்கம் அமையும். காய்ந்த விறகுக் கட்டையில் நெருப்பு எளிதில் பற்றிவிடும். ஆனால் ஈரமான விறகுக் கட்டையில் நெருப்பு அவ்வளவு எளிதாகப் பற்றாது.

பலவீனனை தாக்கும் அளவிற்கு நோய் பலமுள்ளவனை தாக்காது. வறண்ட நிலம் நீரை உறிஞ்சும் அளவிற்கு ஈரமான நிலம் உறிஞ்சுவதில்லை. மெல்லிய, வெள்ளை துணியில் சாயம் ஏறும் அளவிற்கு கடினமான அழுக்கு துணியில் ஏறுவதில்லை. அதே போல் பலவீனமானவன் பாதகமான சூழ்நிலையை கூட தாங்கிக்கொள்ளும்மன வலிமை இன்மையில் கவலைப்படுகிறான் அல்லது துன்பப்படுகிறான்.

உலகத்தில் வெற்றி, அழகு, சுகம், அமைதி பெற விரும்புவன் தனக்கு எதிரான பாதகமான சூழ்நிலையினை. சரியான கண்ணோட்டத்துடன் நோக்கி எதிர் கொண்டு, தமக்கு சாதகமான சூழ் நிலையாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உலகின் அனைத்து பொருட்களும். வாழ்வில் தான் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளையும் கண்டு கலங்கி பயந்து சுகத்தையும் அமைதியையும் இழந்துவிடுவான். உணர்வுகளை செயல் வடிவமாக மாற்றினால் தான் அந்த உணர்வுகள் நன்கு வளரும். மனதளவில் உதவி செய்திட நினைத்தால் மட்டும் போதாது. மனதில் நினைத்தப்படி தேவைப் படுவோருக்கு தக்க உதவி செய்யும் போது தான் அது சேவை என்ற பெயர் கொள்ளும். நோய்ப்பட்ட ஒருவனுக்கு சேவை செய்ய நினைப்பவர், அந்த நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். மருந்து மாத்திரைகளை வாங்கி கொண்டு வந்து தர வேண்டும். தேவைப்பட்டால் நோயாளிக்கு மருந்து ஊட்டவும் செய்ய வேண்டும். இவ்வளவும் செயல் வடிவம் பெறும் போது தான் அது சேவையாகக் கருதப்படும். இவ்வித சேவையால் மட்டுமே நோயாளிக்கும் சேவை செய்தவருக்கும் நன்மை ஏற்படும். பசித்தவனுக்கு உணவு. நிர்வாணமாய் நிற்பவனுக்கு ஆடை, மூடனுக்கு கல்வி,முடவனுக்கு கைத்தடி, நோயாளிக்கு மருத்து கொடுக்க வேண்டும் என நினைத்தால் மட்டும் போதாது. நினைத்தப்படி கொடுத்தால் தான் சேவை எனப்படும். உணர்வு மட்டும் ஒருவனை இன்புறச் செய்யாது.உதவும் போது தான் அனைவருக்கும் இன்பம் பிறக்கும்.

பிறர் நலன், பொது நலன் கருதி எந்தளவு நாம் சுயநலத்தை தியாகம் செய்கிறோமோ அப்போது நாம் தெய்வத் நன்மையை அடைகிறோம். அதிகாரத்தை செலுத்தி பிறரை அடிமைப் படுத்தாமல், பதவி மூலம் அனைவருக்கும் உதவி செய்தல் தெய்வ தன்மையாக கருதப்படும். என்று நம் சுயநலம் பொது நலமாக மாறுகிறதோ, பதவி அதிகாரம் கடமையாக மாறுகிறதோ அன்று, நம்மிடமுள்ள அரக்கத்தனம் மாறி தெய்வத் தன்மையை நோக்கி முன்னேறுவோம். அதனை உடனே செய்திடுவோம்.

## கொட்டாஞ்சேனை ஸ்ரீராதாகிருஷ்ண ஆலயத்தில் செப்டம்பர் 8இல் சுவாமி பிரபுபாதா வியாசபூஜை



கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ண ஆலயத்தில் எதிர்வரும் செப்டம்பர் 8ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு வியாச பூஜை கொண்டாடப்படவிருக்கிறது. ஆன்மிகக் குருவை அவரின் பிறந்த தினத்தில் ஆராதிக்கும் வகையில் கொண்டாடப்படுவதே வியாசபூஜை. அந்தவகையில் சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தை ஸ்தாபித்தவரும், ஆன்மிகக் குருவுமான அருட்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் வியாச பூஜை கொண்டாடப்படவிருக்கிறது. பகவான் கிருஷ்ணர் அவதரித்த கிருஷ்ண ஜெயந்தி தினத்துக்கு அடுத்த நாளே சுவாமி பிரபுபாதாவின் ஜெயந்தி தினமும் வருவதும் ஒரு விஷேட அம்சமாகப் பார்க்கப்படுகிறது. இவ்வேளையில் சுவாமி பிரபுபாதாவைப்பற்றி ஒரு சிறிய அறிமுகத்தை இங்கு பார்ப்போம்.

1896ஆம் ஆண்டு பிறந்த சுவாமி அவர்கள், 1922ஆம் ஆண்டு அதாவது தனது 26ஆவது வயதில் ஆன்மீகக் குரு சரஸ்வதி கோஸ்வாமியைச் சந்தித்தார். அவரை குருவாக ஏற்றுக்கொண்டு ஆன்மீக முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கையில் ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்திலும் மிகுந்த புலமைமிக்க அவருக்கு குரு சரஸ்வதி ஒரு கட்டளையை பிறப்பித்தார். அதாவது ஆங்கிலம் பேசும் மக்கள் மத்தியில் நீ இந்த ஆன்மீக அறிவை பரப்ப வேண்டும் என்பதுதான் அது.

1944ஆம் ஆண்டு சுவாமி பிரபுபாதா தனது சுய முயற்சியால் (பேக் டு கோட்ஹெட்) திரும்பவும் பகவானின் சன்னதிக்கு எனும் சஞ்சிகையை ஆரம்பித்தார்.

இந்த சஞ்சிகையின் ஆசிரியராகவும், எழுத்தாளராகவும், வடிவமைப்பாளராகவும், விநியோகஸ்தராகவும் அவரே தனி ஒருவராக இருந்து செயல்பட்டார்.

இதேவேளை வேத இலக்கியங்களை சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கும் வேலைகளையும் செய்தார்.

இப்படியே காலம் சென்று கொண்டிருந்தது. சுவாமி பிரபுபாதா 70 வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். குருவின் கட்டளையை நிறைவேற்றும் காலமாக அது இருந்திருக்க வேண்டும்.

ஒரு கப்பல் கம்பெனி உரிமையாளரான சுமதி மொரார்ஜி என்னும் பெண் சுவாமி பிரபுபாதா மீது மிகுந்த பக்தியுள்ளவர். அவரின் உதவியைப் பெற்று அமெரிக்கா செல்வதற்கு சுவாமி முயற்சி செய்தார். அந்தப் பெண்மணி சுவாமிக்கு எந்த உதவியும் செய்வதற்கு தயாராகவே இருந்தார். ஆனால் சுவாமி பிரபுபாதாவின் வயதை நினைத்து அவர் இந்த வயதில் அமெரிக்கா போய் அவரால் என்ன சாதிக்க முடியும் என்று சிந்தித்தார். அதனால் சுவாமி அமெரிக்கா செல்வதை அவர் விரும்பவில்லை. ஆனால் சுவாமி பிரபுபாதாவோ தான் அமெரிக்கா செல்ல வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். அதனால் அவரை தடுக்க முடியாத நிலையில் அந்தப்பெண் சுவாமி அமெரிக்கா செல்வதற்கான ஏற்பாட்டை செய்து கொடுத்தார். சரக்கு கப்பலில் அமெரிக்காவுக்கான ஒரு மாத கால பயணத்தை ஆரம்பித்தார்.

எந்தவித அறிமுகமுமில்லாத ஒரு நாட்டுக்கு, எவரையுமே தெரியாத நிலையில் தனியனாக இந்தியப் பணத்தில் சுமார் 40 ரூபா, ஒரு சூட்கேஸ், சில பெட்டிகள் நிறையப் புத்தகங்கள், ஒரு குடை, கொஞ்சம் காய்ந்த தானியங்கள். இவை தான் அவர் கொண்டு சென்ற பொருட்கள்.

பகவான் கிருஷ்ணா மீது மட்டும் நம்பிக்கை வைத்து அவர் இந்த பயணத்தை மேற்கொண்டார். சுமதி மொர்ஜி பயந்தது போலவே அவருக்கு கப்பலில் வைத்து இரண்டு மூன்று முறை மூச்சுத் திணறல், மாரடைப்பு என்பன ஏற்பட்டன. ஆனாலும் எந்த ஆபத்துமின்றி தப்பித்துக்கொண்டார்.

சுமார் ஒரு மாத காலத்துக்குப்பின்னர் அவர் அமெரிக்காவின் பொஸ்டன் நகரைப் போய்ச்சேர்ந்தார்.

அங்குபோய் சேர்ந்ததும் அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையை கண்டு அவர் மனம் மிக வருந்தினார். அவர்கள் மது, மாது, சூது மற்றும் கேளிக்கைகள் என்று சகல தீய பழக்கங்களிலும் ஈடுபாடு உடையவர்களாக இருந்தார்கள். இவர்களுக்கா நான் ஆன்மீக அறிவை போதிக்கப் போகிறேன். பகவானே இது என்ன சோதனை? என்னை ஏன் இங்கு அழைத்து வந்தாய் என்று எனக்கு புரியவில்லை. இங்குள்ளவர்களுக்கு எப்படி நான் இந்த கிருஷ்ண உணர்வை போதிக்கப் போகிறேன். இப்படி அவர் நினைத்து மனம் குமுறினார்.

பின்னர் ஒரு பூங்காவில் போய் அமர்ந்து கொண்டு ஹரேகிருஷ்ணா மஹா மந்திரத்தை ஜெபிக்கலானார். அவரை எவரும் கண்டு கொண்டதாக தெரியவில்லை. அதன் பின்னர் படிப்படியாக ஒவ்வொருவராக வந்து அவர் என்ன சொல்கிறார் என்று கவனிக்கலானார்கள். அவர்களுக்கு அவர்போதிக்கலானார்.

அதுவரைகாலம் உலக இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த அமெரிக்க மக்களுக்கு அது ஒரு புது அனுபவமாக இருந்தது.

இந்திய சுவாமி ஒருவர் வந்து நமக்கு தெரியாத பல விடயங்களை கூறுகிறார் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். நாளுக்கு நாள் அவருக்கு பக்தர்கள் பெறுகினார்கள். அதன் பின்னர் சுவாமி பிரபுபாதா சர்வதேச கிருஷ்ணபக்திக்கழகத்தை ஆரம்பித்தார்.

அடுத்த பன்னிரண்டு வருட காலத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் உருவானார்கள். உலக நாடுகளுக்கு இந்தியாவின் புதிய செய்தியாக அது அமைந்தது. குழந்தைப்பருவத்தில் சுவாமி பிரபுபாதா ஆலயம் அமைத்தும் இரத யாத்திரையை நடத்தியும் விளையாண்டதாக அறியப்படுகிறது.

பின்னாளில் அவர் ஆசைப்பட்டதற்கும் மேலாக உலகின் பல பாகங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆலயங்களை அமைத்தும், இரத யாத்திரைகளை நடத்தியும் பக்தி மார்க்கத்தில் மாபெரும் சாதனை நிகழ்த்தினார். இன்னும் குருகுலம் பசுக்களை பாதுகாக்கும் பண்ணைகள் மற்றும் பல்வேறு அமைப்புகளையும் கிருஷ்ண பக்தி கழகம் உலகெங்கும் நடத்தி வருகிறது. கிருஷ்ணபக்திக்கழக இலங்கைக்கிளையாலும் இந்த இரதயாத்திரை சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக வெகு சிறப்பாகக்கொண்டாடப்பட்டு வந்தது. சில அசாதாரண சூழல் காரணமாக கடந்த சில வருடங்களாக இந்த இரதயாத்திரையை நடத்தமுடியவில்லை. மீண்டும் இந்த இரதயாத்திரையை நடத்தும் நாளை மக்கள் ஆவலுடன் எதிபார்த்திருக்கின்றனர்.

**கிருஷ்ணப்பிரியன்**

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**(19816) பஞ்ச பாண்டவர்களின் தாயார் யார்?** *குந்தி*
**பாண்டுவின் முதல் மனைவி யார்?** *குந்தி*
**கிருஷ்ணனின் தந்தை யார்?** *வாசுதேவன்*
**கிருஷ்ணனின் தந்தையாகியவாசுதேவனின் சகோதரி யார்?** *குந்தி*
**சூரசேனனின் மகள் யார்?** *குந்தி*
**இவருடைய இயற்பெயர் என்ன?** *பிரீதா*
**இவர் குந்திபோஜ மன்னனால் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டதால் என்ன பெயர் பெற்றார்?** *குந்தி*
**மகாபாரதக் கதையில் வரும் அஸ்தினாபுரத்தின் அரசன் யார்?** *சாந்தனு*
**இவரது வழித்தோன்றல்கள் யார்?**
**பாண்டவர்களுக்கும் கௌரவர்களும் இவர் யாரை மணந்தார்?** *கங்காதேவியை*
**பாண்டுவின் இரண்டாவது மனைவியான மாத்ரியின் புதல்வர் யார்?** *நகுலன்*
**நகுலன் யார் மூலமாக பிறந்தவர்?** *அஸ்வினி*
**மாதுரா அரசின் இளவரசி யார்?** *மாதுரி*
**பாண்டுவின் இரண்டாவது மனைவி யார்?** *மாதுரி*
**பாண்டு மற்றும் குந்தி ஆகியோரின் மகன் யார்?** *தருமன்*
**குருச்சேத்திரப் போரில் பாண்டவர்களின் தலைவராய் இருந்தவர் யார்?** *தருமன்*

## வரலாற்று சிறப்புமிகு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹோற்சவம்

மட்டு நகரிலிருந்து தெற்கே மண்முனைத் துறையினூடாக ஒன்பது(9) மைல் தொலைவில் கொக்கட்டிச்சோலை என்னும் சிராமம் அமையப் பெற்றுள்ளது. பண்டைக்காலத்தில் கொக்கட்டி அல்லது கொக்கு நெட்டி என்னும் மரங்கள் நிறைந்தமையால் இக்கிராமத்திற்கு கொக்கட்டிச்சோலை எனும் இப் பெயர் வரக் காரணமாயிற்று இயற்கை எழில்மிக்க இக்கிராமத்தில் நிழல் மரங்கள் நிறைந்த திரு வீதியிலேதான் தான்தோன்றீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. மட்டக்களப்பிலே உள்ள பழமையான சிவன் கோயில் என்ற பெருமையும் திருப்படைக் கோயில் அல்லது தேசத்துக்கோயில் என்ற பெருமையும் இக் கோயிலுக்கு உண்டு. இக் கோயிலில் இறைவன் சுயம்புலிங்கமாகத் தானே தோன்றி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

பண்டையக்கால அரசர்களது மதிப்பும் மானிய சீர்வரிசைகளும் பெற்றவையாக உள்ள கோயில்கள் சில மட்டக்களப்பில் உள்ளன. இவற்றுள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் ஒன்றாக விளங்குகின்றது. குணசிங்கன் என்னும் அரசன் மட்டக்களப்பை ஆளும் போது கலிங்க ஒரிசா தேசத்தை அரசுபுரியும் குகணேசனுடைய புத்திரியாகிய 'உலகநாச்சி' என்பவள்; கௌதம புத்தரின் தரிசனத்தை எடுத்துத் தனது நெடுங்கூந்தலில் மறைத்து வைத்தும் கைலங்கிரியிலிருந்து குரு வம்ஷத்தார் மூலம் எடுத்துக் கொண்டு வந்து மணிபுரத்தில் இறுக்கி விசய துலீபத்தில் வந்து மேகவர்ணனைக் கண்டு கோத்திரம் எல்லாம் கூறி விளங்கப்படுத்தி புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள் அவனும் அளவில்லாத மகிழ்ச்சி கொண்டு அவளுக்கு வேண்டியசன்மானமெல்லாம் கொடுத்து மேலும் வேண்டுவது என்னவென்று கேட்டான். அவள் குடி வாழ்வில்லாத ஊர் ஒன்று தனக்கு வேண்டுமென்று கேட்டாள். அதைக் கேட்ட மேக வர்ணன் மட்டக்களப்பை அரசுபுரியும் குணசிங்கன் தனது நண்பனாகையால் ஒரு திருமுகம் வரைந்து அவனுக்கு கொடுத்து அனுப்பினான்.

குணசிங்கனும்; திருமுகத்தை வாசித்து சந்ததியுரிமை கொண்டாடி மட்டக்களப்பு வடபக்கமாக உள்ளன. அம்பிளாந்துறைக்கு அப்பால் மண்ணேறுமுனை வளர்ந்து காடு செறிந்து குடி வாழ்வற்ற பகுதியை நிரந்தரமாயீந்து ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித்தூர்த்து மாளிகை உண்டாக்கி உலகநாச்சிக்கு கையளித்தான். உலகநாச்சியும் குடி வாழ்ந்து சில காலம் சென்ற பின் தனது தம்பி உலக நாதனைத் தந்தையிடத்தில் அனுப்பிக் குகன் குடும்பம் நூறும் சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்துக் குகக்குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தனர்.

பின்னர் இன்னும் ஒரிசா நகரமிருந்து அநேக குடும்பங்களை அழைத்து காப்புமுனைக் காட்டை அழித்துச் செப்பனிட்டு அப்பகுதிக்கு அரசியாகிய மண்முனை என நாமஞ்சூட்டி வாழும் காலம் களப்பு முனைக்குத் தென் பாகமாயுள்ள காட்டை அழிப்பிக்கும் போது திட கனென்பவன் கொக்கு நெட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது அதனைக் கண்ட திடகன் தனது உடைத் துணியால் மரத்து வெட்டு வாயைக் கட்டி வைத்து விட்டு உலகநாச்சியிடம் இந்த செய்தியினை அறிவித்தான் உலகநாச்சியும் அந்த இடத்தில் போய்ப் பார்க்கும் போது அந்த கொக்கு நெட்டி மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது. மற்றையோர் கண்ணுக்குப் புலப்படாத காரணத்தால் உலகநாச்சியும் சிவலிங்கம் என திட்டம் பண்ணி அவ்வனத்தை அழித்து தூசி நீக்கி ஆலயம் அமைத்து வட நாட்டு கொல்லரிடமிருந்து பட்டர் மூவரை அழைத்து பூசை புரியும்படி திட்டம் செய்து அதிக களனிகள் திருத்தி குணசிங்கனுடன் பிறந்தவனாகிய கிரசரசன் என்பவனை மணந்து ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்று வாழ்ந்து வருங்காலம் தந்தபுரத்திலிருந்து ஆரம் தொடுக்கும் குடிகள் பதின்மரை அழைத்து தனது குடிக்கருகாமையிருத்திப் பத்தனென்பவனை அவர்களுக்குத் தலைவனாய் வைத்து இரண்டு ஆலயத்திற்கும் அரங்கட்டும் குடிகளாக வகுத்தனள்;. பின்பு கலிபிறந்து ஐந்நூற்று முப்பதாம் வருஷம் குணசிங்கனின் புத்திரன் அதிசுதன் என்பவனுக்கு மண்முனையையும் இரு தினங்களில் பட்டாங்கட்டினாள் அதிசுதன் மனைவியின் நாமம் நாமவல்லி கனகசேனனுடைய மனைவி அருந்தாள் இவர்கள் இலங்கையிலுள்ளவர்கள் இவர்களின் சந்ததிகள் மட்டக்களப்பு மண்முனை பகுதிகளையும் இருநூறு வருஷங்களாக ஆண்டு வந்தனர் பின்பு கலிங்க குலத்து வங்காலாடன் என்பவன் அரசுக்கு வந்தான் என்பதனை மட்டக்களப்பு மான்மியம் எடுத்துக் கூறுகின்றது.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க ஆலயத்தின் வருடாந்த தேரோட்டம் நேற்று நடைபெற்றது. இன்று திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெற்று எம்பெருமானின் மஹோற்சவமானது இனிதே நிறைபெறவிருக்கின்றது.

**நாராயணபிள்ளை நாகேந்திரன்**
**ஓய்வுநிலை அதிபர்**

## 21 பேரடங்கிய...

"குளோபல் ஃபைனான்ஸ் சஞ்சிகை" வருடாந்தம் நடத்தும் கணக்கெடுப்பின்படி, 'ஏ' தர மத்திய வங்கி ஆளுநர்களில் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் சேர்க்கப்பட்டுள்ளார். 1994 ஆம் ஆண்டு முதல், "குளோபல் ஃபைனான்ஸ் சஞ்சிகை", பணவீக்கக் கட்டுப்பாடு, பொருளாதார வளர்ச்சி, நிதி நிலைத்தன்மை மற்றும் வட்டி விகித மேலாண்மை ஆகியவற்றில் அவர்களின் சிறந்த செயல்திறனுக்காக மத்திய வங்கி ஆளுநர்களை வரிசைப்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு தரவரிசையின்படி, இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் ஸ்ரீகாந்த தாஸ் 'ஏ' பிரிவில் முதலிடம் பெற்றுள்ளார்.

## ஐ.நா பொதுச்...

பட்டியலின்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றவுள்ளார்.

இந்த பொதுச் சபைக்கூட்டத் தொடரில் உலகத் தலைவர்களும், இளம் தலைவர்களும் கலந்துக் கொள்ளவுள்ளனர். இம்முறை பொது சபைக் கூட்டம் "நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல்" என்ற கருத்திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் 2030ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி நிரலின் மீதான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் மற்றும் அமைதியை நோக்கி நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான திட்டங்கள் மற்றும் உலக காலநிலை மாற்றம் தொடர்பிலான விவகாரங்களுடன் மனிதவுரிமை விவகாரங்கள் பிரதானமாக கலந்துரையாடப்படவுள்ளன.

## எரிபொருளுக்கான...

அமுல்படுத்துவதே என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்போது நிலவி வந்த சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளை சமாளித்து நெருக்கடிகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மக்களின் வாழ்க்கை ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

'QR' அமைப்பில் 65 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் மற்றும் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 3,500 லட்சத்துக்கும் அதிகமான எரிபொருள் விநியோக பரிவர்த்தனைகள் அந்த அமைப்பு மூலம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் அரசாங்கம் எடுத்த கொள்கை முடிவுகள், அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் விலை சூத்திரம் மற்றும் எரிபொருளுக்கு புதிய விநியோகஸ்தர்களை சேர்த்ததன் மூலம் எரிபொருள் இறக்குமதிக்கான நிதித் தேவைகள் நிர்வகிக்கப்பட்டதால் QR குறியீடு இனி தேவைப்படாது என அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

## 11 கிராமிய...

தகவல்கள் அம்பலமாகியுள்ளன. இங்கு கருத்துத் தெரிவித்த வைப்பாளர்களில் ஒருவரான பிரேமா காந்தி, எனது மகன் 2000 ஆம் ஆண்டு வெளிநாடு சென்றார். 2006 முதல் 2022 வரை அவர் அனுப்பிய பணம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. நீண்ட நாட்களாக இருந்த வங்கியை நம்பி பணத்தை வைப்புச் செய்து வந்தோம்.. அதில் இருந்து நாம் வட்டியோ பணமோ எடுக்கவில்லை.

மகனின் வீட்டை திருத்தியமைப்பதற்காக ஆறு மாதங்களுக்கு முன்னர் 75 இலட்சம் ரூபாய் கேட்டிருந்தேன். பலமுறை கேட்டேன். பணம் கிடைக்கவில்லை.இந்த நிலையிலே இது பற்றிய தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிட முன்வந்தேன் என்றார்.

மஹரகம பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அநீதி இழைக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தேவானந்த சுரவீர குறிப்பிடுகையில், மஹரகமவில் பதினொரு கிராமிய வங்கிகள் உள்ளன. 33,000 பேர் இவற்றில் பணம் வைப்புச் செய்துள்ளனர். அதன் மொத்த வைப்புத் தொகை 105 கோடிகளாகும். அதில் 25 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கடனை மீளச் செலுத்தாதவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனுடன், பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைமையகக் கட்டடமும் அடகு வைக்கப்பட்டு, மூன்று கோடியே முப்பத்தைந்து லட்சம் கடனாகப் பெறப்பட்டுள்ளது. மாதிவேல காணியும் அடகு வைக்கப்பட்டுள்ளது.

11 வங்கிகளிலும் 33,000 பேர் வைப்புச் செய்துள்ளதோடு அதில் 2783 பேர் கடன் பெற்றுள்ளனர். அதில் 2420 கடன்கள் திருப்பி செலுத்தப்படவில்லை. 360 உறுப்பினர்கள் மட்டுமே கடனை மீளச் செலுத்தியுள்ளனர். வைப்பாளர்களுக்கு வீடு கட்டவோ நோய்களுக்காக பணம் பெறவோ வேறு தேவைகளுக்கு பணம்பெறவோ முடியாத நிலை உருவாகியுள்ளது. இந்த நிலைமைக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்க தலைவர், மேல் மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஆகியோர் தான் முக்கியமாக பொறுப்புக் கூற வேண்டும்.இங்கு நிதி மோசடி நடைபெற்றுள்ளதாகவும் பணத்தை மீள வழங்க முடியாத நிலை உள்ளதாகவும் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த நிதி மோசடிக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸில் முறையிடச் சென்றாலும் எமது முறைப்பாட்டை ஏற்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.(பா)

## அடைமழையால்...

நிலையம் தெரிவித்தது. நான்கு மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் அறிவிக்கப்பட்டுள்ளதோடு கங்கைகளின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதாகவும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, தென் மாகாணத்தில் பெய்து வரும் கடும் மழையினால் ஜின் கங்கை மற்றும் நில்வல கங்கையின் நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக களுத்துறை,கேகாலை,காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாவலப்பிட்டி மாஹகும்புரு பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். புதிய மதிலுக்கான அஸ்திவாரம் வெட்டிக்கொண்டிருந்தவரின் உடல் மீதே மண் மேடு விழுந்துள்ளது. குறித்த மண்மேடு அகற்றப்பட்டு நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். நாவலப்பிட்டி, வெரலுகசின்ன பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ள நிலையில் அவதானமாக செயற்படுமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர மேலும் இருவர் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளில் இன்றைய தினமும் மழையுடனான காலநிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. லபுகமவில் கடந்த 24 மணித்தியாலங்களில் 106.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்,சப்ரகமுவ, தென், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் சில இடங்களில் தொடர்ந்தும் 100 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்தின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்மழையினால் கொழும்பில் பல இடங்களில் நீரில் மூழ்கியதால் போக்குவரத்து தடைப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. கடும் மழை மற்றும் பலத்த காற்று காரணமாக ஜாஎல புனித விக்சேபா மாதா தேவாலய மைதானத்தில் உள்ள பாரிய மரம் முறிந்து விழுந்ததில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 கார்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின் போது மரம் விழுந்துள்ளது. மரம் விழுந்ததில் யாருக்கும் காயமோ, உயிரிழப்போ ஏற்படவில்லை. எனவும் பொதுமக்களின் உதவியுடன் மரம் அகற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகிலும் பாரிய மரம் விழுந்து போக்குவரத்து தடைப்பட்டது.(பா)

## குண்டுதாரிகளுக்கு....

இந்நிலையில் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், கர்தினாலிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் அதில் குறைபாடுகள் இருந்தால் கோடிட்டு காட்டுமாறு டிரான் அலஸ் கர்தினால் தரப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதன் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக நீடித்து வரும் முரண்பாடுகளை முடித்துக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மையை வெளிப்படுத்த தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டதாக கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையின் போது கர்தினால் குற்றம் சுமத்தியிருந்தார். இந்த தாக்குதல் தொடர்பான உண்மையை வெளிக்கொணரும் வாக்குறுதியை தற்போதைய அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்றும் ஜனாதிபதியோ சட்டமா அதிபரோ அல்லது எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தமது கடமையை செய்யவில்லை என்றும் கர்தினால் தெரிவித்துள்ளார்.

## இராணுவ....

சம்பவத்தின்போது இராணுவ பஸ்ஸுக்கு தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒன்றரை வருடங்களுக்கு பிறகு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கங்கொடவில பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி மிரிஹானையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற கலவரத்தில் இராணுவ பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொது முறைப்பாடு பிரிவு குறித்த பஸ்ஸுக்கு தீ வைத்த பிரதான நபரை கைது செய்வதற்கு ஊடகங்கள் ஊடாக பொது மக்களின் ஆதரவையும் கோரியிருந்தது.

ஒரு வருடம் 5 மாதங்களின் பின்னர், குறித்த நபர் மஹியங்கனை பிரதேசத்தில் இருப்பதாக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அவர் தனது மனைவியுடன் மாலபேயில் தற்காலிகமாக தங்கியிருந்த வேளையில் குறித்த இடத்துக்கு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்தோடு, இராணுவ பஸ்ஸுக்கு தீ வைத்ததையும் விசாரணை அதிகாரிகளிடம் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். கைதான நபர் மஹியங்கனை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சலுகைகளுக்காக...

அமைச்சர்,எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நாட்டை கட்டியெழுப்பக் கூடிய வேட்பாளருக்கன்றி சலுகைகளுக்காக எனது ஆதரவை வேறொருவருக்கு வழங்க மாட்டேன் என்றும் தெரிவித்தார்.

ஒரு கட்சி என்ற ரீதியில் செயற்படும் போது தனிப்பட்ட கருத்துக்களுக்காக அல்லாமல் ஒழுக்கத்துடன் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியானவுடன் இலங்கையில் மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்காக நாட்டை உருவாக்கும் சவாலுக்கு முகம் கொடுத்தார். அதற்கு பங்களிக்க முடிந்ததையிட்டு அரசியல்வாதியாக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடைந்துள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் பழைய நிலைமைக்கு மீட்க முயற்சிக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதனை இடைநடுவில் விட்டுச் செல்ல மாட்டோம் .

பொருளாதார வீழ்ச்சி குறித்து பலரும் பல்வேறு தரப்பினர் மீது விரல் நீட்டுகின்றனர். இரண்டு பொருளாதார காரணங்களாலே நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. அரச வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறை கணக்கின் பற்றாக்குறைஅதில் ஒன்றாகும். பல விதங்களால் 2022 ஆம் ஆண்டு வருடம் முழுவதும் நாட்டில் அனைவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வரி வருமானம் 1979 பில்லியன் ரூபாவாகும். செலவு 3645 மில்லியன் ஆகும் 1665 பில்லியன் வரவு செலவு பற்றாக்குறை ஏற்படும். அந்த இடைவெளியை நிரப்புவதற்காகதான் தேசிய மற்றும் வெளிநாட்டிலிருந்து பெருமளவு கடனை பெற்றுக் கொள்ள நேரிட்டது. இரண்டாவது விடயம் நடைமுறை கணக்கின் இருப்புத் தொகையின் பற்றாக்குறை நாட்டின் மொத்த ஏற்றுமதியில் கிடைக்கும் வருமானத்தை விட அன்றாட உபயோகத்திற்காக உணவு, இயந்திரங்கள், எரிபொருள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கே செலவிடப்படுகிறது. உண்மைகளைப் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் யார் ஆட்சி அதிகாரத்தை பெற்றாலும் அந்த இடைவெளியை குறைப்பது எப்படி என்ற திட்டம் இருக்க வேண்டும். கடன் நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களின் படி செயல்படாமல் எந்த அரசாங்கமும் இயங்க முடியாது. வெளிநாட்டு கடன் உதவி பெறாமல் நாடு ஒரு அங்குலம் கூட முன்னேற முடியாது. இது எதுவுமே தெரியாமல் ஆட்சியை கவிழ்க்க தயாராகும் இளவரசர்களிடம் இதற்கான திட்டம் உள்ளதா என்பதை நாட்டுக்கு தெரிவிக்க வேண்டும்.

இந்த முறைகளுக்கு அப்பால் சென்று எவராலும் இந்த நாட்டை மீட்டெடுக்க முடியாது. அதனால் எதிர்வரும் இந்த ஜனாதிபதி தேர்தலில் பொருளாதார வீழ்ச்சியை மீட்டெடுக்கக்கூடிய வேட்பாளர் ஒருவரே அவசியம் என்றார்.

முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே, பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சம்பத் ஜயசிங்க உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் மலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

## தமிழக மீனவர்களது...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதேநேரம், என்னுடன் அரசியல் பேதங்களைக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் வாதிகள் அவற்றை மறந்து வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் விடயத்தில் இணைந்து செயற்படுவதற்கு தயாராக இருந்தால் தமிழகப் பயணத்தில் நான் பங்கேற்பதற்கு தயாராகவே உள்ளேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களை கண்டித்தும், அவற்றை தடுத்து நிறுத்தக்கோரியும் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளத்தினால் போராட்டம் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்னால் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அவ்விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாண கடற்றொழிலாளர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், மற்றும் சட்டவிரோதமான இழுவைப்படகு உள்ளிட்ட மீன்பிடியால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இந்த விடயம் சம்பந்தமாக நான் தொடர்ச்சியான கரிசனைகளைச் செலுத்தி வருகின்றேன். மேலும் குறித்த விவகாரத்தினை தீராப்பிரச்சினையாக நீடித்துச் செல்வதற்கு இடமளிப்பதற்கு நான் விரும்பவுமில்லை.

ஆகவே, உத்தியோக பூர்வமான பேச்சுவார்த்தைகள், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என்பனவற்றுக்கு அப்பால் வடமாகாணத்தில் உள்ள தமிழ் பேசும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தில் பங்கேற்பைச் செய்ய வேண்டும்.

அவர்கள் அனைவருக்கும் தமிழகத்தின் பல்வேறு அரச மற்றும் அரசியல் தரப்பினருடன் தொடர்புகள் காணப்படுகின்றன. அந்த தொடர்புகளின் ஊடாக எமது கடற்றொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

வெறுமனே, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுகின்றார்கள், இலங்கை கடற்படை தாக்குகின்றது என்ற விடயத்தினை மையப்படுத்திய பிரசாரங்களுக்கு அப்பால் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாலும், இழுவைப்படகு உள்ளிட்ட சட்டவிரோதமான மீன்பிடி முறைகளை பின்பற்றுவதாலும் ஏற்படுகின்ற இழப்புக்கள், வளப்பறிப்புக்கள் சம்பந்தமாக எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி, வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் அன்றாட மற்றும் எதிர்கால நிலைமைகள் ஆபத்துக்கு உள்ளாகியிருப்பதையும் எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

ஆகவே, இந்த விடயத்தில் அனைத்து அரசியல் தரப்பினரும் தமிழகத்துக்கு தெளிவு படுத்தல்களை மேற்கொண்டு இப்பிரச்சினைக்கான முற்றுப்புள்ளியைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

## பல்நோக்கு அபிவிருத்தி...

அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்குள் உள்வாங்கப்பட்ட போதிலும், அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் இரண்டு வருட காலமாக வழங்கப்படாமல் தற்காலிக நியமனத்திலே பணியாற்றி வந்தனர். இந்நிலையில் ஆளுநர் செந்தில் தொண்டமான், பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களை மாகாண சபைக்குள் உள்வாங்கி அவர்களுக்கான நிரந்தர நியமனங்ளை வழங்கி வைத்தார்.

## இலங்கையர்களுடன்...

வெளியிட்டுள்ளது. பெங்களூரில் இருந்து ஓமானுக்கு தப்பிச் சென்றுள்ள ஜலால் என்ற சந்தேகநபருக்கு குமார் என்ற சந்தேகநபர் உதவிகளை வழங்கியுள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த இருவரும் நெருங்கிய நண்பர்கள் எனவும் அவர்களுடன் தொடர்பை பேணிய மேலும் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்டுள்ளவர்கள் தலைமறைவாகியுள்ளதாக இந்திய மத்திய குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## A/L பரீட்சை...

தெரிவித்துள்ளார். 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் வாரத்தில் வெளியாகும் எனவும் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

## அமெரிக்க ஹுஸ்டன்...

த.விஜயலக்ஷ்மி இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். தமிழ் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு மையம் மூலம் பத்து மாணவர்கள் இதில் சேர்ந்துள்ளனர். இந்நிலையில் தமிழ் இருக்கை தலைவர் சாம் சொக்கலிங்கம் கண்ணப்பன் வரவேற்பு தெரிவித்துள்ளார். இந்திய தூதரக அதிகாரி மஞ்சுநாத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில், மாணவர்கள் இந்திய கலாச்சாரம் பற்றி விரிவாக தெரிந்து கொள்ள முடியும் என்று கூறியுள்ளதோடு பல்கலைக்கழக டீன் ஓ. கானர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இறுதியாக கலாநிதி த.விஜயலக்ஷ்மி அனைவருக்கும் வாய்ப்பு வழங்கியதற்காக நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

## இலங்கை மீதான...

வழங்கி இலங்கையை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. சீனாவின் குறித்த ஆதிக்கமானது அயல் நாடான இந்தியாவை சீண்டிப் பார்க்கும் ஒரு செயல்பாடாகக் காணப்படுகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பொருளாதார கலாசார மற்றும் சமூக நீதியான நீண்ட வரலாற்றைக் கொண்ட தொடர்புகள் இருக்கிறது . இவை எல்லாவற்றையும் கடந்து சீனா இலங்கை மீது பொருளாதார ரீதியான ஆக்கிரமிப்பைச் செலுத்துவது இலங்கையையும் இந்தியாவையும் பகையாளிகளாக்க பார்ப்பதற்கு செய்யும் ஏற்பாடாகும்.

## பாரதியாரின்...

அவர்களது தலைமையில் நிகழவிருக்கும் இந்நிகழ்வுக்கு, ஆன்மீக அதிதியாக வணக்கத்துக்குரிய நீலமாதவனானந்தஜீ மஹராஜ் அவர்களும் முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, பிரதம அதிதியாக கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம், சிறப்பு அதிதியாக இளைப்பாறிய பேராசிரியர் சி. மௌனகுரு ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் பாரதியாருடைய கவி வரிகளில் உருவாக்கப்பட்ட பாடல்களுக்கு இசையூட்டப்பட்டு இசை ஆற்றுகைகளாகவும் நடன ஆற்றுகைகளாகவும் இடம்பெறவுள்ளன. இதனை முன்னிட்டு கலாநிதி இராஜ்குமார் பாரதியின் மட்டக்களப்பு வருகையைத் தடம்பதிக்கும் முகமாக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முன்னால் அமைந்துள்ள பிரதான வீதியில் சுவாமி விபுலானந்தரினால் ஆராய்ச்சி செய்யப்பட்ட யாழ். ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 63 வயது வரை நீடிக்க... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம். சி.பி.எஸ். மோரோயஸ் ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தநிலையில் விசேட வைத்தியர்களின் சேவைக் காலத்தை 63 வயது வரை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், இது தொடர்பில் சுகாதார அமைச்சரினால் வெளியிடப்படும் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மனுவொன்றின் மூலம் நீதிமன்றில் முன்வைக்கப்படும் எனவும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

## கச்சதீவு உண்மையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

எடுக்கப்பட்டு செய்யப்பட வேண்டும் என்பது தான் எனது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் தாக்கி... (03 ஆம் பக்கத் தொடர்)

சார்பில் நுவரெலியா பிரதேச சபைக்காக வேட்பு மனு தாக்கல் செய்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பந்தகிரிய அநுக்கன்... (03 ஆம் பக்கத் தொடர்)

விவசாயிகளுக்கு இடையே மோதலை ஏற்படுத்தியுள்ளது. வீணே மலல ஆரைக்கு வடிந்து செல்லும் நீரை அநுக்கன் குளத்திற்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ விவசாயிகள் முன்னிலையில் நீர்பாசனத்துறை பொறியியலாளர்களுக்கு தொலைபேசி மூலம் ஆலோசனை வழங்கினார். ஒருங்கிணைந்த விவசாய அமைப்பு மற்றும் கிராமவாசிகளிடையே மோதலை ஏற்படுத்தி குளத்திற்கு தண்ணீரை வழங்க மாட்டோம் என கூறப்பட்ட ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தால் அதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் எனவும் மலல ஆரைக்கு சுதந்திரமாக வடிந்து செல்லும் நீரை குளத்துக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும். இருதரப்பாரினதும் மோதலை முடிவுக்கு கொண்டு வருமாறும் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும் பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார்.

## பாரிய மரம் விழுந்ததால் ... (03 ஆம் பக்கத் தொடர்)

நிலையில் பிற்பகல் முதல் போக்குவரத்திற்காக பாதை திறக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரம் வீழ்ந்ததினால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என அறிய வருகிறது.அருகில் இருந்த கடைகளுக்கு சிறிய சேதம் ஏற்பட்டிருந்தது.

சீரற்ற காலநிலை காரணமாக இன்னும் சில தினங்கள் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.(பா)

(படம் .எம்.எஸ்.பாஹிம்)

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்படுகின்றன. கட்சிக்குள் இழுபறி நிலை நடைபெறும் நிலையில் கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் மாநாட்டில் பங்கேற்கவில்லை என அறிய வருகிறது.(பா)

## லிட்ரோ எரிவாயு... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆகஸ்ட் 4 ஆம் திகதி இடம்பெற்ற எரிவாயு விலை திருத்தத்தில், விலை அதிகரிக்கப்படவிருந்த போதிலும், நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களை கருத்திற் கொண்டு விலையை திருத்தாமல் இருக்க லிட்ரோ நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.அதன்படி, தற்போது 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 2,982 ரூபாய்க்கும், 05 கிலோ எரிவாயு சிலிண்டர் 1,198 ரூபாய்க்கும், 2.3 கிலோ எரிவாயு சிலிண்டர் 561 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## பொலிஸாரின் தடுப்பினையும்... (03 ஆம் பக்கத் தொடர்)

முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செ.கஜேந்திரன் மற்றும் தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினர்கள், பொதுமக்கள என பெருமளவானோர் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழர் பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் அத்துமீறிய செயற்பாடுகளை நிறுத்துமாறும் பெரியகுளம் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சட்டவிரோத விகாரையினை நிறுத்துமாறும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

தமிழர்களின் வாழ்விடங்களை ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடும் இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையிலும் இலங்கை தொல்லியல் திணைக்களமும் அரசாங்கமும் இணைந்து திருகோணமலை பெரியகுளம் சந்தியில் விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த போராட்டம் நடாத்துவதை தடை செய்யும் வகையில் நிலாவெளி பொலிஸார் திருகோணமலை நீதவான் நீதிமன்றம் ஊடாக கட்டளையினைப் பெற்றிருந்த போதிலும் அதனையும் மீறி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நீதிமன்ற கட்டளையினை நிலாவெளி பொலிஸார் வாசித்த போதிலும் தங்களுக்கு சிங்களம் தெரியாது என போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நிலையில் மீண்டும் சிங்களத்தினால் நீதிமன்ற கட்டளை சட்டம் வாசிக்கப்பட்டு போராட்டத்தினை நிறுத்துமாறு பொலிஸாரினால் கோரப்பட்டது.

# நுவரெலியா இந்து கலாசார பேரவையின் ஏற்பாட்டில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு உலர் உணவு, பகல் உணவு





(நுவரெலியா தினகரன் நிருபர்)

டென்மார்க் ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னையின் மலையக விஜயத்தை முன்னிட்டு நுவரெலியா இந்து கலாசார பேரவையின் ஏற்பாட்டில் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று (3) ஞாயிற்றுக்கிழமை அன்னையின் கூட்டு பிரார்த்தனையும் பஜனையும் ஆசீர்வாதமும் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட நுவரெலியா, மாகாஸ்தோட்ட மற்றும் பம்பரக்கலை ஆகிய இடங்களில் இயங்கும் அறநெறி பாடசாலையைச் சேர்ந்த 265 மாணவர்களுக்கான உலர் உணவு பொதிகளும் 250 பெற்றோர்களுக்கு உடைகளும் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு 600 பேருக்கு பகல் உணவும் வழங்கப்பட்டது. இந்த செயற்பாட்டை நுவரெலியாவில் நடத்துவதற்கு நுவரெலியா இந்து கலாசார பேரவையின் உப தலைவரும் ஊடகவியலாளருமான எஸ். தியாகு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இவ் வைபவத்தில் டென்மார்க் ஸ்ரீ அபிராமி உபசாகி அன்னையும் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் நுவரெலியா இந்து கலாசார பேரவையின் தலைவர் ரெங்கன் பாலகிருஷ்ணன்,

செயலாளர் எம். பெரியசாமி உட்பட பெருந்திரளானோர் கலந்துக்கொண்டனர்.

இந்த வேலைத்திட்டம் மலையகத்தில் மாத்திரமல்ல யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதும் குறிப்பிடதக்கது.

# சப்ரகமுவ பாடசாலை பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு புரிந்துணர்வு






தம்சவிய தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்து பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி மற்றும் திறமைகளை மேம்படுத்தும் பொது உதான தேசிய கருத்திட்டத்தை சப்ரகமுவ மாகாணத்தில் முன்னெடுப்பதற்கான இருபக்க புரிந்துணர்வு உடன்படிக்கை மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் அண்மையில் கைச்சார்த்திடப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண மக்களின் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக மாகாணத்தில் காணப்படும் சகல வளங்களையும் சிறந்த முறையிலும் தரமாகவும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் சப்ரகமுவ முன் கொண்டு செல்லும் திட்டம் சப்ரகமுவ மாகாண ஆளுனர் நவீன் திஸாநாயக்கவின் அங்கீகாரத்துடன் முன்னெடுக்கப்படுகிறது. மனித எண்ணங்களையும திறமைகளையும் மேம்படுத்தி நிலைபேறான அபிவிருத்தி என்ற தொனிப் பொருளின்கீழ்இத்திட்டம்நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

அதற்கேற்ப, பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி மற்றும் திறமைகளை மேம்படுத்தும் பொது உதான தேசிய கருத்திட்டம் தம்சவிய தேசிய திட்டத்துடன் இணைந்து செயற்படுத்தப்படவிருக்கின்றது.

இது தொடர்பான இருபக்க புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சார்த்திடும் நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் மஹிந்த வீரசூரிய, மாகாண கல்விப் பணிப்பாளர் கே.டப்ளியூ.டி.யூ. சந்திரகுமார, ஆளுனரின் பிரத்தியேக செயலாளர் தேவகெதர விஜேரத்ன, தம்சவிய சர்வதேச மன்றத்தின் தலைவர் பி.ரி.எஸ் குணத்திலக்க உள்ளிட்ட பணிப்பாளர் சபையினரும் பங்குபற்றினர்.


hela

## ஹெல எப்பரல் ஹோல்டிங்ஸ் பீ எல் சியின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு (பதிவு இலக்கம்: PQ 00205151)

இவ்வறிவித்தலின் மூலம் அறியப்படுத்துவது யாதெனில் ஹெல எப்பரல் ஹோல்டிங்ஸ் பி எல் சியின் வருடாந்த பொதுக்ககூட்டம் 2023 செப்டம்பர் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை மெய்நிகர் AGM (வருடாந்த பொதுக்கூட்டம்) களை பொருந்தும் சட்டத்திட்டங்களுக்கமைய நடாத்துவதற்காக கொழும்பு பங்குச் சந்தை (CSE) வழங்கிய வழிகாட்டுதல்களுக்கு இணங்க, ஒலி மற்றும் ஒளி வழிகளின் மூலமாகவும், நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமான இல. 35, பலபொக்குண வீதி, கொழும்பு 06 இலிருந்து நடாத்தப்படும் ஒன்லைன் சந்திப்பாக மேற்கொள்ளவுள்ளது.

பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு, பதிலாள் படிவம், பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை, வருடாந்த பொதுக்கூட்டத்திற்கான பதிவுப் படிவம் மற்றும் வருடாந்த அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலுக்கான கோரிக்கைப் படிவம் ஆகியவற்றை ஸ்தாபனத்தின் இணையதளத்தில் (https://www.helaclothing.com/) தொகுத்து வழங்கப்பட்டுள்ளதுடன். கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்திலும் (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=HELA.N0000) **"அறிவிப்புகள்"** எனும் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. மெய்நிகர் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பதிவுசெய்வது மற்றும் பங்கேற்பது தொடர்பிலான வழிமுறைகளை மேற்கூறிய இணையதள தொடுப்புகளின் மூலம் தரவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட பதிவுப் படிவங்கள் பொதுக்கூட்டத்தை நடாத்த நியமிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணிநேரத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பங்குதாரர்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின், ஆடம் கொலின்ஸ் அவர்களை உத்தியோக நாட்களில் +94 77 026 2316 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளலாம் அல்லது hela_agm@helaclothing.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல்களை அனுப்பிவைக்கலாம்.

வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குபெற, அல்லது பங்குபெற மற்றும் வாக்களிக்க உரிமையுடைய பங்குதாரர்கள், மெய்நிகர் வருடாந்த பொதுக்கூட்டத்தில் மட்டும் பங்குபெற அல்லது மெய்நிகர் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குபெறும் பதிலாளை நியமித்து தமக்கு பதிலாக வாக்களிக்க வைக்க (பொருந்தும் வகையில்) உரிமையுண்டு.

வாரியத்தின் உத்தரவிற்கமைவாக
**ஹெல எப்பரல் ஹோல்டிங்ஸ் பி எல் சி**

**திரு ஜே. குஹநேசன்**
**ஸ்தாபனத்தின் செயலாளர்**

**2023 செப்டம்பர் 4 ஆம் திகதி**


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனிக்கிழமை 2023.09.02 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5225 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,369,480.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 9 1 9 1 9 1

**லக்கி 7 (Lucky 7)** — திகதி 02.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0051
வெற்றி இலக்கினம்: துலாம் — வெற்றி இலக்கங்கள் 9 5 6 4 5 0 — L7 இலக்கம் 0 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,495,983.76

**ராசி சுப பலன் (Handahana)** — சீட்டிழுப்பு திகதி 2023-09-02 — சீட்டிழுப்பு இலக்கம் 534 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம்: மீனம் — வெற்றி இலக்கங்கள் 04 31 33 34 — விசேட இலக்கினம்: மீனம்

**கொவிசெத (Govisetha)** — சீட்டிழுப்பு இலக்கம் 3467 — சீட்டிழுப்பு திகதி 2023.09.02 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,047,205.20
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 22 44 49 61 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 56825

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1573 — 02/09/2023 — Double Chance 03843 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,324,036.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 17 46 49 58
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — தேதி 2023/09/02 — சீட்டிழுப்பு இலக்கம் 1255 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,684,408.80
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 04 46 55 60 — விஷேசட ஆங்கில எழுத்து H — இலட்சாதிபதி Double Chance இலக்கம் 27484

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.09.01 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5224 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,811,344.00
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 1 4 3 6 8 6

**லக்கி 7 (Lucky 7)** — சீட்டிழுப்பு இலக்கம் 0050 — திகதி 01.09.2023 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,429,935.12
லக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 1 4 1 9 1
வெற்றி இலக்கினம்: விருச்சிகம் — L7 இலக்கம் 0 2
வெற்றி இலக்கங்கள் 8 6 1 4 1 3

7 Star எண்ணைப் பொருத்துவதன் மூலம் மோட்டார் சைக்கிள் வென்ற எண்கள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | 6 | 1 | 6 | 9 | 6 | 2 |
| 1 | 3 | 4 | 2 | 8 | 3 | 8 |
| 0 | 9 | 5 | 8 | 5 | 9 | 0 |
| 0 | 2 | 2 | 3 | 0 | 0 | 8 |
| 1 | 0 | 5 | 4 | 7 | 8 | 9 |
| 0 | 2 | 2 | 2 | 0 | 8 | 9 |
| 0 | 0 | 0 | 7 | 4 | 5 | 4 |

**ராசி சுப பலன் (Handahana)** — சீட்டிழுப்பு திகதி 2023-09-01 — சீட்டிழுப்பு இலக்கம் 533 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,682,800.40
வெற்றி இலக்கினம்: மீனம் — வெற்றி இலக்கங்கள் 11 23 31 48 — விசேட இலக்கினம்: மீனம்

**கொவிசெத (Govisetha)** — சீட்டிழுப்பு இலக்கம் 3466 — சீட்டிழுப்பு திகதி 2023.09.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,047,205.20
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 01 32 46 76 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 00422

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1572 — 01/09/2023 — Double Chance 69327 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,198,128.00
ஆங்கில எழுத்து Z — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 26 35 50 55
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — தேதி 2023/09/01 — சீட்டிழுப்பு இலக்கம் 1254 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,471,045.60
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 06 18 27 30 — விஷேசட ஆங்கில எழுத்து F — இலட்சாதிபதி Double Chance இலக்கம் 14465


SRI LANKA TOURISM DEVELOPMENT AUTHORITY
/sltda.gov.lk/ www.sltda.gov.lk




இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் அது சார்ந்த தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்துதல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றுடன் பணிபுரியும் அரசாங்க நிறுவனமாகும்.

சுற்றுலாத் துறையானது தேசிய அளவில் முக்கியமான பங்களிப்பாளராக அடையாளம் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்திற்கான பொருளாதாரத்திற்கு இந்தத் துறையானது மிக உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உயர் முதலீட்டாளர் திட்டங்களை நாட்டிற்கு ஈர்க்கிறது.

**கனிஷ்ட முகாமையாளர் / IT (மென்பொருள்)**
நிறுவனத்தின் மென்பொருள் பிரயோகங்களை அபிவிருத்தி செய்தல், அமுல்படுத்தல் மற்றும் ஒத்துழைத்தல்

**பணி**
- மென்பொருள் பிரயோகங்களைப் பயன்படுத்தி உள்வாரி மற்றும் வெளிவாரி பயனர்களை ஆதரித்தல்
- பயனர் பயிற்சி, வெளியீடுகளைப் பரீட்சித்தல், பதிப்பு, அபிவிருத்தி, CRs போன்றவை.
- குறைந்தபட்ச குறைபாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் தரநிலைகளுடன் மென்பொருள் பயன்பாடுகளை செயல்படுத்த உள்வாரி மற்றும் வெளிவாரி தரப்பினரை ஒருங்கிணைத்தல்
- திட்ட முகாமைத்துவப் பயிற்சி
- RPs SRS, CRகளை உருவாக்கி, கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் எதிர்பார்க்கப்படும் முடிவுகளை வழங்குதல்
- ஒருங்கிணைந்த மென்பொருளை உருவாக்க தேவையானபோது மற்ற குழுக்களுடன் நெருக்கமாக பணியாற்றுதல்
- தேவைப்படும்போது மென்பொருள்களின் சில பகுதிகளை உருவாக்குதல் (மூலக் குறியீடுகள் எழுதுதல்)

**நபர்**
அபேட்சகர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம்/ கணனி விஞ்ஞானத்தில் ஒரு இளமானிப் பட்டம் அல்லது
- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனத்தினால் தேசிய வாழ்தொழில் தரநிலை (NVQ) 7ஆம் நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது
- தேசிய வாழ்தொழில் தரநிலை (NVQ) 6ஆம் நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அரசாங்க, அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க சபை நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் தகைமைக்குப் பின் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம் அல்லது
- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனத்தினால் தேசிய வாழ்தொழில் தரநிலை (NVQ) 5ஆம் நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அரசாங்க, அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க சபை நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் தகைமைக்குப் பின் குறைந்தபட்சம் 10 வருடகால அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
- மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது "முகாமைத்துவ உதவியாளர்" (MA 1-2) தரம் II தொழில்நுட்பம் அல்லாத வகுதியில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**முக்கியமான திறன்கள் மற்றும் அனுபவம்**
- கணிசமான வணிக தரத்தில் முன் அனுபவம். மென்பொருள் அபிவிருத்தி அல்லது பயனர் ஒத்துழைப்பு
- செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் செயலாக்கங்களில் சிறந்த அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமைகள்**
- வாடிக்கையாளர் அல்லது / மற்றும் பயனர் ஒத்துழைப்பு திட்ட முகாமைத்துவத்திற்கு பொருத்தமானது.
- வெளிவாரி பங்குதாரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் / சர்வதேச அணிகளை நிர்வகிப்பதில் முன் அனுபவம்
- இயைபுடைய துறையில் 3+ வருட அனுபவம் மேலானதாகும்.
- சிறந்த தகவல் தொடர்புதிறன் (வாய்மொழி / எழுத்து), நல்ல பகுப்பாய்வுத் திறன், சிக்கலைத் தீர்க்கும் திறன் மற்றும் out of the box சிந்தனை கொண்ட குழு வீரராக இருத்தல் வேண்டும்.

**வயது**
- 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம் அளவு**
- ரூபா 43,355.00 - 10 x ரூபா 755.00 - 18 x ரூபா 1,135.00 ரூபா 71,335.00 (JM-1-1)

**உள்வாரி நிலை**
- ரூபா 43,355.00 + வாழ்க்கைச் செலவுப் படி + மாதாந்த கொடுப்பனவு

**அனுகூலங்கள்**
- ஊழியர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- தொழில் மேம்பாட்டிற்கான பயிற்சி (உள்நாடு மற்றும் வெளிநாடு)
- போக்குவரத்துக் கொடுப்பனவு
- தொலைபேசிக் கொடுப்பனவு

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் SLTDA இணையதளத்தின் பின்வரும் Link ஊடாக தரவிறக்கம் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
**https://www.sltda.gov.lk/en/careers.**

இந்தப் பதவிக்கான சரியான நபர் நான்தான் என நீங்கள் நினைத்தால் தயவு செய்து சுய தரவுகள் சகிதம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பங்குபற்றிய கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் வேலை அனுபவம் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் பெயர்களுடன் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவுசெய்து குறிப்பிடவும்.

அரச திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் / நியாயாதிக்க சபைகள் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,**
**80, காலி வீதி, கொழும்பு-03.**

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுக் கடன், காணி உறுதி வழங்கும் நிகழ்வு



அட்டாளைச்சேனை விசேட நிருபர்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" எனும் திட்டத்தின் கீழ் வீட்டுக் கடன் வழங்கும் நிகழ்வும், கடந்த கால வீட்டுத்திட்ட உரிமையாளர்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கலும் நேற்று அம்பாரை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யு.வீரசிங்க, ஏ.எல்.எம்.அதாஉல்லா, சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆர்.சூரியாராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாரை மாவட்டக் காரியாலயம் மற்றும் கல்முனை நகரக் காரியாலயம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கடந்த கால வீட்டுத்திட்டங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த 62 பேருக்கு வழங்கப்பட்டதுடன் உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் எனும் திட்டத்தின் கீழ் 110 பேருக்கு வீட்டுக்கடன் வசதிக்கான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல பிரதேசங்களிலுமுள்ளவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மேலும் பலருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டதுடன் வழங்கப்படாமல் உள்ள கடந்த கால வீட்டுத்திட்டங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாரை மாவட்டக் காரியாலய முகாமையாளர் திருமதி ஏ.பீ.ஐராங்கனி, கல்முனை நகரக் காரியாலய முகாமையாளர் ஜீ.கனகே, பொறியியல் உதவியாளர் ஏ.சி.ஏ.பாஹீம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# செங்கலடியில் நாலு கோடி ரூபாய் செலவில் கொங்கிரீட் பாதைகள் அமைப்பு

## அமைச்சர் பந்துல குணவர்தன திறந்து வைத்தார்





மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலகப்பிரிவின் கீழ் ரமேஷ் புரத்தில் சுமார் 4 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக் கப்பட்ட ஒரு கிலோ மீட்டர் நீளமான புதிய கொங்கிரிட் வீ திகளை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

வர்த்தக ராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முயற்சியில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீதி அபிவிருத்தி பணிகள் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டன குறித்த வீதி திறந்து வைக்கப்பட்டதையடுத்து பொதுமக்களின் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

ராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் இங்கு விசேட கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அமைச்சர் கருத்து வெளியிடுகையில்;

பல்வேறு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் பாவனைக்குத் தேவையான அதி முக்கியமான வீதி அபிவிருத்திப் பணிகளை தற்பொழுது அரசாங்கம் மேற் கொண்டு வருகின்றது.

எதிர்வரும் அக்டோபர் மாதத்தின் பின்னர் சர்வதேச நாட்டு உதவிகள் சீர் செய்யப்பட்டதன் பின்னர் மக்களின் தேவைக்கேற்ப வீதி அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக இங்கு அமைச்சர் தெரிவித்தார்.

செங்கலடி பிரதேச செயலாளர் எஸ். தனபாலசிங்கம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எஸ். சிவகுமார், மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் பொறி யியலாளர் பி. பரதன் உள்ளிட்ட அதிகாரிகளும் பிரதேச முக்கியஸ்தர்களும் இதில் கலந்து சிறப்பித்தனர்.





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் (02) கண்டி அஸ்கிரிய மஹா நாயக்க தேரர், மல்வத்து மஹா நாயக்க தேரர் ஆகியோரை சந்தித்து ஆசி பெற்றதை படத்தில் காணலாம்.

தம்பலகாமம் குறூப் நிருபர்

## பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்தவர்களுக்கு அபராதம்

ஒலுவில் விசேட நிருபர்

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனைக்காக வைத்திருந்த 03 உணவக உரிமையாளர்களுக்கு எதிராக பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் ஸமட் தெரிவித்தார்.

உணவகங்கள், பேக்கரிகள், ஹோட்டல்கள், உணவு கையாளும் நிலையங்கள் ஆகியவற்றில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே விற்பனைக்காக பாவனைக்குவதவாக உணவுப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டு உணவக உரிமையாளர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாக தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிவுறுத்தலுக்கமைய உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள், போன்றவை பரிசோதிக்கப்பட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும் உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை பாவிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனை மீறி செயற்படும் உணவகங்கள் கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்தவர்களுக்கு அபராதம்



வடகிழக்கு யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர்களின் உறவுகளுக்கான விசாரணை தம்பலகாமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (03) இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஶ்ரீபதி தலைமையின் கீழ் நடைபெற்ற இவ் வாக்குமூலம் பதிவில் தம்பலகாமம், கிண்ணியா, திருகோணமலை பட்டினமும் சூழலும்,மொறவெவ ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளை சேர்ந்த காணாமல் போனவர்களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக ஆணைக்குழு முன்னிலையில் வாக்கு மூலம் அளித்தனர். இங்கு சுமார் 22 க்கும் மேற்பட்டவர்கள் வாக்கு மூலம் அளித்தனர். இதில் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக ஆணையாளர் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## போதைப் பொருள் பாவனைக்கு எதிரான தன்னெழுச்சிப் பிரகடனம்





'போதைப் பொருளற்ற தூய அக்கரைப்பற்று நகரை உருவாக்கும் நோக்கில் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கெதிரான தன்னெழுச்சிப் பிரகடனம் (01.09.2023) வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுரச் சதுக்கத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாயல்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் ஏற்பாட்டில் ஜூம்ஆ தொழுகையைத் தொடர்ந்து அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்க் சித்தீக் தலைமையில் இடம்பெற்ற இப்பிரகடன நிகழ்வில் இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் , பொது மக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அக்கரைப்பற்று பிரதேசத்திலிருந்து முற்றாக போதைப் பொருளை ஒழித்தல், போதைப் பொருள் பாவனை, விற்றல், வாங்குதல், அதற்கு உதவி புரிதல் ,அவற்றோடு தொடர்புடையவர்களை பகிரங்கப்படுத்துதல், அவர்கள் தொடர்பான திருமணம் மற்றும் மரணச் சடங்கு போன்றவற்றில் கலந்து கொள்வதை தவிர்த்துக் கொள்ளல் உள்ளிட்ட ஆறு அம்சங்களை உள்ளடக்கிய தன்னெழுச்சி பிரகடனமொன்றையும் செய்து கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரிடம் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது .

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாயல்கள், ஜம்மியத்துல் உலமா சபையின் அக்கரைப்பற்றுக் கிளை, வர்த்தகர் சங்கங்கள், தஃவா நிறுவனங்கள், சிவில், சமூக நிறுவனங்கள், அக்கரைப்பற்று இளைஞர் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் என்பன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாத்துறை அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக சர்ஜூன்

அஷ்ரப் ஏ சமத்



கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள சுற்றுலாத்துறை அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக சர்ஜூன் அபுபக்கர் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானி னால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் அன்மையில் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்தில் வைத்து ஆளுனரினால் வழங்கப்பட்டது.

சர்ஜூன் தனது இளமை பருவத்திலிருந்தே பல பதவிகளில் சேவையாற்றியுள்ளார். இவர் பல்வேறு அமைச்சுகள் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரின் சிபார்சின் பேரிலும் கிழக்கு சுற்றுலாத்துறை சபையின் உப தலைவர் மற்றும் கிழக்கு மாகணத்தின் முதலீடு பொருளாதார கொன்வன்சன் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டு அத்துறையில் திறம்பட சேவையாற்றினார். முன்னாள் பிரதமர் அலுவலகத்தினால் கிழக்கு மாகாணத்திற்கான நனசல ஐ.சீ.ரீ. தொழில் நுட்ப தகவல் நிலையங்களை கிழக்குக்கு அமைப்பதற்கு திட்ட இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வீடமைப்பு நிர்மாணத்துறை கிழக்கு அபிவிருத்தி அமைச்சர் பேரியல் அஷ்ரப் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள நிமோ தேசிய இயந்திர பொறியியல் நிறுவனத்திலும் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

சுற்றுலாத்துறை வனவள கிறிஸ்தவ அமைச்சர் ஜோன் அமரதுங்கவினால் ஶ்ரீலங்கா கொன்வென்சன் நிலையத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டு சேவையாற்றினார்.



மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் "தென்றல்" சஞ்சிகையின் 60ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வில் (2023.09.02) கிழக்கிலங்கையின் மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல். எம் சலீமுக்கு "வீசு தென்றல்" விருது வழங்கப்பட்டது. இவ் விருதினை இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரியும். கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளருமான கலாநிதி மூ.கோபாலரெத்தினம் மூத்த ஊடகர் ஏ.எல்.எம். சலீமிற்கு வழங்கி கௌரவித்தார்.

## கிண்ணியா நத்வதுல் புகாரி அரபுக் கல்லூரி மண்டபத்தில் பொலிஸ் தினம்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157வது பொலிஸ் தினத்தை முன்னிட்டு கிண்ணியா பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட துஆப் பிரார்த்தனை (03) கிண்ணியா நத்வதுல் புகாரி அரபுக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. நத்வதுல் புஹாரி அறபு கல்லூரியின் அதிபர் மௌலவி எஸ்.முனீர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன பிரகமன்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பெர்ணாண்டோ மற்றும் கிண்ணியா உலமா சபை, பொலிஸ் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள்,அறபிக் கல்லூரி மாணவர்கள் உலமாக்கள் என பலர் கலந்து கொண்டனர்.இந் நிகழ்வில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஐந்து குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

# யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் கண்காட்சி "Industry Jaffna Edition- 2023"





**பு.கஜிந்தன்**

"Industry Jaffna Edition2023" என பெயரிடப்பட்ட கைத்தொழில் உற்பத்தி கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

குறித்த கண்காட்சி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய கலாச்சார மத்திய நிலைய வளாகத்தில் இடம்பெற்றது. கைத்தொழில் அமைச்சும், கைத்தொழில் அதிகாரசபையும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் திஸாநாயக்க கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கலந்துகொண்டார். குறித்த நிகழ்வில் திணைக்களம் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள், கைத்தொழில் அதிகார சபை அதிகாரிகள், ஊழியர்கள், உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது, இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கைத்தொழில் உற்பத்தி கண்காட்சிக்கூடத்தை பார்வையிட்டனர். இக் கண்காட்சி கூடத்தில் நாடளாவிய ரீதியிலிருந்து வருகை தந்த கைத்தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்திகளை காட்சிப் படுத்தியதுடன் சந்தைப்படுத்தலிலும் ஈடுபட்டனர்.

## வடக்கின் உதயம்

# புதிய மேற்பார்வைப் பொதுசுகாதாரப் பரிசோதகராக ஜென்சன்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் புதிய மேற்பார்வைப் பொதுசுகாதாரப் பரிசோதகராக ஆ.ஜென்சன் றொனால்ட் பதவி உயர்வு பெற்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

எழுத்தாளர், கவிஞர் சூரியநிலா என அறியப்படும் பொதுசுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் யாழ் பல்கலைக்கழகத்தின் சுகாதார முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணிப் பட்டதாரியாவார். இவர் தனது பதினாறு வருடகால பொதுச்சுகாதார சேவையில் கொடிகாமம், எழுதுமட்டுவாழ், பருத்தித்துறை மற்றும் மந்துவில் பொதுசுகாதார பிரிவுகளில் பொது சுகாதார பரிசோதகராக கடமையினை ஆற்றியிருந்தார்.

தற்போது வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர் பதவிக்கான நேர்முகத் தேர்வினூடாக தெரிவுசெய்யப்பட்டு வெற்றிடமாகவிருந்த பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகராக(SPHI) வெள்ளிக்கிழமை(01.09.2023) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இவரால் அண்மையில் ஐந்து நூல்கள் ஒரேதடவையில் வெளியிடப்பட்டதோடு அதில் நான்கு நூல்கள் சுகாதார மேம்பாடு தொடர்பான நூல்களாகும்.

இதுவரை இவரால் வெளியிடப்பட்ட பதின்மூன்று நூல்களில் ஐந்து நூல்கள் சுகாதார மேம்பாட்டு நூல்களாகும். இதில் "சுகவிழி" எனும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தலுக்கான நூலுக்கு மாகாண மட்ட அறிவியலுக்கான விருதும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொடிகாமப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போதே 32வயதான இளைஞன் ஒருவர் 240கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதாகியுள்ளார்.

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்தின தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்றது.

குறித்த ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பொலிசார் கற்பூரம் ஏற்றி தேங்காய் உடைத்து கலந்து கொண்டனர். இவர்கள் சிவில் சமூகத்தினருடனும் கலந்துரையாடி ஆலய பிரசாதங்களையும் வழங்கி வைத்தனர். இதன்பொழுது வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் மகிந்த குணரத்தின, யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்ன, காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் , பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் சமூகத்தினர் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பிராந்திய தேர்தல்கள் அலுவலகம் திறப்பு!




**பு.கஜிந்தன்**

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பிராந்திய தேர்தல்கள் அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இவ் அலுவலகம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பிராந்திய தேர்தல்கள் அலுவலகம் யாழ்ப்பாணம் பழைய பூங்காவிற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதம அதிதியாக தேர்தல்கள் திணைக்கள நாயகம் தவிசாளர் க. ஸ்ரீ சமன் ஸ்ரீ ரத்தனநாயக்க இதில் அதிதியாக கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்தார்.

இக்கட்டிடத்திற்கு 2019 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. 08 மில்லியன் ரூபா செலவில் இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

இதில் தேர்தல்கள் திணைக்கள செயலாளர் ஆர்.ப.கேரத், தேர்தல்கள் திணைக்கள உறுப்பினர் ஏ.பாயிஸ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆ.அமல்ராஜ், பிரதேச செயலாளர்கள், உதவி தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# "மூச்சு" குறுந்திரைப்படத்தின் ஆரம்ப பூஜை




**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் நட்சத்திரமஹால் பெருமையுடன் வழங்கும், கலைஞானி கே.ரி.குமரநாதனின் "மூச்சு" குறுந்திரைப்படத்தின் ஆரம்ப பூஜை நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

வரணி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி குறுந்திரைப்பட ஆரம்ப விழாவில் இந்து மத குரு, குறுந்திரைப்பட இயக்குனர் கே.ரி குமரநாதன், சமூக சேவகரும் நிதிப் பங்களிப்பாளருமான பரமானந்தம், தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் க.ஈஸ்வரன், மட்டுவில் கமலாசினி வித்தியாலய முதல்வர் கே.சந்திரகுமார், சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

எழுத்து, இயக்கம்,தயாரிப்பு மற்றும் பாடல் உருவாக்கம் கலைஞானி கே.ரி.குமரநாதன், உதவி இயக்கம் கே.பி.ரூபில், கலை இயக்கம் ம.அனோஜன், சண்டைப் பயிற்சி சி.யர்சிலீன், ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு பி.செல்வம், இசை அருணா கேதீஸ் மற்றும் போஸ்ரர் வடிவமைப்பு ஞா.தனிஸ் ஆகியோரின் கூட்டிணைவுடன் கல்வி கற்பதற்கு வறுமை தடை இல்லை என்ற மண் சார்ந்த பிரச்சனையை வெளிக் கொண்டுவரும் வகையில் "மூச்சு" குறுந்திரைப்படம் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய ரோலர்களை கட்டுப்படுத்துங்கள் கடற் தொழிலாளர் சங்கங்கள் போராட்டம்



**கோப்பாய் குறூப் நிருபர்**

சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய ரோலர்களை கட்டுப்படுத்துமாறு 01) வெள்ளிக்கிழமை யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் ஒன்றிணைந்து யாழ் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் இந்தியாவிலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் ரோலர் படகுகள் தொடர்ச்சியாக எமது வாழ்வாதாரத்தை அழிக்கின்றனர்.

எமது வாழ்வாதாரத்தை பாதுகாத்து தருமாறு பல வருடங்களாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தோம் பயன் கிட்டவில்லை. அது மட்டும் அல்லாது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் பலமுறை இந்திய ரோலர்களை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தோம் ஆனால் தொடர்ந்தும் இந்தியா ரோலர் எமது பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. ஆகையால் தற்போது இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைப்பதற்காக யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மஜகரைக் கையளித்துள்ளோம். எமது கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் எமது போராட்டம் வேறு வடிவில் மாற்றப்படும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் ஆட்கடத்தலில் ஈடுப்பட்ட ஐவர் கைது

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் ஆட்கடத்தலில் ஈடுப்பட்ட குற்றச்சாட்டில், கிளிநொச்சி, கனகாம்பிகை குளம், கரடிப்போக்கு சந்தி, பரந்தன் ஆகிய பகுதிகளை சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய ஐந்து இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கல்வியங்காட்டு பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர், வான் ஒன்றில் வந்த கும்பலால் கடத்தி செல்லப்பட்டுள்ளதாக, நேற்று முன் தினம் சனிக்கிழமை உறவினர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து வான் ஒன்றில் யாழ்ப்பாணம் வந்த 12 பேர் அடங்கிய கும்பலே வியாபாரியை கடத்தி சென்றதாக உறவினர்கள் முறையிட்டுள்ளனர். கடத்தப்பட்ட நபர் , நபர் ஒருவரிடம் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணம் வாங்கியதாகவும், அதனை மீள செலுத்தாத நிலையில் இரு தரப்புக்கும் இடையில் பிரச்சனை நிலவி வந்த நிலையில், குறித்த நபர் கடத்தப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்நிலையில், கடத்தல் கும்பல் கிளிநொச்சியில் மறைந்திருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில், கிளிநொச்சிக்கு விரைந்த பொலிஸார் கடத்தல் கும்பலை கைது செய்துள்ளதுடன், கடத்தப்பட்டவரையும் மீட்டுள்ளனர்.

# சிங்கப்பூரில் 70 வீத வாக்காளரின் அமோக ஆதரவுடன் ஜனாதிபதி ஆசனத்தில் அமரும் தர்மன் சண்முகரத்தினம்

## இலங்கை வம்சாவளியான தர்மனின் பாட்டனார் யாழ். ஊரெழுவைச் சேர்ந்தவர்

சிங்கப்பூரில் கடந்த 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிங்கப்பூரின் முன்னாள் துணைப்பிரதமரான தர்மன் சண்முகரத்தினம்(வயது 66) அமோக வெற்றி பெற்றார். தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று ஒன்பதாவது ஜனாதிபதியாக அமோக வெற்றி பெற்றுள்ளார்.



அந்நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மற்றைய இரண்டு போட்டி வேட்பாளர்களை விட மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை அவர் பெற்றுள்ளார்.

தர்மன் சண்முகரத்தினத்தின் இந்த வெற்றியானது ஆளும் மக்கள் செயல் கட்சிக்கு (PAP – People's Action Party) ஒரு ஊக்கம் தரும் என்று பார்வையாளர்கள் தெரிவித்தனர். கட்சி சார்பற்ற ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்காக முன்னாள் நிதியமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் தனது பதவியை ராஜினாமா செய்வதற்கு முன்பு நீண்ட காலமாக PAP பிரமுகராக இருந்தார்.

அவர் பொருளாதார நிபுணர் ஆவார். சிங்கப்பூர் நகரத்தின் திரட்டப்பட்ட நிதி இருப்புக்களை முறையாக மேற்பார்வையிடுவது மற்றும் சில நடவடிக்கைகளை வீட்டோ செய்வது மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆய்வுகளை அங்கீகரிப்பது போன்ற கடுமையான திறமைகள் இந்தப் பதவிக்கு தேவைப்படுகின்றன.

“சிங்கப்பூர் மக்களின் வாக்களிப்பினால் நான் தாழ்மையுடன் இருக்கிறேன். இந்த வாக்களிப்பு எனக்கு வெறும் வாக்களிப்பு மட்டும் அல்ல, இது சிங்கப்பூரின் எதிர்காலத்திற்கான வாக்களிப்பு ஆகும். நாம் அனைவரும் ஒன்றாக முன்னேறக்கூடிய ஒரு எதிர்காலத்திற்கான நம்பிக்கையின் வாக்கெடுப்பு” என்று அவர் கூறினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிங்கப்பூர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தர்மன் சண்முகரத்தினத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியை பூர்வீகமாகக் கொண்டவர் தர்மன் சண்முகரத்தினம். சிங்கப்பூர் நாட்டின் நிதி அமைச்சராகவும், துணை பாதுகாப்பு அமைச்சராகவும், துணை பிரதமராகவும் பதவி வகித்தவர் அவர்.

இந்நிலையில் இவருக்கு போட்டியாக ஜனாதிபதி வேட்பாளராக இருவர் களமிறங்கிய நிலையில் இருவரும் 20 வீத வாக்குகளை கூட பெறாத நிலை காணப்பட்டது. இவரது தாய் மற்றும் பாட்டனார் யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியை பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




சீன வம்சாவளியை சேர்ந்தவரும் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவருமான காக்சோங், டான்கின் லியான் ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மற்றைய இருவருமாவர். ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்பட்டது. ஆனாலும் தர்மனுக்கு அமோக ஆதரவு கிடைத்துள்ளது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தர்மன் சண்முகரத்னம் கடந்த 2001இல் சிங்கப்பூரின் ஜூரோங் தொகுதியில் இருந்து எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார். சிங்கப்பூர் நாணய வாரியத்தின் தலைவர், பிரதமரின் ஆலோசகர், நிதியமைச்சர், கல்வி அமைச்சர், துணை பிரதமர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ள இவருக்கு இந்த ஜனாதிபதி தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சி ஆதரவு அளித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி பொதுமக்களே நேரடியாக ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட்ட பின்னர் நடந்துள்ள மூன்றாவது தேர்தல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

1957 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் பிறந்தவர் தர்மன். இவரது பாட்டனார் யாழ்ப்பாணம் ஊரெழு என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.


**சர்வதேச போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்க கேள்விமனு 4488T**

**LEVER CHAIN HOISTS இன் வழங்கல்**

விலைமனு ஆவணத்தின் கீழ் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்த மேல் குறிப்பிடப்பட்ட உருப்படியின் வழங்கலுக்காக புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள், அவர்தம் அதிகாரம் பெற்ற வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது (உற்பத்தியாளர்களின் அல்லது ஏற்றுமதியாளர்களின்) அவர்தம் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடம் இருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2023 செப்டெம்பர் 25 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணி வரை கொழும்பு – 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு அல்லது களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றில் 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டும் என்பதோடு மக்கள் வங்கியின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கு இலக்கத்திற்கு கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரர் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு ரொக்கப்பணத்திலும் கட்டணத்தை செலுத்த முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்பை கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளங்களில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக விலைமனு ஆவணங்களை கீழ் குறிப்பிடப்பட்ட இடத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி 1430 மணி வரை திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு அதன் பின் உடனடியாக சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொ.: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**



**LUMINEX PLC பொது நிறுவனம்**
**PQ 00243223**

**நிறுவனத்தின் 17வது வருடாந்த பொதுக் கூட்டம் தொடர்பாக விடுக்கப்படும் அறிவித்தல்**

LUMINEX PLC பொது நிறுவனத்தின் 16வது வருடாந்த பொதுக் கூட்டம் 2023 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிகழ்நிலை (online) முறையின் கீழ் நடாத்தப்படவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் 2023 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நடக்கவுள்ள 17வது பொதுக் கூட்டத்திற்கு நிகழ்நிலை முறையில் பதிவு செய்துகொள்ள எதிர்பார்க்கும் பங்குதாரர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை அடக்கிய மேலதிக சுற்றுநிருபம், கூட்டம் பற்றிய அறிவித்தல் மற்றும் form of proxy என்பன கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் பங்குரிமையாளர்கள் கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளம் மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தில் (https://www.luminexpl.cpm/finance) பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல் படிவத்தைப் பூர்த்தி செய்து நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு (இல. 24, காலி வீதி, மொரட்டுவ) அல்லது registrars@cse.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு 36 மணித்தியாலத்திற்கு முன் அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

வருடாந்த அறிக்கையின் அச்சுப் பிரதி அல்லது இறுவட்டு இந்த வருடத்தில் வழங்கப்பட மாட்டாது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

**RNH Holdings (Private) Limited**
**நிறுவனச் செயலாளர்,**
**'RNH ஹவுஸ்', இல. 622பீ,**
**கோட்டே வீதி, கோட்டே.**



**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

**பேருந்து பயணிகள், பேருந்து உரிமையாளர்கள், பேருந்துகளில் சேவையாற்றும் அனைத்து பணியாளர்கள் மற்றும் ஏனைய பொது மக்களது கவனத்திற்கு**

**பேருந்து கட்டணத்தில் திருத்தம்**

**2023.08.31** ஆம் திகதி நள்ளிரவு முதல் எரிபொருள் **(லங்கா வெள்ளை டீசல்) லீற்றர் ஒன்றின் விலை 35.00 ரூபாவால்** அதிகரிக்கப்பட்டுள்ளதற்கேற்ப பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து பேருந்துகளினதும் சேவைக்கான அனுமதிக்கட்டணம் **நூற்றுக்கு நான்கு தசம் பூச்சியம் ஒன்று (4.01%)** விகிதம் அதிகரித்துள்ளது.

அதற்கேற்ப **2023.09.03ஆம் திகதி 0001 மணி** முதல் இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் இயங்கும் பேருந்துகள் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு / வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இயங்கும் தனியார் பேருந்துகளில் செயற்படுத்தப்பட வேண்டிய பேருந்து கட்டண சுற்றறிக்கை மற்றும் மாகாணங்களுக்கிடையிலான பேருந்து சேவைகளின் பூரண பேருந்து கட்டணத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ இணையத்தளமான **www.ntc.gov.lk** ஊடாக பார்வையிடலாம் / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பயணிகளிடமிருந்து அறவிடக்கூடிய நியமிக்கப்பட்ட பேருந்து கட்டணத்திற்கும் அதிகமான கட்டணம் பேருந்து நடத்துனர்களால் அறவிடப்படுமாயின் அவர்கள் தொடர்பில் சட்டரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு


# கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வு





கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் மற்றும் வகுப் நியாய சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதியுமான கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ.றெளசுல் ஹாதி தலைமையில், நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாயசபை நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், கல்வியியலாளர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் மற்றும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. றெளசுல் ஹாதி ஆகியோருக்கு நிகழ்வுக்கு வருகை தந்த அதிதிகள் புடைசூழ சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் பொறியியலாளர் ஏ. ஹிபத்துல் கரீம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இதன் போது ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் எழுதிய 'LAW OF ACTIONS' என்ற நூலின் அறிமுக நிகழ்வு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.




**கேள்விமனு அறிவித்தல்**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுத்திகரிப்புப் பிரிவு**

**இ.பெ.கூ. சுத்திகரிப்புப் பிரிவுக்காக துப்புரவேற்பாட்டு சேவைகளின் வழங்கல்**

**Public Tender REF – PD/SER/03/2023**

2023.11.21ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் 12 மாதங்களுக்காக "இ.பெ.கூ. சுத்திகரிப்புப் பிரிவுக்காக துப்புரவேற்பாட்டு சேவைகளின் வழங்கலுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகுதி மற்றும் தகைமை அளவுகோல்களை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

இந்த விலைமனுக்களை http://ceypetco.gov.lk/public-tenders/ என்ற இ.பெ.கூ. இணையதளத்தில் இருந்து விலைமனு ஆவணத்தை தரவிறக்கம் செய்ய முடியும். மக்கள் வங்கியின் (தலைமை அலுவலகம்) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கு இலக்கத்திற்கு 1,000.00 ரூபா (ரூபா 848.36 + 2.5% SSCL + 15% VAT) கட்டணத்தை செலுத்த வேண்டும் என்பதோடு கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை விலைமனுவுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் 2023.09.15ஆம் திகதி சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தளப் பயணத்திற்கு பங்கேற்க கோரப்படுகின்றனர்.

விலைமனுவை ஏற்பது 2023.09.25 ஆம் திகதி நிறைவடைவதோடு அது முடிவுற்ற பின் உடனடியாக கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன, முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனு திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**C/o முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியங்கள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆவது மாடி, இல. 609,**
**டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 09.**



**பெறுகை அறிவித்தல்**

**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் அத்தியாவசிய பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளல்**

முல்லேரியா, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்காக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து 2023-09-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | உருப்படி | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 01 | Repairing of damaged floor tiles in Dish washing area, Windows, Canopy and Damaged ceiling in Kitchen | 3,000.00 |
| 02 | Renovation of Roof and other repairing works of Nursing Quarters | 5,000.00 |

ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் அத்தியாவசிய பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளல்'' எனக் கட்டாயம் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

2023-09-03ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் தமது தகைமைகளை உறுதி செய்வதற்கான அத்தாட்சிகள் மற்றும் விலைமனுக் கட்டணத்தைச் செலுத்தியதற்காக இந்த வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் வேண்டுகோள் கடிதத்தைச் சமர்ப்பித்து பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் தேவையானால் இந்த காலத்தினுள் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

இரு நகல்களில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரிக் கொண்டு வந்து பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை பணிப்பாளரைத் (தொலைபேசி 011-2578226) தொடர்பு கொள்ளவும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை,**
**முல்லேரியா புதிய நகரம்.**


# பேத்தாழை பொதுநூலகத்தின் மாதாந்த நிலாமுற்றத்தின் 30ஆவது ஒன்றுகூடல்




வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள பேத்தாழை பொதுநூலகத்தின் விபுலானந்தர் வாசகர் வட்டத்தினால் கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'நிலாமுற்றம்' எனும் கலை, இலக்கிய சங்கமமானது கடந்த 30.08.2023 அன்று 30 ஆவது ஒன்றுகூடலாக அமைந்திருந்தது.

நூலகப் பொறுப்பாளர் மரகதம் பிரகாஷின் ஒருங்கிணைப்புடன் பிரதி பௌர்ணமி தினங்களில் நூலக முற்றத்தில் இலக்கிய ஆர்வலர்கள், கலைஞர்கள், மாணவர்கள் என பலரும் கூடியிருந்து கலந்துரையாடும் குறித்த நிகழ்வில், எழுத்தாளர்களது படைப்புக்கள் தொடர்பான வாசிப்பு அனுபவப் பகிர்வு பிரதான அம்சமாக இடம்பெற்று வருகின்றது.



அந்தவகையில் முப்பதாவது நிலாமுற்ற நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களினால் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்ததுடன் ஆரம்பமானது.

குறித்த இந்நிகழ்வானது மட்டக்களப்பினைச் சேந்த கவிஞர் அழகு தனு எழுதிய கூடி 'மகிழ்வோம்', 'மழலை மொழிகள்' ஆகிய இரு சிறுவர் பாடல் நூல்களினதும், மன்னாரைச் சேர்ந்த கவிஞர் எம்.டிவைன்சி எழுதிய 'புரட்சினி(நீ)' கவிதை நூலினதும் வாசிப்பு அனுபவப் பகிர்வாக அமைந்திருந்தது.

விபுலானந்தர் வாசகர் வட்டத்தின் உறுப்பினர்களான செல்வி.சி.சுவினாவினால் கவிஞர் அழகு தனு தொடர்பான அறிமுகம் நிகழ்த்தப்பட்டதோடு, அவரது நூல்கள் மீதான வாசிப்பு அனுபவத்தினை செல்வி கேணியூர் நிதா நிகழ்த்தியிருந்தார்.

கவிஞர் டிவைன்சி தொடர்பான அறிமுகத்தினை செல்வி தமிழூராள் அனுஸ்திகா நிகழ்த்த, அவரது கவிதைநூல் தொடர்பான வாசிப்பு அனுபவத்தை செல்வி யோ.சிவனந்தினி நிகழ்த்தியிருந்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களது கலைநிகழ்வுகளும் முற்றத்தை அலங்கரித்திருந்தன. நிலாமுற்றத்தின் விசேட அம்சமாக நிகழ்வுகளில் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்தவகையில், முப்பதாவது நிலாமுற்ற கலை நிகழ்வுகளில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்களை ஓய்வுநிலை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் வழங்கி வைத்ததோடு, நூலகத்திற்கு தனது படைப்புகள் அடங்கிய ஒரு தொகுதி நூல்களையும் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மரகதம் பிரகாஷ்

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை (கேள்வி) அறிவித்தல்

### திஸ்ஸமஹாராம பிரதேச சபை

### ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் – 2024ஆம் வருடம்

01. திஸ்ஸமஹாராம பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களை 2024ஆம் வருடத்தில் குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. கேள்விப்படிவம் வழங்குதல் - 2023-09-04ஆம் திகதி முதல் 2023-09-21ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் தேசிய அடையாள அட்டை / சாரதி அனுமதிப்பத்திரம் / செல்லுபடியாகும் வெளிநாட்டு பயணக் கடவுசீட்டு மற்றும் கிராம சேவையாளரின் சான்றிதழைச் சமர்ப்பித்து திஸ்ஸமஹாராம பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 2023-09-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை
04. கேள்விப்படிவம் திறக்கப்படுதல் - 2023-09-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு

- ❖ கேள்விப் படிவங்களை பதிவுத் தபாலில் அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடலாம்.
- ❖ கேள்வி நிபந்தனைகள் கேள்விப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- ❖ மேலதிக விபரங்களை 047-2237275 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | குத்தகை விடயம் | ஆகக் குறைந்த கேள்வி (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் பிணைத் தொகை (ரூபா சதம்) | படிவக் கட்டணம் (ரூபா சதம்) |
|---|---|---|---|---|
| 01 | பன்னேகமுவ பொதுச் சந்தை மற்றும் மலசலகூடம் | 1,646,000.00 | 50,000.00 | 5,000.00 |
| 02 | தெபரவெவ பொதுச்சந்தை மற்றும் மலசலகூடம் | 2,079,581.00 | 50,000.00 | 5,000.00 |
| 03 | கிரிந்த புனித நகர வாகனத் தரிப்பிடம் | 1,096,939.00 | 10,000.00 | 500.00 |
| 04 | திஸ்ஸமஹாராம புனித நகர வாகனத் தரிப்பிடம் | 495,882.00 | 5,000.00 | 500.00 |
| 05 | கிரிந்த புனித நகர பழைய மலசலகூடம் மற்றும் புதிய மலசலகூடம் | 109,000.00 | 3,000.00 | 500.00 |
| 06 | கிரிந்த கடற்கரை மலசலகூடம் மற்றும் குளிக்கும் இடம் | 165,800.00 | 2,000.00 | 500.00 |
| 07 | திஸ்ஸமஹாராம புனித நகர மலசலகூடம் | 138,500.00 | 3,000.00 | 500.00 |
| 08 | திஸ்ஸமஹாராம பஸ்நிலைய புதிய மலசலகூடம் | 16,000.00 | 1,000.00 | 500.00 |
| 09 | திஸ்ஸமஹாராம புனித நகர வாகனத் தரிப்பிட தேங்காய் விளைச்சல் (08 தென்னை மரங்கள்) | 9,600.00 | 1,000.00 | 500.00 |
| 10 | தெபரவெவ மீன்பிடிச் சந்தை | 120,000.00 | 1,000.00 | 500.00 |
| 11 | தெபரவெவ பொதுச்சந்தை மீன்பிடிக் கட்டிடம் | 162,000.00 | 1,000.00 | 500.00 |
| 12 | அக்குருகொட சந்தியிலுள்ள மலசலகூடம் | 3,168.00 | 1,000.00 | 500.00 |
| 13 | திஸ்ஸமஹாராம மாகம 10 ஏக்கர் தேங்காய் விளைச்சல் (07 தென்னை மரங்கள்) | 2,250.00 | 1,000.00 | 500.00 |
| 14 | அக்குருகொட சந்தி கடை அறைக்கு அருகிலுள்ள புதிய மலசலகூடம் | 3,960.00 | 1,000.00 | 500.00 |
| 15 | திஸ்ஸமஹாராம பழைய பஸ் நிலைய தேங்காய் விளைச்சல் (04 தென்னை மரங்கள்) | 5,130.00 | 1,000.00 | 500.00 |

**டி. ருவீனா தீபானி,**
**செயலாளர்,**
**திஸ்ஸமஹாராம பிரதேச சபை.**

---

## சர்வதேச போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)

**பகிரங்க கேள்விமனு** *4486T*

### *SEAMLESS LINE* குழாய் வழங்கல்

விலைமனு ஆவணத்தின் கீழ் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்த மேல் குறிப்பிடப்பட்ட உருப்படியின் வழங்கலுக்காக புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள், அவர்தம் அதிகாரம் பெற்ற வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது (உற்பத்தியாளர்களின் அல்லது ஏற்றுமதியாளர்களின்) அவர்தம் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடம் இருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2023 செப்டெம்பர் 25 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணி வரை கொழும்பு – 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு அல்லது களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றில் 3,500.00 ரூபா மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டும் என்பதோடு மக்கள் வங்கியின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கு இலக்கத்திற்கு கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரர் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு ரொக்கப்பணத்திலும் கட்டணத்தை செலுத்த முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்பை கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளங்களில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக விலைமனு ஆவணங்களை கீழ் குறிப்பிடப்பட்ட இடத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி 1430 மணி வரை திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு அதன் பின் உடனடியாக சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி,**
**இலங்கை.**
**தொ.: 0094-11-2400110**
**மின்னஞ்சல்:** ref.materials@ceypetco.gov.lk

---

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 செப்டெம்பர் 06ஆம் திகதி ஏல விற்பனையினூடாக ரூ. 140,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123L089 | LKA18224C083 | LKA36424I068 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 40,000 | 40,000 | 140,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 செப்டெம்பர் 06
தீர்ப்பனவுத் திகதி : 2023 செப்டெம்பர் 08
வழங்கப்படும் திகதி : 2023 செப்டெம்பர் 08
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 செப்டெம்பர் 06, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்:** www.cbsl.gov.lk

---

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

---

## NSB
## தேசிய சேமிப்பு வங்கி
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**NSB/MPC/NCB/ITD/BCS/2023/002**

### தேசிய சேமிப்பு வங்கிக்கு மொத்த Backup தீர்வுகளை (மென்பொருள் மற்றும் வன்பொருள்) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான கேள்வி

தேசிய சேமிப்பு வங்கிக்கு மொத்த Backup தீர்வுகளை (மென்பொருள் மற்றும் வன்பொருள்) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் சார்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பெறுகைக் குழு தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | மொத்த Backup தீர்வுகளை (மென்பொருள் மற்றும் வன்பொருள்) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான கேள்வி |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 25,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 2,500,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2023 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு (14:30 மணித்தியாலம்) |
| **கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்** | 2023 ஒக்டோபர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு (14:00 மணித்தியாலம்) |
| **முன் நிபந்தனைகள்** | • அரசாங்கம் அல்லது வங்கியினால் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.<br>• விலைமனுதாரர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் விலைகோரப்பட்ட தீர்வுக்கான (மென்பொருள் மற்றும் வன்பொருள்) அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரராக இருக்க வேண்டும்.<br>• முன்மொழியப்பட்ட சேமிப்பகத் தொடர், காப்புப் பிரதி மற்றும் பிரதியெடுத்தல் தீர்வு முதிர்ச்சியடைந்து, சோதிக்கப்பட்டு, குறைந்தபட்சம் 25TB முன்-இறுதி காப்புத் திறன் மற்றும் விலைமனுதாரரால் குறைந்தபட்சம் 100TB சேமிப்புத் திறன் கொண்ட இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனத்திலாவது பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.<br>• இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்திற்கு Backup தீர்வுகளை வழங்குவதில் விலைமனுதாரர் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>• இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து குறைந்தபட்சம் 50 மில்லியன் ரூபாய் சராசரி செயல்பாட்டு மூலதனம் அல்லது அர்ப்பணிக்கப்பட்ட கடன் வசதி |

1. விலைமனுக்கள் ஒற்றைக் கடித உறை முறையில் மற்றும் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் 2023-10-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 011-2574004/ 011-2377219 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
3. 2023-09-05ஆம் திகதி முதல் 2023-10-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 25,000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் நிறுவனக் கடிதத் தலைப்பில் (அசல்) அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் தலைமை அலுவலக காசாளர் கருடபீடத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
4. விலைமனுக்களை தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, தேசிய சேமிப்பு வங்கி, 255, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு 2023-10-04ஆம் திகதி பி.ப. 02.00 மணி (14:00 மணித்தியாலம்) அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும்.
5. விலைமனுக்களுடன் மேற்கூறப்பட்ட பொருத்தமான விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட வெளிப்புற உறையொன்றில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளை இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் '' மொத்த Backup தீர்வுகளை (மென்பொருள் மற்றும் வன்பொருள்) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023-10-04ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு (14:00 மணித்தியாலம்) தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி அலுவலகத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024 ஜனவரி 04ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**255, காலி வீதி, கொழும்பு - 03, இலங்கை.**

---

## NSB
## தேசிய சேமிப்பு வங்கி
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**NSB/MPC/NCB/ITD/PCS/2023/003**

### 1050 எண்ணிக்கையான பிரத்தியேக கணனி அலகுகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான கேள்வி

தேசிய சேமிப்பு வங்கிக்கு 1050 எண்ணிக்கையான பிரத்தியேக கணனி அலகுகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் சார்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பெறுகைக் குழு தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | 1050 எண்ணிக்கையான பிரத்தியேக கணனி அலகுகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான கேள்வி |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 35,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 3,500,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2023 செப்டெம்பர் 26ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு (14:30 மணித்தியாலம்) |
| **கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்** | 2023 செப்டெம்பர் 27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு (14:00 மணித்தியாலம்) |
| **முன் நிபந்தனைகள்** | • அரசாங்கம் அல்லது வங்கியினால் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.<br>• விலைமனுதாரர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் விலைகோரப்பட்ட PC உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரராக இருக்க வேண்டும்.<br>• விலைமனுதாரர் இலங்கையின் நிதித் துறையில் குறைந்தபட்சம் இரண்டு வாடிக்கையாளர் நிறுவல்களைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரத்தியேக கணனிகள் (2018-2022) குறைந்தபட்சம் 200 எண்ணிக்கையை உள்ளடக்கிய ஒரு நிறுவலைக் கொண்டிருக்க வேண்டும்.<br>• இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து குறைந்தபட்சம் 75 மில்லியன் ரூபாய் சராசரி செயல்பாட்டு மூலதனம் அல்லது அர்ப்பணிக்கப்பட்ட கடன் வசதி<br>• ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்தபட்சம் ஒரு தொழில்நுட்ப நிபுணருடன் குறைந்தபட்சம் ஒரு சொந்த அல்லது அங்கீகரிக்கப்பட்ட சேவை நிலையம் |

1. விலைமனுக்கள் ஒற்றைக் கடித உறை முறையில் மற்றும் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் 2023-09-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 011-2574004/ 011-2377219 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
3. 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 35,000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் நிறுவனக் கடிதத் தலைப்பில் (அசல்) அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் தலைமை அலுவலக காசாளர் கருமபீடத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
4. விலைமனுக்களை தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, தேசிய சேமிப்பு வங்கி, 255, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு 2023-09-27ஆம் திகதி பி.ப. 02.00 மணி (14:00 மணித்தியாலம்) அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும்.
5. விலைமனுக்களுடன் மேற்கூறப்பட்ட பொருத்தமான விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட வெளிப்புற உறையொன்றில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளை இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''1050 எண்ணிக்கையான பிரத்தியேக கணனி அலகுகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023-09-27ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு (14:00 மணித்தியாலம்) தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி அலுவலகத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024 ஜனவரி 04ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**255, காலி வீதி, கொழும்பு - 03,**
**இலங்கை.**

# போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டிய

## சுகாதார தகவல் முறைமையை நிறுவுதலின் இரண்டாம் கட்டத்திற்குத் தேவையான துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல், வழங்குதல், பொருத்துதல் மற்றும் செயற்படவைத்தல்

**(SUPPLY, DELIVERY, INSTALLATION AND COMMISSIONING OF IT EQUIPMENT FOR DIGITAL HEALTH PROJECT -2nd STAGE AT TEACHING HOSPITAL KULIYAPITIYA)**

01. குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் கணனி துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக, தகைமை வாய்ந்த கணனி துணைப்பாகங்களை விற்பனை செய்வதற்கு வியாபாரப் பதிவைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து 2023-09-25ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | குறிப்பீட்டிலக்கம் | | உருப்படி | தேவையான அளவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|
| THKUL/ACC/FM09/IT/01/2023 | SUPPLY, DELIVERY, INSTALLATION AND COMMISSIONING OF IT EQUIPMENT FOR DIGITAL HEALTH PROJECT - 2nd STAGE AT TEACHING HOSPITAL KULIYAPITIYA | 01 | Laptop | 18 | 3,000.00 | 101,400.00 | 6.76 |
| | | | High-Performance Laptop | 01 | | | |
| | | | Bar Code Scanner | 29 | | | |
| | | | Desktop Personal Computer | 10 | | | |
| | | 02 | All in One PC | 05 | | 18,750.00 | 1.25 |
| | | 03 | Sticker Printer | 03 | | 18,600.00 | 1.24 |
| | | | Printer with Integrated Bulk Ink System | 08 | | | |
| | | | POS Printer | 09 | | | |
| | | | Dot Matrix Printer | 01 | | | |
| | | 04 | Computer Mouse | 31 | | Bid Security Declaration | 0.18 |
| | | | 650 VA UPS | 13 | | | |
| | | | Line Interactive 3KVA UPS | 01 | | | |

02. தகைமை வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குச் சமனான மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-22ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. சமர்ப்பிக்கப்படும் சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அது 2024-01-08ஆம் திகதி வரையும் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் அது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை ''மூலப் பிரதி'' ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அதை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் இட்டு அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயரைக் குறிப்பிட்டு 2023-09-25ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

05. விலைக்கோரல் ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைக்கோரல் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

07. 2023-09-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை அலுவலகக் கட்டிடத்தின் கூட்ட அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

08. இந்த விலைக்கோரல் தொடர்பிலான மேலதிக விபரங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு 037-2281261 நீடிப்பு 295/309 அல்லது 037-2284597 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொண்டு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் விசாரித்தறியலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டிய.**

**2023 செப்டெம்பர் 04**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கமத்தொழில் அமைச்சு

## கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்

**2023/24 ஆம் ஆண்டுக்காக வத்தளை, ஹுணுப்பிட்டிய மத்திய களஞ்சியங்களின் அருகில் 10 கி.மீ. சுற்று தூரத்திற்குள் அமைந்துள்ள வத்தளை, ஹுணுப்பிட்டிய, கொழும்பு கொமர்ஷல் உர நிறுவன (CCF) பிரதான களஞ்சியம் மற்றும் வேறு இதர CCF களஞ்சியங்களுக்கு கொழும்பு துறைமுகத்தில் இருந்து தீர்வு முகவர் சேவைகள் மற்றும் தொழிலாளர் சேவைகள் தொடர்புடன் சேர்த்து உரம் தொடர்பில் (பையில் வைக்கப்பட்ட மற்றும் FCL கொள்கலன்கள் 20') போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கான விலைமனு.**

**விலைமனு இல. 2023/CCF/TR/WHARF/01**

2023/24 ஆம் ஆண்டுக்காக வத்தளை, ஹுணுப்பிட்டிய மத்திய களஞ்சியங்களின் அருகில் 10 கி.மீ. சுற்று தூரத்திற்குள் அமைந்துள்ள வத்தளை, ஹுணுப்பிட்டிய, கொழும்பு கொமர்ஷல் உர நிறுவன (CCF) பிரதான களஞ்சியம் மற்றும் வேறு இதர CCF களஞ்சியங்களுக்கு கொழும்பு துறைமுகத்தில் இருந்து தீர்வு முகவர் சேவைகள் மற்றும் தொழிலாளர் சேவைகள் தொடர்புடன் சேர்த்து உரம் தொடர்பில் (பையில் வைக்கப்பட்ட மற்றும் FCL கொள்கலன்கள் 20') போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கான பத்து (10) மெ.தொ. குறையாத மற்றும் நாற்பது (40) மெ.தொ. இற்கு மேற்படாத கொள்ளளவுக்கு தமது நிறுவனத்தில் குறைந்தது பத்து (10) Flatbeds லொரிகள்/ ட்ரக்குகள் சொந்தமாக இருக்கும் பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் சார்பில், திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத்தில் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின்படி கூறுவிலையுடன் சேர்த்து 2024 ஜனவரி 25 ஆம் திகதி வரை செல்லுபடியான ரூபா ஒரு மில்லியன் (ரூபா 1,000,000) தொகை ஒன்றுக்காக இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றில் இருந்து விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா இருபத்து ஐயாயிரத்தை (ரூபா 25,000) ரொக்கப்பணத்தில் செலுத்தி வத்தளை, ஹுணுப்பிட்டிய தலைமையகம், கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பெறுகை மற்றும் வழங்கல்கள் பதில் பிரதி முகாமையாளரிடம் இருந்து விலைமனு படிவம், விலைமனு அறிவுறுத்தல்கள் மற்றும் விலைமனுவின் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்ட விலைமனு ஆவணத்தை பெறலாம். விலைமனு ஆவணங்கள் 2023 செப்டெம்பர் 04ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் 25ஆம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 4.00 இற்கு இடையே எந்த ஒரு வேலை நாட்களிலும் வழங்கப்படும்.

**வத்தளை, ஹுணுப்பிட்டிய, கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம், திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரின் பெயருக்கு கோரப்பட்டுள்ள விலைமனு பிணையுடன் சேர்த்து அசல் மற்றும் நகல் கூறுவிலையை கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது வத்தளை, ஹுணுப்பிட்டிய, தலைமை அலுவலகம், பெறுகை மற்றும் வழங்கல் பிரிவில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். விலைமனுக்களைக் கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023/24 ஆம் ஆண்டுக்கான துறைக்கள போக்குவரத்து வழங்கலுக்கான விலைமனு" "விலைமனு இல. 2023/CCF/TR/WHARF/01" என குறிப்பிட வேண்டும்.**

2023 செப்டெம்பர் 26 ஆம் திகதி மு.ப. 11.00க்கு விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைவதோடு அதன் பின் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு கோரப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு, கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம், பெறுகை மற்றும் வழங்கல்கள் - பதில் பிரதி முகாமையாளரை தொடர்புகொள்ளவும். (தொலைபேசி இலக்கம்: 011-2949091/ 0774451382).

**பதில் பிரதி முகாமையாளர் – பெறுகை மற்றும் வழங்கல்கள்**
**பெறுகைப் பிரிவு,**
**கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்,**
**ஹுணுப்பிட்டிய,**
**வத்தளை.**

**திகதி: 2023 செப்டெம்பர் 04**




The Housewives' companion
Classifieds on
Daily News

# விலை கோரலுக்கான அழைப்பு

## மேல் மாகாண சபை

## பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும். 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/PU/CON/23/326 | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையிலுள்ள OT-A இன் புதுப்பித்தல் வேலைகள் | 4.2 | இல்லை | C9,C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515 |
| 2 | WP/PU/CON/23/327 | பூகொட PMCU யில் உள்ள கட்டிடம் மற்றும் கூரைத் திருத்தவேலைகள் | 4.2 | இல்லை | C9,C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 26,750.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 53,500.00 | |
| 3 | WP/PU/CON/23/328 | கலகெடிஹேன PMCU புதிய கட்டிடத்தின் முதலாம் தளத்திலுள்ள யானைக்கால் நோய் பிரிவிற்கு இடமளிப்பதற்கான வசதிகளை வழங்குதல் | 8.3 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | |
| 4 | WP/PU/CON/23/329 | மீரிகம ஆதார வைத்தியசாலையிலுள்ள கண் சத்திரசிகிச்சையகத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 3.2 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 27,500.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 55,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட. வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட. தொலைபேசி இல. 0112-296418 |
| 5 | WP/PU/CON/23/330 | மத்துகம பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு உத்தேச 65′×40′ மூன்று மாடி அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - படிநிலை 5 | 10.5 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 4,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 63,500.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 127,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. ஆனந்த சிராஸ்தலாய, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082 |

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பிரதேச பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. மீளளிக்கப்படாத கட்டணத்தை 2023-09-04ஆம் திகதி முதல் 2023-09-15ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாண சபைக்கு செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2023-09-18ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.
08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பொறி. K. R. அபேசிறிவர்தன,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**2023-09-01**
**தொலைபேசி: 0112-092504 தொலைநகல்: 0112-092505**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### கம்பஹா ஆதார வைத்தியசாலையின் 3வது மாடியில் மின்சார முறைமையை அமைப்பதற்குத் தேவையான பொருட்களை வழங்குதல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2023/68**

இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | விலைக்கோரல் பிணை முறி (ரொக்கப் பணமாக) | விலைக்கோரல் பிணை முறி (வங்கி / காப்புறுதி நிறுவனம்) |
|---|---|---|---|
| 01 | மேற்கூறப்பட்ட கட்டிடத்திற்குத் தேவையான மின்சார உருப்படிகள் தொடர்பான தகவல்கள், வகை மற்றும் அளவுகள் என்பன விலைமனு ஆவணத் தொகுதியில் தரப்பட்டுள்ளன. | 18,500.00 | 37,000.00 |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.09.04ஆம் திகதியிலிருந்து 2023.09.20ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 1,178.75 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மேற்கூறப்பட்ட பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-09-19ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

# போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டிய

## மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

01. குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, தகைமை வாய்ந்த இலங்கையில் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதற்கு வியாபாரப் பதிவைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து 2023-09-25ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | குறிப்பீட்டிலக்கம் | ஒப்பந்த விபரம் | உருப்படி | தேவையான அளவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | THK/PLA/ PL1/Pur.N EW.BIO.C HE./2023 | Supply, Delivery, Commissioning, Installation & Maintenance of 01 No. Biochemistry Analyzer | Biochemistry Analyzer | 01 | 3,000.00 | 120,000.00 | 8 |
| 02 | THK/PLA/ PL1/ Holter Monitor/ 2023 | Supply, Delivery, Commissioning, Installation & Maintenance of 01 No. Holter Monitoring System | Holter Monitoring System | 01 | 3,000.00 | 37,500.00 | 2.5 |

02. தகைமை வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குச் சமனான மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-22ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. சமர்ப்பிக்கப்படும் சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியம் (Construction Guarantee Fund) அல்லது இலங்கை காப்புறுதி சபையில் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும். 01ஆம் இலக்க விலைக்கோரலுக்கான விலைமனுப் பிணை முறி 2024-01-08ஆம் திகதி வரையும் 02ஆம் இலக்க விலைக்கோரலுக்கான விலைமனுப் பிணை முறி 2023-12-25ஆம் திகதி வரையும் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் அது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை ''மூலப் பிரதி'' ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அதை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் இட்டு அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயரைக் குறிப்பிட்டு 2023-09-25ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

05. விலைக்கோரல் ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மேற்படி அட்டவணையின் 01ஆம் இலக்க உருப்படிக்கு 2023-09-14ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கும் 02ஆம் இலக்க உருப்படிக்கு ந.ப. 12.00 மணிக்கும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பணிப்பாளரின் அலுவலகத்தில் இடம்பெறும்.

07. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைக்கோரல் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

08. 2023-09-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை அலுவலகக் கட்டிடத்தின் கூட்ட அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. இந்த விலைக்கோரல் தொடர்பிலான மேலதிக விபரங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு 037-2281261 நீடிப்பு 295/309 அல்லது 037-2284597 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொண்டு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் விசாரித்தறியலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய.**

**2023 செப்டெம்பர் 04**

The Housewives' companion
Classifieds on
Daily News

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விலைமனு இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியல் மதிப்பீடு (வெட் இன்றி) (ரூ. மில்லியன்) | ICTAD நிறுவனப் பதிவு | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20-B/10/2023 | லாகுகல தேசிய பூங்காவில் மலசலகூட முறைமையை நிர்மாணித்தல் | 6.5 | C6/C7/C8 (கட்டிடங்கள்) | 2,500.00 | 100,000.00 2024-01-09ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை 2023-09-25ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பத்தரமுல்லை, வன சீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 2023-09-29ஆம் திகதி வரையில் வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எனும் பெயருக்கு எழுத்து மூலமான கோரிக்கை மற்றும் ICTAD பதிவுப் புத்தகத்தின் முதல் பக்கத்துடன் மீளளிக்கப்படாத வைப்பை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

05. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்ட வளவை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. மேற்படி கேள்விப் பிணை முறியை வங்கியின் மூலம் செலுத்துவதானால் தரப்பட்டுள்ள பெறுமதி மற்றும் தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023-09-26ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே (2023-09-26) பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

08. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

09. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்லை.**

# விலைமனுவிற்கான அழைத்தல்

## கமத்தொழில் அமைச்சு

## வ/ ப கொழும்பு கொம்மேர்ஷியல் உர நிறுவனம் (வ/ப கொகொஉநி)

**(Colombo Commercial Fertilizers Limited – CCF)**

**வத்தளை, ஹுணுப்பிட்டிய வ/ப கொகொஉ நிறுவன பிரதான களஞ்சியசாலையிலிருந்தும் வத்தளை, ஹுணுப்பிட்டிய மத்திய களஞ்சியசாலையின் அருகாமையின் 10கிமீ ஆர (radius) தொலைவில் அமைந்துள்ள வேறேதாவது நானாவித கொகொஉ நிறுவனத்திலிருந்து நானாவித கொகொஉ நிறுவன மாவட்ட களஞ்சியசாலைகள், நியமிக்கப்பட்ட கமநல சேவை நிலையங்களுக்கும் நாட்டின் வேறேதாவது அமைவிடங்களுக்கும் 2023/ 2024 ஆம் ஆண்டுகளில் உரத்தை எடுத்துச் செல்லும் சேவைகளின் ஏற்பாடுகளுக்காக விலைமனுக்களை அழைத்தல்.**

**BID No.: 2023/ CCF/DT/01**

2023/24 ஆம் ஆண்டுகளுக்காக நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலமைந்துள்ள நானாவித கொகொஉநி மாவட்ட களஞ்சியசாலைகள், நியமிக்கப்பட்ட கமநல சேவை நிலையங்கள் மற்றும் வேறேதாவது அமைவிடங்களுக்கு வத்தளை, ஹுணுப்பிட்டிய மத்திய களஞ்சியசாலையிலிருந்து 10கிமீ தொலைவினுள் அமைந்துள்ள மற்றும் ஏனைய நானாவித கொகொஉ களஞ்சியசாலைகளுக்கு வத்தளை, ஹுணுப்பிட்டிய வ/ப கொகொஉ களஞ்சியசாலை கட்டிடத்தொகுதிகளிலிருந்து பைகளில் அடைக்கப்பட்டுள்ள உரத்தை எடுத்துச் செல்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் புகழ்வாய்ந்த போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வ/ப கொகொஉ நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

விலைமனுப் படிவம், விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள், விலைமனுக்கோரலுக்கான பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அத்துடன் அவற்றிற்கான இணைப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் கட்டணமான நாலாயிரம் ரூபாவை மாத்திரம் (4000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொம்மோர்ஷியல் உர நிறுவன பெறுகை மற்றும் வழங்கல்களுக்கான பதில் கடமையாற்றும் பிரதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் **2023.09.04 ஆம் திகதியிலிருந்து 2023.09.25 ஆம் திகதி வரையும்** எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் வழங்கப்படும். விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகளின் அட்டவணை இல. II இன் பிரகாரம் 10மெதொ இற்கு குறையாமலும் 40மெதொ இற்கு மேற்படாத தேறிய எடைக் கொள்ளளவுள்ள ஆகக் குறைந்த தேவைப்பாட்டின் இணக்கத்திற்கு உரிமையுள்ள வாகனங்களின் விலைமனுதாரர்களுக்கே விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகளின் **I ஆம் இலக்க அட்டவணையின்** கீழ் குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனு பிணை உத்தரவாதமொன்று உரித்தான மாவட்டங்களுக்கு ரொக்கப் பணத்திலமைந்த விலைமனுவுடன் வ/ப கொழும்பு கொம்மோர்ஷியல் உர நிறுவன காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது IV ஆம் இணைப்பில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவான வங்கி உத்தரவாத பாங்கில் செலுத்தப்படல் வேண்டும்.

i. முத்திரையிடப்பட்ட விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையானது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வ/ப கொழும்பு கொம்மோர்ஷியல் உர நிறுவன தலைமையலுவலகம், ஹுணுப்பிட்டிய, வத்தளை என முகவரியிடப்பட்டு, வத்தளை, ஹுணுப்பிட்டிய, தலைமையலுவலகம், பெறுகை மற்றும் வழங்கல் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது கீழே நிர்ணயிக்கப்பட்டுள்ள மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக பெற்றுக் கொள்ளும் பாங்கில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்களை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் "Bidding for the District Transport Services for the year 2023/24 - Bid No.: 2023/CCF/DT/01" என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

ii. **2023.09.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொம்மோர்ஷியல் உர நிறுவன பிரதான அலுவலக இடப்பரப்பில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

விலைமனுக்கள் **2023.09.26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு, வ/ப கொழும்பு கொம்மோர்ஷியல் உர நிறுவன பெறுகை மற்றும் வழங்கலுக்கான பதில் கடமையாற்றும் பிரதி முகாமையாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல.: 011-2949091/0774451382)

**பதில் கடமையாற்றும் பிரதி முகாமையாளர் - பெறுகை மற்றும் வழங்கல்,**
**பெறுகைப் பிரிவு,**
**வ/ப கொழும்பு கொம்மோர்ஷியல் உர நிறுவனம்,**
**ஹுணுப்பிட்டிய,**
**வத்தளை.**
**திகதி: 04.09.2023.**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை, நுவரெலியா

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பின்வரும் வேலை விடயங்களுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைக்கோரல் இல. | வேலை விடயம் | தகைமை | மீளளிக்கப் படாத விலைமனுக் கட்டணம் | மீளளிக்கப் படும் விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | ஒதுக்கப் பட்டுள்ள மானியம் |
|---|---|---|---|---|---|
| DGH/NE/AL/03/17/2023 | Extension of JMO Office & PCU | C09, C08 மற்றும் 07 | ரூபா 3000.00 | ரூபா 49,000.00 | 4.9 மில்லியன் ரூபா |
| DGH/NE/AL/03/18/2023 | Development Wash Room in Male Nurses Quarters | C09, C08 மற்றும் 07 | ரூபா 3000.00 | ரூபா 23,000.00 | 2.3 மில்லியன் ரூபா |

01. விலைமனுப் படிவங்களை நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை பிரதான அலுவலகத்திலிருந்து 2023-09-04ஆம் திகதி முதல் 2023-09-21ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

02. சமர்ப்பிக்கும் விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''விலைக்கோரல் இலக்கம் மற்றும் குறித்த வேலை'' என்பவற்றைக் குறிப்பிட்டு 2023-09-22ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு முன் தலைவர், பிரந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, நுவரெலியா எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. 2023-09-22ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

05. விலைமனுக்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர்.எம்.எம். செனெவிரத்ன,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நுவரெலியா.**

# பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 04/11/18/25 ஒக்டோபர் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 04/11/18/25 ஒக்டோபர் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 03/10/17/24 ஒக்டோபர் 2023 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 03/10/17/24 ஒக்டோபர் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 05/12/19/26 ஒக்டோபர் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 05/12/19/26 ஒக்டோபர் 2023 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 02/09/16/23 ஒக்டோபர் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

கடற்றொழில் அமைச்சு

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

CFHC

# கொள்முதல் அறிவித்தல்

## காலி மீன்பிடித் துறைமுகத்தில் முன்மொழியப்பட்ட அபிவிருத்திப் பணிகள்

**CFHC/PD/T/IMP/GALLE/2023/31-I**

கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் இல-15 இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் 2023.09.22 ஆம் திகதி பி.ப.02.00 மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன

| இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தின் பெயர் | மதிப்பீட்டு செலவு ரூ. (தற்செயலான மற்றும் VAT தவிர்த்து) | தேவையான மனுப் பாதுகாப்பு | மீள் செலுத்தப் படாத மனுக் கட்டணம் (ரூ) | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் | தேவையான தகுதிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | CFHC/PD/T/IMP/GALLE 2023/31-I | காலி மீன்பிடித் துறைமுகத்தில் முன்மொழியப் பட்ட அபிவிருத்திப் பணிகள் | ரூ.14 மில்லியன் | ரூ.152,000/- மதிப்புடைய தொகையினை இலங்கையில் இயங்குகின்ற இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக் கப்பட்ட வங்கியிலிருந்து பெற வேண்டும் | ரூ.3,500/- | 2023.09.22 பி.ப.2.00 | (i) CIDA பதிவு (C7, C6 மற்றும் C5) கட்டிட கட்டுமானம் (ii) 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பிரிவு 8 உடன் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் வழங்கிய சான்றிதழ் பெற்றிருத்தல் |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2023.09.01 ஆம் திகதியிலிருந்து 2023.09.21 ஆம் திகதி **மு.ப.09.00 தொடக்கம் பி.ப.03.00** வரையான காலப்பகுதியினுள் மேற்கூறப்பட்ட மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **முகாமையாளர் (பெறுகை), கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் இல-15 இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில்** கையளிப்பதன் மூலமாக ஆங்கில மொழியினாலான விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். கட்டண முறையானது பணமாக செலுத்தப்பட வேண்டும். மனு ஆவணத்துடன் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

முன்மனுக் கூட்டம் 2023.09.12 ஆம் திகதி அன்று முற்பகல் 11.00 மணிக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தின் சபை அறையில் நடைபெறும்.

மனு ஆவணங்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட மனுப் பிரதிகளை 2023.09.22 ஆம் திகதி வரையான காலத்திற்குள் கிடைக்குமாறு **முகாமையாளர் (பெறுகை), வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் கொழும்பு** 15 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடலாம். 2023.09.22 ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மனு ஆவணத்தை பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும்.மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி பங்கேற்க முடியும். எந்தவொரு விண்ணப்பத்தையும் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்க அல்லது நிராகரிக்கும் உரிமையினை ஆணைக்குழு கொண்டுள்ளது. மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள **முகாமையாளர் (பெறுகை), தொலைபேசி இலக்கம் 011-2525063** மற்றும் பிரதி பொது முகாமையாளர் (DGM) பொறியியல் **தொலைபேசி இலக்கம 011-2529391** அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்டம் (SAPP)

SAPP Smallholder Agribusiness Partnerships Programme

கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்

**பால் கறத்தல் இயந்திரங்கள், 20 லீட்டர் பால் கறத்தல் கேன்கள் (CANS) மற்றும் 40 லீட்டர் குளிர்விப்பான் கேன்கள் ஆகியவற்றின் வழங்கல், விநியோகம் செய்தல் மற்றும் ஒப்படைத்தல்.**

Ref. No.: SAPP/PRO/GDS/2023/32 and 33

இலங்கையானது சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்டத்தின் ஆகுசெலவிற்காக விவசாய அபிவிருத்திக்காக சர்வதேச நிதியத்திடமிருந்து (IFAD) நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடலின் பாகமொன்றை **ரிச்லைவ் மற்றும். ருவன்சிரி பாற்பண்ணை செயற்றிட்டங்களுக்காக பால் கறத்தல் இயந்திரங்கள், 20 லீட்டர் பால் கறத்தல் கேன்கள் மற்றும் 40 லீட்டர் குளிர்விப்பான் கேன்கள் ஆகியவற்றின் வழங்கல், விநியோகம் செய்தல் மற்றும் ஒப்படைத்தலுக்காக** செலவிட உத்தேசித்துள்ளது.

எந்தவொரு IFAD நிதியுதவியின் பயன்பாடும் நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க IFAD இன் ஒப்புதலுக்கு உட்பட்டது. IFAD மற்றும் அதன் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் ஊழியர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், கோரிக்கைகள், கட்டாய கோரிக்கைகள், இழப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகியவற்றிற்கு பாதிப்பில்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.

1. 2023 டிசம்பர் மாத நடுப்பகுதிக்கு பிந்தாமல் விநியோகம் எதிர்பார்க்கப்படுகின்றது.
2. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு **பால் கறத்தல் இயந்திரங்கள், பால் கறத்தல் கேன்கள் மற்றும் குளிர்விப்பான் கேன்களை வழங்கல், விநியோகம் செய்தல்** மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்டத்தின் (இதன்பின்னர் ""SAPP" என அழைக்கப்படுவது) சார்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுவானது (சிறியது) இப்போது விலைமனுக்களை அழைக்கின்றது.

| குறிப்பீட்டு இல. | தொகுதி இல. | அம்சத்தின் பெயர் | எண்ணிக் கை | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| **ருவன்சிரி பாற்பண்ணை செயற்றிட்டம்** | | | | | |
| SAPP/PRO/GDS/2023/32 | தொகுதி 1 | பால் கறத்தல் இயந்திரங்கள் | 65 | 146,000.00 | 5,000.00 ரூபா |
| | தொகுதி 2 | பால் கறத்தல் கேன்கள் 20லீ | 457 | 66,000.00 | |
| | தொகுதி 3 | குளிர்விப்பான் கேன்கள் 40லீ | 58 | 128,000.00 | |
| **ரிச்லைவ் பாற்பண்ணை செயற்றிட்டம்** | | | | | |
| SAPP/PRO/GDS/2023/33 | தொகுதி 4 | பால் கறத்தல் இயந்திரங்கள் | 80 | 180,000.00 | 5,000.00 ரூபா |

இவ்வாறான பண்டங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகளின் மேலதிக விபரங்கள் இந்த விலைமனுக்கோரல் ஆவணத்தின் தேவைப்படுத்தல்கள் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

3. **2023.09.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** இராஜகிரிய, நாவல வீதி, 212/ ஏ என்ற இலக்கத்திலுள்ள சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை . 011-2448031 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது procurement@sapp.lk என்ற மின்னஞ்சலூடாக சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட பெறுகை விஷேடத்துனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **2023.09.01 ஆம் திகதியிலிருந்து 2023.09.27 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் இராஜகிரிய, நாவல வீதி, 212/ ஏ என்ற இலக்கத்திலுள்ள சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.**
5. **2023 செப்டம்பர் 01 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டம்பர் 27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில்** SAPP இன் நிதிப் பிரிவில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், இராஜகிரிய, நாவல வீதி, 212/ ஏ என்ற இலக்கத்திலுள்ள சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட அலுவலக திட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. **2023 ஒக்ரோபர் 2 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக** கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது இராஜகிரிய, நாவல வீதி, 212/ ஏ என்ற இலக்கத்திலுள்ள சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட அலுவலக பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவானது கொள்வனவுக்காரரினால் விலைமனுவை சமர்ப்பிப்பதற்காக நிருணயிக்கப்பட்டுள்ள இறுதி திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட **90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் (2023 டிசம்பர் 30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்) வேண்டும்.** தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உரிமமுள்ளதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட, திட்டப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. இலத்திரனியலினால் உருவாக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்பது தயவு செய்து கவனிக்கவும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**திட்டப் பணிப்பாளர்,**
**சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்டம்,**
**இல. 212/ ஏ, நாவல வீதி, இராஜகிரிய.**
**கமத்தொழில் அமைச்சு.**
**தொலைபேசி இலக்கம்:** + 94 11 2 448 031

கடற்றொழில் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## செயற்பாட்டு ரீதியிலான குத்தகை முறைமையின் கீழ் கடற்றொழில் அமைச்சிற்கு வாகனமொன்றின் பெறுகை

கீழே வழங்கப்பட்டவாறு செயற்பாட்டு ரீதியிலான குத்தகை முறைமையின் கீழ் வாகனமொன்றை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கடற்றொழில் அமைச்சின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

| | |
|---|---|
| **வாகன இனம்** | : **மோட்டார் கார்** |
| **வாகனத்தின் நிலைமை** | : ஒன்றில் புத்தம் புதிய அல்லது 2016 ஆம் ஆண்டின் பின்னர் பதிவு பெற்றிருத்தல். (உள்ளூர் முகவரிடமிருந்து எரிபொருள் பாவனை அடங்கலாக முழுமையான நிலபர அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ) (இயந்திர கொள்ளளவு – ஆகக் குறைந்தது 1400- ஆகக்கூடியது 1600சிசி ) |
| **ஒப்பந்தக் காலப்பகுதி** | : 60 மாதங்கள் |
| **தகுதியுள்ள வழங்குனர்கள்** | : வாகன முகவர்கள் (உலக புகழ் பெற்ற வாகன உரிமைப் பெயர்களையுடைய விற்பனையாளர்கள்) மத்திய வங்கியில் பதிவு பெற்ற நிதியிடல் நிறுவனங்கள், ஆகக் குறைந்தது 10 வாகன எண்ணிக்கையைக் கொண்டிருக்கும் கார் வாடகைக்கு வழங்கும் சேவைகள் |
| **வழங்க வேண்டிய சேவைகள்** | : குத்தகைக்கு வழங்குபவர் வருடாந்த உரிமம் பெறல், புகைப்பரிசோதனை மற்றும் காப்புறுதி அடங்கலான அனைத்து வழக்கமான பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல்கள் ஆகியவற்றை பொறுப்பேற்றல் வேண்டும். |
| **வாகனங்களின் பதிலீடு** | : பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு வேலைகள் ஆகியன 24 மணித்தியாலங்களுக்கு மேற்படின், நிகரான இனமுள்ள வாகனமொன்று வழங்கப்படல் வேண்டும். |

2023.09.22 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் 011-2544365 என்ற தொடர்பு இலக்கத்தினூடாக கொழும்பு-1-, மாளிகாவத்த, 2 ஆம் மாடி, புதிய செயலக கட்டிடத்திலுள்ள கடற்றொழில் அமைச்சின் வழங்கலுக்கான கணக்காளரிடமிருந்து மேலதிக தகவலை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம். 2023.09.04 ஆம் திகதியிலிருந்து 2023.09.22 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 ரூபாவை செலுத்திய பின்னர், கடற்றொழில் அமைச்சின் கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பெற்றுக் கொள்ளப்படலாம். பணக்கொடுப்பனவானது கடற்றொழில் அமைச்சின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2023.09.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் புதிய செயலக கட்டிடத்தின் 2 ஆம் மாடியிலுள்ள கடற்றொழில் அமைச்சின் வழங்கலுக்கான கணக்காளரின் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கணக்காளர் (வழங்கல் கடற்றொழில் அமைச்சு, 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்த, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். (தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்).


விலைமனுக்கள் **2023.12.11** ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்கோரல் ஆவணத்தின் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டு கடற்றொழில் அமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது **2024.01.08** ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**கடற்றொழில் அமைச்சு,**
**புதிய செயலகக் கட்டிடம்,**
**2 ஆம் மாடி, மாளிகாவத்த,**
**கொழும்பு-10.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்



**118**

### ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

JR-4299 Toyota hilux, 2004, cab அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714542958 055178



**119**

### பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

GE-0380 Mitsubishi canter, 1996, lorry அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714542958 055188

2265896 Nissan, 1993, lorry அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714542958 055181



**122**

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAE-6194 Bajaj, 2012, threewheel அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711210810 055197

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

## சர்வதேச போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)

**பகிரங்க கேள்விமனு** *4489T*

### HAND CHAIN HOISTS இன் வழங்கல்

விலைமனு ஆவணத்தின் கீழ் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்து மேல் குறிப்பிடப்பட்ட உருப்படியின் வழங்கலுக்காக புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள், அவர்தம் அதிகாரம் பெற்ற வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது (உற்பத்தியாளர்களின் அல்லது ஏற்றுமதியாளர்களின்) அவர்தம் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடம் இருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2023 செப்டெம்பர் 25 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணி வரை கொழும்பு – 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு அல்லது களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றில் 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டும் என்பதோடு மக்கள் வங்கியின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கு இலக்கத்திற்கு கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரர் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு ரொக்கப்பணத்திலும் கட்டணத்தை செலுத்த முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்பை கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளங்களில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக விலைமனு ஆவணங்களை கீழ் குறிப்பிடப்பட்ட இடத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி 1430 மணி வரை திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு அதன் பின் உடனடியாக சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொ.: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

---

## தேசிய போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)

**பகிரங்க கேள்விமனு** *4487T*

### விசேடமாக குறிப்பிடப்பட்ட துண்டுகளாக சீருடை துணிகள், துவாய்கள் மற்றும் காலுறைகளின் வழங்கல்

மேல் குறிப்பிடப்பட்ட உருப்படிகளை வழங்குவதற்காக உள்ளூர் வழங்குநர்களிடம் இருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால், முத்திரைபொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2023 செப்டெம்பர் 18 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணி வரை கொழும்பு – 09, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு அல்லது களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றில் 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டும் என்பதோடு மக்கள் வங்கியின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கு இலக்கத்திற்கு கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரர் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு ரொக்கப்பணத்திலும் கட்டணத்தை செலுத்த முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்பை கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளங்களில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக விலைமனு ஆவணங்களை கீழ் குறிப்பிடப்பட்ட இடத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023 செப்டெம்பர் 20 ஆம் திகதி 1430 மணி வரை திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு அதன் பின் உடனடியாக சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த,**
**களனி**
**தொ.: 011-2400110**

---

## வ/ ப சுயாதீன தொலைக்காட்சி சேவை

### கொள்முதல் அறிவித்தல்

கீழ்க்காணும் கொள்முதல்களுக்கான விலைமனுக்கோரல் அறிவித்தல் 2023.09.04ஆம் திகதி ‘Daily News’ பத்திரிகை மற்றும் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் (www.itn.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.

PROCUREMENT OF JANITORIAL & GARDEN MAINTENANCE SERVICES TO ITN HEAD OFFICE, BATTARAMULLA AND ITN MARKETTING DIVISION, COLOMBO 07

REF NO: ITN/Q/33/2023

இந்த கொள்முதலுக்கான விலைமனுக்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனு கோர ஆர்வம் காட்டுவோர் ‘Daily News’ பத்திரிகை மற்றும் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.itn.lk) பிரசுரிக்கப்பட்டுள்ள குறித்த அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயல்படுமாறு அறியத்தருகின்றோம்.

**தலைவர்**
**கொள்முதல் பிரிவு**
**வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை**
**விக்ரமசிங்கபுர, பத்தரமுல்ல.**

The Housewives’ companion
Classifieds on
Daily News

---

## பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### 2023-2024ஆம் வருடங்களில் சிற்றுண்டிச்சாலை கட்டிடத் தொகுதியில் பேக்கரி உற்பத்தி விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்லல்

01. தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள், வைத்தியசாலைக்கு வரும் விருந்தினர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் நுகர்வுக்காக நுகேகொட, தலபத்பிட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தொகுதியில் பின்வரும் விற்பனை நிலையங்களை நடாத்திக் கொண்டு செல்வதற்கு இயலுமை உள்ள இலங்கைப் பிரஜைகள், வியாபார நிறுவனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து (ஒப்பந்தக்காரர்களிடமிருந்து) ஒரு வருட காலத்திற்கு தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைகள் கோரப்படுகின்றன.

| | இலக்கம் | விற்பனை நிலையத்தின் பெயர் | குறைந்தபட்ச மாதாந்த வாடகை ரூபா | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | Q-459/23 | பேக்கரி உற்பத்தி விற்பனை நிலையம் | 200,000.00 | 3,500.00 |

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை வழங்கல் பிரிவிற்குச் சமர்ப்பித்து 2023-09-20ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கேள்விப் படிவத்தை வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைக் கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. உரிய முறையில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தபாலுறையொன்றினுள் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், 2023/2024ஆம் வருடங்களில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் பேக்கரி உற்பத்தி விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கான ஒப்பந்தம் எனக் குறிப்பிட்டு 2023.09.21ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக இங்கு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி நேரம் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக விண்ணப்பங்கள் திறக்கப்படும் விண்ணப்பதாரர்க்கு அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

05. இயைபுடைய விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

06. உத்தேச விண்ணப்பதாரர்கள் கேள்விப் படிவங்களை கட்டணம் செலுத்தாமல் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 011-2778610 நீடிப்பு 3142 அல்லது 011-2778624

**தலைவர் - பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது**
**வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**



---

## மில்கோ (பிறைவட்) லிமிடட்

(அரசுடைமைத் தொழில் முயற்சி)

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்

இலங்கையில் ‘‘ஹைலண்ட்’’ என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பால் உற்பத்திகளை தயாரித்தல், பால் பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் அரசுடைமையுள்ள முதன்மையான நிறுவனம் மில்கோ (பிறைவட்) லிமிடட் என்பதாகும். 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணையாக, பயன்பாட்டிலுள்ள பிளாஸ்டிக் பொருட்களில் சிலவற்றை சுற்றுச் சூழலுக்கு ஏற்ற உக்கும் தன்மைகொண்ட பொருட்களாக மாற்ற எதிர்பார்க்கின்றது. பின்வரும் பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக கீர்த்தி வாய்ந்த உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து **மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கேள்விக் குழுத் தலைவர்** விலைமனுவுடன் கூடிய முன்மொழிவுகளை இத்தால் அழைக்கின்றார்.

**01. 100% உக்கிப்போகும் தன்மையுடைய யோகட் மற்றும் ஐஸ்கிறீம் கரண்டிகள் மாதாந்த தேவைப்பாடு - 10 மில்லியன் கரண்டிகள் (ஏறத்தாழ)**

பொருளானது PE அற்ற உணவுத் தர முலாமிடப்பட்ட காகிதம், மரம் அல்லது ஏனைய பொருத்தமான பொருட்களால் செய்யப்பட்டதாகவிருத்தல் வேண்டும். மேலதிகமாக நுண்ணுயிரியல் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

உணவுத் தர சான்றிதழ்கள் மற்றும் PE அற்றதற்கான அறிவிப்பு உட்பட அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**02. 100% உக்கிப்போகும் தன்மையுடைய குடிக்கும் யோகட் மற்றும் திரவப் பாலுக்கான உறிஞ்சும் குழாய்கள் (DRINKING STRAWS) மாதாந்த தேவைப்பாடு - 3 மில்லியன் உறிஞ்சும் குழாய்கள் (ஏறத்தாழ)**

பொருளானது நல்ல இருக்கத்துடன் மென்மையான மேற்பரப்புடன் காகிதத்தால் ஆக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும். பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும் உணவுத்தரச் சான்றிதழ் மற்றும் சான்றளிக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

1. தேவைப்படும் அளவுருக்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை 2023-09-04ஆம் திகதி முதல் 2023-09-19ஆம் திகதி வரை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கொழும்பு-03, இல. 345, காலி வீதி, மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் ஐந்தாம் மாடியிலுள்ள கொள்வனவுப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
2. விண்ணப்பப் படிவங்கள் **வேண்டுகோள் கடிதமொன்றைச்** சமர்ப்பிப்பதன் பேரில் இலவசமாக வழங்கப்படும்.
3. முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இட்டு 2023-09-20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் ஒன்றில் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது கொழும்பு-03, இல. 345, காலி வீதி, மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் ஐந்தாம் மாடியிலுள்ள கொள்வனவுப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
4. மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் சமுகம் தந்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகள் உடனடியாகத் திறக்கப்படும்.
5. முன்மொழிவினை அல்லது சகல முன்மொழிவுகளையும் காரணம் காட்டாமல் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
6. மில்கோ ஊழியர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இந்த விலைமனு கோரலில் பங்குபற்ற முடியாது.

முத்திரையிடப்பட்ட விலைமனு கோரல் தொடர்பாக மேலதிக தகவல்கள், விபரங்கள் அல்லது விளக்கங்கள், தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து 011-4500530-4. என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மற்றும் தர உறுதிப்பாடு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமையாளரிடமிருந்து - 011-2586882 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - விலைமனு கோரல்குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**ஐந்தாம் மாடி,**
**இல. 345, காலி வீதி, கொழும்பு-03.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 25A, பிரதான வீதி, ஹெலியகொட. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 227, டி சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொறட்டுவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 482, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 124/A, துட்டககெமுனு வீதி, கொகுவெல்ல. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 54, D.S. சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 65/A, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு13. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 03/10/17/24 | ஒக்டோபர் 2023 | இல. 1024, மருதானை வீதி, கொழும்பு10. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் . |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 03, சென்.லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 18, எலகந்த, கந்தல, வத்தல. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 17, ஸ்டேஷன் வீதி, கந்தலை சந்தி, வத்தலை. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யா-எல. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 230, கண்டி வீதி, மாவனெல்ல. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
| 04/11/18/25 | ஒக்டோபர் 2023 | இல. 69, கிருல்ல வீதி, திவுலப்பிட்டிய. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 167, பிரதான வீதி,பண்டாரவல. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமட. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 473, நுவரெலியா வீதி, புசல்லாவ. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பொலை. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 52, டன்பரா வீதி, ஹட்டன். |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 73, கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலிய. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டிய. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல். |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 35, சரஸ்வி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 115, கொடுகொடெல்ல வீதி, கண்டி. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 298, கொழும்புவீதி, பிலிமத்தலாவ. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 13A, கண்டி வீதி, கெலியோயா. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்ட. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 226, டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 14, புதிய நகரம், திகன. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 56,57, எட்வின் விக்கிரமரத்ன வணிக வளாகம், புதிய நகரம், மஹியங்கனை. |
| 05/12/19/26 | ஒக்டோபர் 2023 | இல. 10/2, வங்கி எதிரில், புதிய நகரம், தெஹியத்தகண்டி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 171, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 3,5 வல்லை வீதி, சங்கானை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 126, 128, பிரதானவீதி, பருத்தித்துறை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 69, பிரதானவீதி, அச்சுவேலி |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 55, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 6, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 575, கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, மல்லாவி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | PW வீதி, முல்லைத்தீவு. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 32B, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 12, வட்டாரஇல. 06, பிரதானவீதி, பேசாலை, மன்னார். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, மருதங்கேணி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 25, ஹிஜ்ரா சந்திப்பு, கல்முனைவீதி, சம்மாந்துறை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, திருக்கோவில் 01. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 04, கடிகார கோபுரம் எதிரே, அம்பாறை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, பொத்துவில். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, வவுனதீவு. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பாடசாலைஎதிரே, வைத்தியசாலைவீதி, களுவாஞ்சிக்குடி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல.71 A, பிரதான வீதி, ஆரயம்பதி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, பிரிவு 10, கொக்கட்டிச்சோலை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | "சந்தை எதிர் வளாகம்", பிரதான வீதி, செங்கலடி. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | திருகோணமலை வீதி, கண்டலடி, வாகரை. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | பிரதான வீதி, கிரன். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 151, 153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03, ஏறாவூர். |
| 06/13/20/27 | ஒக்டோபர் 2023 | இல. 252B, 252/1, கண்டி வீதி, திருகோணமலை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# இங்கிலாந்தை முதல்முறை வீழ்த்தி இலங்கை மகளிர் வரலாற்று வெற்றி

டி20 சர்வதேச போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணியை முதல் முறை வீழ்த்திய இலங்கை வீராங்கனைகள் இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை 1–0 என சமநிலைக்கு கொண்டுவந்தனர். செல்ட்ஸ்போர்டில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி இலங்கை சுழற்பந்துக்கு முகம் கொடுக்க முடியாமல் 18 ஓவர்களில் 104 ஓட்டங்களுக்கே சுருண்டது. இலங்கையின் சுழற்பந்து வீராங்கனைகள் 8 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணிக்காக அணித் தலைவி சாமரி அத்தபத்து 31 பந்துகளில் 8 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 55 ஓட்டங்களை பெற்றார்.



இதன்மூலம் இலங்கை அணி 13.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 110 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. குறிப்பாக ஹர்ஷிதா சமரவிக்ரம கேட் க்ரொஸ் வீசிய பந்துக்கு சிக்ஸர் விளாசியே வெற்றி ஓட்டத்தை அடைந்தார். ஹர்ஷிதா ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை மகளிர் அணி இதற்கு முன்னர் இங்கிலாந்து மகளிர் அணியை பத்து முறை டி20 சர்வதேச போட்டிகளில் எதிர்கொண்ட நிலையில் அந்த போட்டிகள் அனைத்திலும் இங்கிலாந்து அணியே வெற்றியீட்டி இருந்தது. இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் இறுதி டி20 போட்டி வரும் புதன்கிழமை (6) டர்பியில் நடைபெறவுள்ளது.

## சம்பியனானது நியு ஸ்டார்

கல்நேவ தினகரன் விசேட நிருபர்



கலாவெவ டப்ளியூ. எஸ்.சீ. விளையாட்டுக் கழகம் நடாத்திய மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேகம நியு ஸ்டார் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கலாவெவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (2) நடைபெற்ற இறுதிப் போட்டியில் கலாவெவ பவர் போயிஸ் அணியை எதிர்கொண்ட நியு ஸ்டார் அணி 5 ஓவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 35 ஓட்ட வெற்றி இலக்கை 4.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து எட்டியது.

17 அணிகள் பங்கேற்ற இந்த சுற்றுப்போட்டியின் தொடர் நாயகன் விருதை பவர் பொயிஸ் அணியின் நிஹ்மத்துல்லா வென்றார். இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக நேகம நியு ஸ்டார் அணியின் சப்ரான் தெரிவு செய்யப்பட்டார்.

## இளந்தாரகை வெற்றி

ஏறாவூர் சுழற்சி நிருபர்



அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக் கழகம் நடாத்திய மர்ஹூம் எம்.ஐ.எம். இக்பால் நினைவுக் கிண்ண கால்பந்து போட்டியில் ஏறாவூர் இளந்தாரகை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

22 அணிகள் கலந்து கொண்ட தொடரின் இறுதிப் போட்டி கல்முனை சாந்தாங்கேணி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக் கழகத்துடன் மோதிய ஏறாவூர் இளந்தாரகை 5–0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது.

# இந்திய போட்டியில் மழை குறுக்கிட்டதால் பாகிஸ்தான் 'சுப்பர் போர்' சுற்றுக்கு தகுதி



கண்டி, பல்லேகல சர்வதேச அரங்கில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான ஆசிய கிண்ண குழு நிலை போட்டி மழையால் கைவிடப்பட்டதை அடுத்து பாகிஸ்தான் அணி மூன்று புள்ளிகளுடன் சுப்பர் போர் சுற்றுக்கு முதல் அணியாக முன்னேற்றம் கண்டது.

ஐந்து ஆண்டுகளின் பின் இரு அணிகளும் சந்திக்கும் முதல் ஒருநாள் போட்டியாக கடந்த சனிக்கிழமை (02) நடந்த இந்த ஆட்டத்தில் சிறிய மழை தூரல் விழுந்தபோதும் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியால் தனது இன்னிங்ஸை முழுமையாக ஆட முடிந்தது.

நாணய சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 66 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தபோதும் இஷான் கிஷன் (82) மற்றும் ஹார்திக் பாண்டியா (87) ஐந்தாவது விக்கெட்டுக்கு 138 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

இந்திய அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 266 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர்களே முழு ஆதிக்கம் செலுத்தினர். ஷஹீன் ஷா அப்ரிடி 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு நசீம் ஷா மற்றும் ஹரிஸ் ரவுப் தலா 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இந்திய இன்னிங்ஸ் முடிந்த நிலையில் வலுவடைந்த மழை போட்டியை 20 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தக் கூடிய நேரத்தில் கூட நிற்காமல் இடைவிடாது பெய்தது.

இதனால் போட்டி கைவிடப்பட்டு இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. ஏற்கனவே முதல் போட்டியில் நேபாள அணியை வீழ்த்திய பாகிஸ்தான் அணி சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறியது.

இந்திய அணி அடுத்த சுற்றுக்கு முன்னேற இதே மைதானத்தில் இன்று (04) நடைபெறும் நேபாள அணிக்கு எதிரான போட்டியில் தோல்வியை தவிர்க்க வேண்டும்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் 2013 தொடக்கம் அரசியல் பதற்றம் காரணமாக ஐ.சி.சியின் சர்வதேச போட்டித் தொடர்கள் அல்லது ஆசிய கிண்ண போட்டிகளில் மாத்திரமே ஒன்றை ஒன்று எதிர்கொள்கின்றன.

இந்நிலையில் பாகிஸ்தானின் முதல் சுப்பர் போர் போட்டி பங்களாதேஷ் அல்லது ஆப்கானிஸ்தானுடன் லாகூரில் நடைபெறவுள்ளதோடு எஞ்சிய போட்டிகள் அனைத்தும் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்திலேயே நடைபெறும். இதில் இந்தியா சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறினால் வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி மீண்டும் பாகிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புற்று நோயால் போராடிய ஹீத் ஸ்ட்ரீக் காலமானார்





புற்று நோயால் போராடி வந்த சிம்பாப்வே முன்னாள் அணித்தலைவர் ஹீத் ஸ்ட்ரீக் தனது 49ஆவது வயதில் நேற்று (03) காலமானார். அவரது மரணம் பற்றி மனைவி நடின் ஸ்ட்ரீக் பேஸ்புக்கில் பகிர்ந்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஹீத் ஸ்ட்ரீக் மரணித்ததாக தவறான செய்தி பரவிய நிலையில் அவருடன் விளையாடிய முன்னாள் வீரர் ஹென்ரி ஒலொங்கா அந்த செய்தியை சரிசெய்த நிலையிலேயே அவரது மரணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குடும்பத்தினர், அன்புக்குரியவர்கள் சூழ தனது விட்டில் அவர் மரணித்ததாக அவரது மனைவி குறிப்பிட்டுள்ளார். கடந்த மே மாதமே ஹீத் ஸ்ட்ரீக் புற்றுநோயால் பதிக்கப்பட்டதாக செய்தி வெளியானதோடு தென்னாபிரிக்காவின் முன்னணி புற்றுநோயியல் நிபுணர் ஒருவரிடம் சிகிச்சை பெற்று வந்தார்.

வேகப்பந்த வீச்சாளரான ஸ்ட்ரீக் டெஸ்ட் போட்டிகளில் 216 விக்கெட்டுகளை வீழ்த்தி சிம்பாப்வே அணிக்காக அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியவராக சாதனை படைத்துள்ளார். ஒருநாள் போட்டிகளிலும் அவர் 239 விக்கெட்டுகள் மற்றும் 2,943 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

அவர் 1993 தொடக்கம் 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தம் 65 டெஸ்ட் மற்றும் 189 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளார். தொடர்ந்து அவர் தேசிய அணியின் பயிற்சியாளராக செயற்பட்டுள்ளார். எனினும் இந்திய பிரீமியர் லீக் உட்பட டி20 லீக்குகள் தொடர்பான இரகசிய தகவல்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் அவருக்கு 2021 ஆம் ஆண்டு ஐ.சி.சி எட்டு ஆண்டுகள் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறப்பு விசாரணை பிரிவினர் சச்சித்ரவைத் தேடி வேட்டை



ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டுக்கு முகம்கொடுத்திருக்கும் கிரிக்கெட் வீரர் சச்சித்ர சேனநாயக்க, எங்கே என விளையாட்டுத் துறை அமைச்சின் சிறப்பு விசாரணை பிரிவு தேடி வருகிறது.

இலங்கை அணியின் முன்னாள் வீரர் மீது குற்றவியல் குற்றச்சாட்டு பதிவு செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்திய நிலையிலேயே அவர் தேடப்பட்டு வருகிறார்.

2020 லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்த சட்டமா அதிபர் திணைக்களம் கால அவகாசம் கோரியதை அடுத்து 38 வயதான முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சச்சித்ர மீது கொழும்பு நீதவான் நீதிமன்றம் பயணத் தடை விதித்ததோடு அவரது கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

'அவர் தலைமறைவாகி இருப்பதுபோல் தெரிகிறது' என்று சிறப்பு விசாரணை பிரிவு வட்டாரம் தெரிவித்துள்ளது. 'அவர் எங்கே இருக்கிறார் என்பதை நாம் தேடி வருகிறோம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 இன் முதலாவது லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது அதில் பங்கேற்ற இரு வீரர்களை டுபாயில் இருந்து தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடக் கோரியதாகவே சச்சித்ர மீது குற்றம்சாட்டப்படுகிறது. இது இலங்கையில் குற்றவியல் குற்றமாகும்.

இந்த குற்றச்சாட்டுகளை மறுக்கும் சேனநாயக்க தனது நற்பெயரை சீர்குலைக்கும் முயற்சி என்று குறிப்பிட்டுள்ளார். மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் அவர் 78 சர்வதேச விக்கெட்டுகளை வீழ்த்தி இருப்பதோடு ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடியிருக்கும் அவர் விக்கெட் வீழ்த்தத் தவறினார்.

## சர்வதேச செய்திகள்

# பிரான்ஸ் துருப்புகளை வெளியேற கோரி நைகர் தலைநகரில் பாரிய ஆர்ப்பாட்டம்




நைகரில் இருந்து பிரான்ஸ் தூதுவர் மற்றும் துருப்புகளை வெளியேறக் கோரி தலைநகர் நியாமியில் ஆயிரக் கணக்கானோர் பேரணி நடத்தியுள்ளனர். அந்நாட்டில் புதிதாக ஆட்சியை கைப்பற்றிய இராணுவம் முன்னாள் காலனி நாடான பிரான்ஸ் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக குற்றம்சாட்டியுள்ளது.

பிரான்ஸ் படையினர் இருக்கும் இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை (02) ஒன்று திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், பிரான்ஸ் இராணுவத்தை வெளியேறக் கோரி கோசம் எழுப்பியதோடு பதாகைகளையும் சுமந்திருந்தனர். பல சிவில் அமைப்புகளின் அழைப்பை அடுத்தே இந்த பேரணி இடம்பெற்றது.

கடந்த ஜூலை 26ஆம் திகதி ஆட்சியை கைப்பற்றிய நைகரின் இராணுவ அரசு, பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோன் இராணுவ சதிப்புரட்சி பற்றி பிரித்தாளும் சொல்லாட்சிகளை பயன்படுத்துவதாகவும் தமது முன்னாள் கலனித்துவ நாட்டுடன் நவ காலனித்துவ உறவை செயற்படுத்த முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டியது.

நாட்டில் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி மொஹமது பசூமுக்கு ஆதரவை வெளிப்படுத்தி வரும் மக்ரோன், நைகரின் புதிய ஆட்சியாளர்களை ஏற்க மறுத்து வருகிறார். பிரான்ஸ் தூதுவர் சில்வைன் இட்டே நாட்டை விட்டு வெளியேற நைகர் இராணுவ அரசு 48 மணி நேர கேடு விதித்த நிலையில் அது முடிவடைந்த நிலையிலும் தொடர்ந்தும் நாட்டில் தங்கியுள்ளார். இந்நிலையில் சுமார் 1500 பிரான்ஸ் துருப்புகள் நிலைகொண்டிருக்கும் முகாம் இருக்கும் பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதோடு அந்த முகாமுக்குள் வலுக்கட்டாயமாக நுழைவது தொடர்பிலும் எச்சரிக்கப்பட்டுள்ளது. நைகரில் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியானது 2020 தொடக்கம் மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் இடம்பெற்ற எட்டு இராணுவ சதிப்புரட்சிகளில் ஒன்றாகும். பிராந்தியம் இராணுவ ஆட்சியின் கீழ் செல்வது குறித்து சர்வதேச சக்திகள் கவலை அடைந்துள்ளன.

# பாகிஸ்தான் நகரங்களில் கடையடைப்பு போராட்டம்



பாகிஸ்தானில் வரலாறு காணாத அளவுக்கு எரிபொருள் மற்றும் வலுசக்தி விலை அதிகரித்ததற்கு எதிராக ஆயிரக்கணக்கான வர்த்தகர்கள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் கடந்த பல தசாப்தங்களாக நீடிக்கும் தவறான நிர்வாகம் மற்றும் ஸ்திரமற்ற சூழல் நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கும் நிலையில் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையை தவிர்ப்பதற்கு அந்த நாடு சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையை எட்டியுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டில் எப்போதும் இல்லாத அளவுக்கு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த சனிக்கிழமை (02) லாகூர், கராச்சி மற்றும் பெஷாவரில் பரந்த அளவில் சந்தைகள் மூடப்பட்டிருந்ததோடு, நியாயமற்ற வகையில் மின்சார கட்டணம் மற்றும் வரிகள் அதிகரிக்கப்பட்டதாக எதிர்ப்புத் தெரிவுத்து பதாகைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

"தற்போது பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு மாறியிருப்பதன் காரணமாக இந்த போராட்டத்தில் அனைவரும் பங்கேற்றனர்" என்று லாகூர் நகர வர்த்தக சங்கத் தலைவர் அஜ்மல் ஹஷ்மி ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

பாகிஸ்தான் காபந்து பிரதமர் அன்வருல் ஹக் கக்கர் தலைமையிலான அரசு, பெட்ரோல் விலையை லீட்டருக்கு ரூ.14.91 மற்றும் டீசல் விலையை லீட்டருக்கு ரூ.18.44 உயர்த்தியது. இதனால் பாகிஸ்தான் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு பெட்ரோல், டீசல் விலை முதல் முறையாக ரூ.300ஐத் தாண்டியுள்ளது.

ஏற்கனவே கடுமையாக உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டணத்தால் அவதிப்பட்டு வரும் அந்நாட்டு மக்களுக்கு இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 4ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.